அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 16-07-1993

## மாபெரும் ஊர்வலம்

இலண்டனில் மாபெரும் ஊர்வலமொன்று எதிர்வரும் 24-7-93 சனிக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு Portland Place இல் ஆரம்பித்து Trafalgar Square வரை இடம்பெறவுள்ளது. 1983 யூலை இனப்படுகொலையின் 10ம் வருடத்தை நினைவு கூர்தல், இதுவரை இப்படுகொலைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படாததை சர்வதேசச் சமூகத்திற்கு வெளிப்படுத்தும் முகமாகவும், இவ்வநீதிகளுக்கு மத்தியிலும் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள எம்மக்களை அந்நாட்டரசுகள் திருப்பியனுப்ப மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு கண்டனம் தெரிவிக்கும் முகமாகவும் இவ்வூர்வலம் ஐக்கிய தமிழர் சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது ■

# ஸ்ரீலங்கா அரசின் எல்லைக்குள் தேசிய இனப்பிரச்சினையை தீர்க்க முடியாது

## பொருளாதாரத் தடை மீண்டும் அமுலாகியது இதனை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது

சிறீலங்கா அரசினால் இலங்கைத்தீவின் தேசிய இனப்பிரச்சினைக்கு எந்தத் தீர்வையும் எடுக்க முடியாது என்பதைச் சமீபத்தில் சிறீலங்கா அரசு பொருளாதாரத் தடையைத் தளர்த்துவதாக புலிகளுக்கு வாக்குறுதி அளித்துவிட்டு, உடனடியாக அதை மீறிய சம்பவம் தெளிவாக்குகிறது.

கூட்டுப்படைகளின் தளபதி கமில்டன் வணசிங்க புலிகளுக்கு, கடித மூலம் பொருளாதாரத்தடை விதிக்கப்பட்ட ஏழு வகையான பொருட்களை மீளவும் அனுமதித்து, பொருளாதாரத்தடையை தளர்த்துவதாக அறிவித்தார். இதன் அடிப்படையில் இதனை வரவேற்பதற்காக ஐந்து யுத்தக்கைதிகளை விடுதலைப் புலிகள் விடுதலை செய்தனர்.

ஆனால் பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டுள்ளதை வர்த்தமானி அறிவித்தல் மூலம் உறுதிப்படுத்த சிறீலங்கா அரசு தவறியது. இதற்கிடை தாண்டிக்குளம் தடைமுகாம் உட்பட வவுனியா வரையுள்ள சிறீலங்கா இராணுவ நிலைகளில் உள்ள இராணுவத்தினர் தான்தோன்றித்தனமாக சிறீலங்கா அரசின் உத்தரவுக்கு கீழ்ப்படிய மறுத்து, தடைநீக்கம் செய்யப்பட்ட பொருட்களை பொதுமக்கள் கொண்டு செல்லாதவாறு தடுத்தனர். அதேவேளை இராணுவத்துள் பொருளாதாரத்தடை நீக்கத்திற்கு எதிரான அழுத்தம் வலுவடைந்தது. இராணுவத்தையே தனது ஒரே கதியாக நம்பிநிற்கும் சிறீலங்கா அரசாங்கம் தடுமாறத் தொடங்கியது. இராணுவத்தைத் தட்டிக் கேட்க வலுவில்லாமல்தான் புலிகளுக்கு அளித்த வாக்குறுதியை அது கைவிட்டது. வடக்கு நோக்கி அனுப்பப்பட்ட தடைநீக்கம் செய்யப்பட்ட பொருட்களை ஏற்றிச் சென்ற கப்பலை வடக்குக்கு செல்லவிடாது திசை திருப்பியது. அதே நேரம் யுத்த ஆயத்தங்களை மீண்டும் துரிதப்படுத்தி வருகின்றது. படைவீரர்களுக்கான பயிற்சிகளை நவீனமயப் படுத்தல், படை வீரர்களுக்கு பதவியுயர்வு அளித்து உற்சாகமூட்டல், கருத்து வேறுபாட்டில் சிக்குண்டிருந்த கூட்டுப்படைத் தளபதி கமில்டன் வணசிங்கா, சிறீலங்கா இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரட்ன ஆகியோரை ஒன்றுபடுத்தி இயங்கச் செய்தல் போன்ற இராணுவத் திட்டங்களிலேயே அதிக அக்கறை காட்டி வருகின்றது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமும், வியன்னா உலக மனித உரிமை மகாநாடும் முடியும் வரை அரசியல் தீர்வில் அக்கறை காட்டுவதுபோல் நடித்த சிறீலங்கா அரசாங்கம், மீண்டும் தனது சுயரூபத்தை வெளிப்படுத்தி இராணுவத் தீர்வை நாடி நிற்கிறது.

அதேவேளை எண்பது கோடி டொலர் கேட்ட இடத்தில் சிறீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகள் எண்பத்திநாறு கோடி டொலர்களை அளித்ததும் பிரான்ஸ், யப்பான் போன்ற நாடுகள் புதிய உதவிகளை வழங்குவதும் சிறீலங்கா அரசாங்கத்தை மேலும் உற்சாகப்படுத்தி யுத்த ஆயத்தங்களைச் செய்ய வைக்கிறது. இந்தியாவும் பின்னணியில் சில தீர்வுகளை சிறீலங்கா அரசாங்கத்தினூடாகத் திணிக்க முயல்வதாக உத்தியோக பூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நேரத்தில் கிழக்கில் குடியொப்பம் நடாத்தப் போவதாக அறிவித்த சிறீலங்கா அரசாங்கம், அதனை நடாத்துவது நடைமுறைச் சாத்தியம் இல்லை என்பதை உணர்ந்ததும் மீண்டும் இராணுவ மேலாதிக்கத்தால் வடக்கு கிழக்கை அடிமைப்படுத்த ஆயத்தமாகின்றது.

இதற்கிடையில், வடக்குக்கு பொருட்களைக் கொண்டு சென்ற கப்பலை காங்கேசன்துறைக் கடலில் வைத்து விடுதலைப் புலிகள் கொள்ளையடித்துவிட்டதாக அப்பட்டமான கட்டுக்கதை ஒன்றையும் சிறீலங்கா அரசாங்கம் இட்டுக்கட்டி உலகெங்கும் பரப்பியுள்ளது. இவ்வாறு அப்பட்டமான பொய்களைக் கூறிக் கொண்டு தமிழர் தாயகத்தின்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....


## உள்ளே....

- விருதுகள் – கேள்வி
- சிறுகதை – பலவகை சிந்தனைகள்
- 83 யூலை – நினைவு மீட்பு
- 10 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த ஆறுதல்
- சிங்கள தேசத்தை உலுக்கிய ஆசியல் படுகொலைகள்
- ஐரோப்பிய சமூக நாடுகளும் வெளிநாட்டு அகதிகள் நிலையும்


# மக்களின் பாதுகாப்பில் புலிகள் அதிக கவனம்

## கிளாலிக் கடலேரியில் திட்டமிட்ட படகுச் சேவை

சிறீலங்காப் பாதுகாப்புப் படைகள், கிளாலி கடலேரியில் கண்மூடித்தனமான தாக்குதலை நடாத்தி அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்து மகிழ்வது அனைவரும் அறிந்ததே. இதனை முறியடிக்கும் பணியில் தற்போது விடுதலைப் புலிகள் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

புலிகளின் பாதுகாப்புடன் படகுச் சேவைகளை நடாத்தும் முயற்சிகள் நடைபெற்று வந்தன. இது இப்பொழுது விஸ்தரிக்கப்பட்டு கடற்புலிகளின் பாதுகாப்புடன் திட்டமிட்ட ஒழுங்கான போக்குவரத்து ஏற்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்ட நாட்களில் படகுச் சேவை கடற்புலிகளின் துணையுடன் நடைபெற்று வருகின்றது.

படகுச் சேவைகள் இடம்பெறுகின்றபொழுது சிறீலங்காப் பாதுகாப்புப் படைகள் மக்களைத் தாக்க வருவதும், அவர்கள் கடற்புலிகளால் விரட்டியடிக்கப்படுவதும் கிளாலிக் கடலேரியில் இன்று சாதாரண நிகழ்ச்சிகளாகிவிட்டன. இவை மக்களுக்கு புதிய உற்சாகத்தையும் நம்பிக்கையையும் அளித்து வருகின்றன. ■



# யுத்தக் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம், யூலை 13)

யாழ்ப்பாணத்தில், விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் யுத்தக்கைதிகள் 14ம் திகதியில் இருந்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

மேற்படி அறிவித்தலை, சிறீலங்கா ஜனாதிபதி டி.பி.விஜயதுங்காவிற்கும், எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கும் அவர்கள் கடிதவாயிலாக அனுப்பி வைத்துள்ளனர். "எம்மை விடுதலை செய்ய அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால், எங்களவே உடல், உள ரீதியில் தளர்வுற்ற நிலையில் இருக்கும் நாம், இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் மரணமடைவோம்" எனவும் அக்கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இதற்கிடையில் தடை தளர்த்தப்பட்ட பொருட்களை வடக்குக்கு கட்டுப்படுத்தி அனுப்பினால் தம் வசமுள்ள யுத்தக் கைதிகளை விடுதலை செய்ய தயாராக இருப்பதாக, விடுதலைப் புலிகள் கடந்த வாரம் கொழும்பு திரும்பிய பெற்றோர் மூலம் அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் பொலிஸாரின் பெற்றோரும், உறவினர்களும் தாமும் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக சிறீலங்கா அரசிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். ■

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# தமிழர்களின் பாதுகாப்பு

**1983** ஆடி இனக்கொலை நடந்து பத்து ஆண்டுகள் முடிவடைகின்றன. 1956 இல் தமிழர்கள் மேல், முதற்கையை வைத்து, 1958 இல் இனக்கலவரம் என்ற போர்வையில், தமிழின அழிப்பு நாடகமொன்றை நடாத்திய சிங்கள பௌத்த பேரினவாதம் தனது வெள்ளி விழாவை 1983 இல், கோலாகலமாக இரத்தக் களரியாகக் கொண்டாடியது.

ஆனால் 1983, ஈழத்தமிழர் இன வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. 'குட்டக்குட்டக் குனிகிறவன் மடையன், அதைவிட குனியக் குனியக் குட்டுகிறவன் மடையன்' என்கிற உண்மையைத் தமிழர்கள் உணர்ந்தனர். இதனால் நிமிர்ந்து நிற்க முயன்றனர். நிராயுதபாணிகளாக நிற்பவர்களைப் பந்தாட முயல்பவர்களுக்கு, ஆயுத எதிர்ப்பை உருவாக்குவதன் மூலமே தடையை ஏற்படுத்த முடியும் என்ற யதார்த்தத்தை உணர்ந்து செயற்பட்டனர். 'பாதுகாப்பின்மையே', இனக்கொலைக்கு தமிழினம் இலக்காவதன் அடிப்படை என்பது உணரப்பட்டது.

தமிழ்த்தேசியம் உணரப்பட்டதனால், சிங்களத் தேசியத்தை அதற்கு எதிரான சக்தியாக சிங்கள பௌத்த பேரினவாதிகள் வளர்த்தெடுத்தனர். இன்னும் தெளிவாகக் கூறினால், சிங்கள பௌத்த பேரினவாதிகள் இலங்கைத் தீவின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளாதவர்கள் அல்ல. வரலாற்றை நன்கு அறிந்திருந்ததினால் தான் அவர்கள், இலங்கைத் தீவின் மீது தமிழர்களுக்கு உள்ள ஆதிபத்திய உரிமை, தொடரும் தனித்துவமான இறைமை என்பவற்றை உணர்ந்திருந்தார்கள். காலனித்துவ ஆட்சியில் உருவாக்கப்பட்ட செயற்கையான -போலியான 'ஒற்றையாட்சிக் கட்டமைப்பு' என்றோ ஒரு நாள் சிதறும் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

இதனால், அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கூடாக -இலங்கைத் தீவு படிப்படியாக சுதந்திரத்தை நோக்கி நகரத் தொடங்கிய காலம் முதல் ஒவ்வொரு அடியிலும் தமிழர்களின் பிரதிநிதித்துவ விகிதாசாரத்தைக் குறைப்பதற்கான நரித்தந்திர வேலைகளை, பிரித்தானியரின் துணையுடன் காலத்துக்குக் காலம் நிறைவேற்றி வந்தனர். தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தாத தமிழ் மேல்மட்ட வர்க்கத்தினர், தாம் இழப்புக்களைச் சந்தித்து தமது வருங்காலச் சந்ததிக்குப் பொற்காலத்தை உருவாக்கும் எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை. மாறாக, காலத்துக்குக் காலம் ஏற்படும் அழுத்தங்களை மகஜர்கள், பேச்சுவார்த்தைகள், சாத்வீக எதிர்ப்புக்கள் போன்றவற்றால் குறைக்க முயன்றனர். சிங்கள பௌத்த பேரினவாதமோ, தமிழ் அரசியல் கட்சிகளின் இந்தப் போக்கை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, சில திசைதிருப்பல்களைச் செய்து கடைசியில் இலங்கைத் தீவின் ஆட்சிப் பொறுப்பை தன்கைக்கு மாற்றிக் கொண்டது.

சுதந்திரத்தின் பின்னர், சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழர்களை நசுக்கத் தொடங்கியது. தமிழர் தாயக முழுமைப்பாட்டைச் சிதைக்கும் வகையில் தமிழர் தாயகத்தில், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நடாத்தி தமிழர்களின் சனத்தொகைச் செறிவை மாற்றியமைக்கத் தொடங்கியது. அத்துடன் தமிழரின் மீன் பிடி வளம், விவசாய வளம் என்பனவும் சிங்களக் குடியேற்றவாசிகளால் சுரண்டப்பட்டு இயல்பாகவே இனப்பகைமை தமிழர் -சிங்களவரிடையே தோற்றம் பெறச் செய்யப்பட்டது.

தமிழரது பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் வகையில், தமிழ்ப் பிரதேசத்தினைப் புறக்கணித்து தொழிற்சாலைகள், தொழில் முயற்சிகள் அனைத்தையும் சிங்களப் பிரதேசங்களை நோக்கி நகர்த்தியது. இதனால் தொழில் காரணிகளால் தமிழர்கள், சிங்களப் பிரதேசங்களை நோக்கி நகர்ந்து வாழவேண்டிய இக்கட்டான நிலை உருவாகியது. தமிழர்களின் பொருளாதார முயற்சிக்கு கல்வி அடிப்படையானது. இதனை நசுக்கும் முகமாக தரப்படுத்தலைக் கொண்டு வந்து தமிழர் கல்வியை பாழடித்தனர். சிங்களம் மட்டும் சட்டத்தால், மொழித்திணிப்பு அரங்கேற்றப்பட்டது. படிப்படியாக முழுமையான கிட்லரிசம் இலங்கைத் தீவில் நிலைநாட்டப்பட்டது. இத்தனையையும் செய்ததன் பின்னர் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தால் தமிழர்களை, சிங்களவர்கள் நாகரீகமான முறையில் அடிமைகளாக மாற்றினர். சிறீலங்கா அரசு தமிழர் மீது இராணுவப் பலாத்காரத்தை பிரயோகித்து தமிழர்களது சுதந்திர உணர்வுகளுக்கு தடை போடவும் முனைந்தது. இதன் முதற்படியாக பொலிஸ் படை, பிரகடனப்படுத்தப்படாத இராணுவமாக மாற்றப்பட்டது. இக்கட்டமே 1983 ஆம் ஆண்டு இனக்கொலைக்கு பின்னணியாக அமைந்த பகைப்புலம், அரச பயங்கரவாதமாக வெடித்தெழ காரணமாயிற்று. அதன் பின்னர் 1983 முதல் இன்று வரை தமிழர்கள் "பாதுகாப்பற்ற நிலையில்" அரச பயங்கரவாதத்திற்குப் பலிக்கடாக்கப்பட்டு வருகின்றனர். தீர்க்க தரிசனம் மிகுந்த வே.பிரபாகரனைத் தலைவராகக் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள், 1972 முதலே இந்த அரச பயங்கரவாதத்தையும் அது ஏற்படுத்தக்கூடிய பின்விளைவுகளையும் உணர்ந்து 'தமிழர்களின் பாதுகாப்புக்கு' ஆன ஆயுத எதிர்ப்பை உருவாக்கி, இன்று தமிழ்த் தேசியத்தின், தமிழர்கள் அனைவரினதும் உயிர்ப் பாதுகாவலர்களாக மிளிர்கின்றனர்.

கொள்கையில் உறுதி, தன்னலமற்ற தியாகம், மதிநுட்பம் இவற்றால் தான் 1983கள் மீண்டும் உருவாக விடாது தடுக்கலாம். நம் மண் மீட்கப்பட்டாலே நாம் உயிர் வாழலாம். 1983 பற்றி எத்தனையோ நாடுகள், சர்வதேச பிரமுகர்கள், உலகப் பத்திரிகையாளர்கள் கண்ணீர் வடித்தனர் -கண்டித்தனர் -ஆர்ப்பரித்தனர். ஆனால் அவை காலத்தோடு தேய்ந்துவிட்டன. 1983 ல் நடந்த இன அழிப்பு புதிய புதிய வடிவங்களில், புதிய புதிய தந்திரங்களுக்கூடாக சிங்கள பௌத்த பேரினவாதிகளால் காலத்துக்குக் காலம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. எமது மாவீரர்களின் உயிர்த் தியாகங்கள்! எமது போராளிகளின் உறுதி! எமது தலைவரின் கூர்மையான வழிகாட்டல்! எமது மக்களின் தியாகங்கள்! என்பனவே எமது இனத்தைப் பாதுகாக்கக் கூடிய ஆயுதங்களாகும். ஆகவே எமது பாதுகாப்பை நாமே உருவாக்க வேண்டும். அதற்கு நாம் ஒத்துழைத்து, எமது போராட்டத்தின் தேவையை உலகுக்கு உணர்த்தினால் மட்டுமே இனிமேல் 1983 கள் உருவாகாது தடுக்கலாம். ■

# தமிழ் புத்திஜீவிகளை அழிக்கும் புதிய திட்டம்

சிறீலங்கா அரசாங்கம், மட்டக்களப்பு -பொலநறுவை எல்லைக் கிராமங்களில் தமிழ்ப்புத்திஜீவிகளை அழிக்கும் புதிய திட்டமொன்றை இரகசியமான முறையில் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதன்படி எல்லைக் கிராமங்களில் வாழ்ந்து வரும் டாக்டர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் இவ்விதம் கடத்தப்பட்டு வருகின்றனர்.

மர்மத்துக்கிடமான முறையில் நடைபெறும் இவ் ஆட்கடத்தல் நடவடிக்கைகள் கடந்தவாரம் அதிகரித்ததைத் தொடர்ந்து, எல்லைக் கிராமத்து தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சம் நிலவுகிறது. கடந்த மூன்று மாதங்களில் இருநூறு பேர்வரை கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளதாக கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. வீடுகளில் வைத்தும் வேலைக்குச் செல்லும் வழியிலும் இவர்கள் கடத்தப்படுகின்றனர். குடும்பத்தினர் சென்று விசாரித்தால், தாங்கள் அழைத்துச் செல்லவில்லையென இராணுவம் கைவிரிப்பதாகவும் அப்பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது. அச்செய்தியின்படி, மன்னம்பிட்டி அரசாங்க வைத்தியசாலை வைத்தியர் சிவராஜா, 9 பிள்ளைகளின் தந்தையும் பாடசாலை அதிபருமான 53 வயதுடைய கணபதி, 45 வயதுடைய அதிபர் ஆனந்தராஜா, 27 வயதுடைய ஆசிரியர் திருச்செல்வம், 28 வயதுடைய தங்கராசா வரிசையில் கடந்த வாரம் ஆசிரியர் பத்மநாதன், செல்வந்தரான சோதிநாதன் ஆகியோரும் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

கிழக்கு எல்லைக் கிராமங்களில் நடைபெறும் இத்தகைய ஆட்கடத்தல் குறித்து, சிறீலங்கா அரசை வன்மையாகக் கண்டித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம், அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. கிழக்கில் நடக்கும் ஆட்கடத்தல், தமிழ் மக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் ஒரு அம்சமாக இருக்கின்றது எனவும் இவை 1988, 1989 ஆம் ஆண்டுகளில் தீவின் தென்பகுதிகளில் ஆயுதப் படைகளாலும், கொலைக் குழுக்களினாலும் பல்லாயிரக்கணக்கான சிங்கள மக்கள் காணாமல் போனதை நினைவூட்டுவதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மோசமான மனித உரிமை மீறலானது மனித உரிமை பாதுகாப்பு விடயத்தில், முன்னேறி வருவதாக சிறீலங்கா அரசு உலகுக்கு காட்டிவரும் தோற்றத்திற்கு முரணானது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ■

# தமிழ்மக்கள் ஒரு அரசைக்கோருவது தவறல்ல

■ **சிங்களப் பத்திரிகையாளர் கருத்து**

"இந்த நாட்டை ஆளுகின்ற அரசு தமிழ் பேசுகிறவர்களை பிரதிநிதித்துவப் படுத்தவில்லை என்று உணரப்பட்ட பின்னரே, தமிழ் மக்கள் தமக்கான ஒரு அரசைப்பற்றிச் சிந்தித்தார்கள். அது தவறு அல்ல. ஒரு அரசு தேவை என்று வந்ததும் அதனை நிறுவுவதற்கான ஒரு நிலப்பகுதி தேவை என்பதும் அடுத்த கட்டத் தேவையாகிவிடுகின்றது. அந்த வகையில் தமிழ் மக்கள் போராடப் புறப்பட்டதும் சரியென்றே நான் கருதுகின்றேன்." இவ்வாறு 'ராவய' என்ற சிங்களப் பத்திரிகையின் ஆசிரியரான விக்ரர் ஐவன் கருத்து வெளியிட்டுள்ளார்.

"இன்று வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்களுக்கு ஒவ்வொரு நாளும் வாழ்வா? சாவா? என்ற போராட்டமே பிரதான பிரச்சினையாக இருக்கின்றது. ஒரு சிறு குண்டு வெடிப்பு மிகப் பெரிய அதிர்வலைகளைக் கொழும்பில் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்ற வேளையில் 300 கிலோ பாரமுள்ள குண்டுகள் 3000க்கும் மேற்பட்ட தொகையில் இதே நாட்டின் இன்னொரு பகுதியில் கொட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழர்களுக்கு அவர்கள் வாழும் [illegible] இன்று எந்த வித உயிர் பாதுகாப்புமற்ற நிலை உருவாகியிருக்கிறது.

சிறீலங்கா அரசால் திட்டமிட்டு வடக்கு -கிழக்கில் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் தமிழ் மக்களைப் பாதித்துள்ள மற்றொரு பாரதூரமான விடயம்." எனவும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். ■

# கரும்புலிகள் நாள் தமிழீழத்தில் கொண்டாடப்பட்டது

தமிழீழத் தேசியத் தினங்களில் ஒன்றான 'கரும்புலிகள் நாள்', கடந்த 5ம் திகதி தமிழீழமெங்கும் உணர்வுபூர்வமாகக் கொண்டாடப்பட்டுள்ளது. கரும்புலிகள் நாளையொட்டி தமிழீழப் பகுதியெங்கும் அஞ்சலிக் கூட்டங்களும், பேரணிகளும் நடாத்தப்பட்டுள்ளன. பாடசாலைகள், மற்றும் அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் இந்நாளில் இயங்கவில்லை. பேரணிகள், கொடியேற்ற வைபவங்களில் பெருந்தொகையான மக்களும், விடுதலைப் புலிவீரர்களும் கலந்து கொண்டதாக அறியப்படுகின்றது.

1987 ஆம் ஆண்டு ஆடி மாதம் 5ம் திகதி, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன் முதலாக கப்டன் மில்லரால் கரும்புலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. 1987 இல் 'லிபரேசன் ஒப்பரேசன்' என்ற இராணுவ நடவடிக்கை மூலம், வடமராட்சியின் ஒருபகுதியை ஆக்கிரமித்து, நிலைகொண்ட சிறீலங்கா இராணுவத்தின் மீது, நெல்லியடியில் மேற்கொள்ளப்பட்ட இக்கரும்புலித் தாக்குதலில் முதற் கரும்புலி கப்டன் மில்லர் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார். இத்தாக்குதல் சிறீலங்காப் படையினர் மத்தியில் பெரும் உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தியதோடு, சிறீலங்கா அரசை பெரும் அச்சத்துக்கும் உள்ளாக்கியது. அதேவேளை தமிழீழ மக்கள் மத்தியில் பெரும் நம்பிக்கையினையும் உறுதியினையும் ஏற்படுத்தியது. தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரத்தையும் தியாகத்தையும் முழுஉலகுக்கும் எடுத்துக் காட்டியது. தன்னுயிரைக் கொடுத்தே இத் தாக்குதலை நிகழ்த்திய மாவீரன் கப்டன் மில்லரின் நினைவு நாளிலேயே, இக்கரும்புலிகள் நாள் கொண்டாடப்பட்டு வருகின்றது. ■

# தமிழக அரசு சர்வதேச நியதிகளை மீறி வருகின்றது

ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு இலங்கைத் தமிழ் அகதிகள் விடயத்தில் சர்வதேச நியதிகளை மீறி வருகின்றது. தமிழ் அகதிகளது முகாம்களுக்கு மருத்துவம், உணவு, உடை போன்ற உதவிகளை வழங்கிவரும் தொண்டர் நிறுவனங்களை தடைசெய்யும் முயற்சியில் ஜெயலலிதா இறங்கியுள்ளார். தமிழ் அகதிகளுக்கு உதவுவதைத் தடைசெய்துள்ளதாக தமிழக அரசு பிறப்பித்துள்ள இவ் உத்தரவு, உலகெங்கும் உள்ள அகதிகள் சேவை நிறுவனங்களுக்கு ஆத்திரத்தை ஊட்டியுள்ளது. மனிதாபிமானமற்ற இச்செயலைக் கண்டித்து 'ஸிறின்டிமன் எயிட்' போன்ற பல சர்வதேச நிறுவனங்கள் தமிழக அரசுக்கு மகஜர்கள் அனுப்பியுள்ளன. ■



# யாழ் மாவட்ட வைத்தியசாலையில் 96720 பேர் விடுதியில் தங்கி சிகிச்சை

கடந்த ஆண்டில் 96720 நோயாளர், யாழ் மாவட்ட வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களில் 1240 பேர் மரணமடைந்துள்ளனர். மற்றும் 10 ஆயிரத்து 62 பேர் மகப் பேற்றுக்காகவும், 6078 பேர் காயங்களுக்குச் சிகிச்சை பெறுவதற்காகவும் சிகிச்சை பெற்றுள்ளனர். ஆஸ்மா நோயினால் 5780 பேரும், அறிகுறிகள் காணப்படாத நோய்களினால் 4507 பேரும், சரும இழைய நோயின் காரணமாக 3933 பேரும், மலேரியாவினால் 3367 பேரும், எலும்பு முறிவினால் 3367 பேரும், நுரையீரல் தொடர்பான நோய்களினால் 2776 பேரும், குடல் வருத்தத்தினால் 2724 பேரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் அடங்குவர்.

இதேவேளை நோய்களின் காரணமாக 'மரணமடைந்தவர்களில் ஆகக் கூடுதலானோர் செப்டீமியா (குருதி அழுகல்) நோயினாலேயே மரணமடைந்துள்ளனர். மற்றும் இருதய நோயினால் 94 பேர் மரணமடைந்துள்ளனர். மந்த போசாக்கு உள்ள குழந்தைகள் 87, நுரையீரல் வருத்தத்தினால் 81, குடல் வருத்தத்தினால் 78, மூளை இரத்தக் கசிவினால் 53, மூளைக் காய்ச்சலினால் 53, பிறப்பின்போது மூச்சுத் திணறலினால் 39, சமிபாட்டுத் தொகுதியில் ஏற்பட்ட நோயினால் 36 பேர் மரணமடைந்ததாக அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டை விட 1992 இல் பல்வேறு நோய்களினாலும் மரணமடைந்தோரின் தொகை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் பொதுவாக குருதி அழுகல் நோயினால் 1991 இல் 191 பேரே இறந்துள்ளனர். ஆனால் 1992 இல் 248 பேர் மரணமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக வைத்தியசாலை உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், மருந்துகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இம் மரண அதிகரிப்புக்குக் காரணம் எனத் தெரிவித்தார்.

சில நோய்களின் மரண வீதங்கள் குறைவடைந்துள்ள போதும் ஒப்பீட்டு ரீதியாக நோக்கும் போது நோய்களின் அதிகரிப்பினால் மரணவீதங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

## மனித உரிமை மீறப்பட்டால் சர்வதேச தலையீடு அவசியம்

### - ஐ. நா. செயலாளர்

"அரசுகள் தான் மனித உரிமைகளின் சிறந்த உத்தரவாதியாக இருக்க வேண்டும் இந்தப் பணியை செவ்வனே செய்ய லாயக்கற்றவையாக அரசுகள் இருக்கும்போது சர்வதேச நடவடிக்கை என்ற விவகாரம் கிளப்பப்பட வேண்டும்" என்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பூட்டர்ஸ்காலி தெரிவித்தார்.

வியன்னாவில் மனித உரிமைகள் தொடர்பான ஐ. நா. உலக மகாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோது அவர் மேலும் கூறுகையில்; எதேச்சாதிகார அரசுகளினால் பயன்படுத்தப்படும் 'உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை' என்ற மூடு திரைப் பதத்தை நிராகரித்ததுடன் உலகளாவிய ஜனநாயகத்துக்கான அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அரசுகள் மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கின்ற நிலையிலிருந்து மக்களைக் கொடுமைப்படுத்துபவையாக மாறும்போது சர்வதேச நடவடிக்கை என்ற பிரச்சினை எழும்பத்தான் செய்யும். இது எதுவிதத்திலும் சமகால சுயாதிபத்தியத்தை பாதிக்கப் போவதில்லை என்று குறிப்பிட்ட செயலாளர் நாயகம் மனித உரிமைகளை மீறும் நாடுகள் தொடர்ந்தும் இச் செயல்களில் ஈடுபடாதிருப்பதை எவ்வாறு தடுப்பது என்பது பற்றி விளக்கவில்லை.

அடிப்படை மனித உரிமைகள் தேசிய எல்லைகளுக்கு அப்பால் வியாபிப்பவை. மனித குலம் முழுவதினதும் மதிப்பு மிக்க பொது அம்சமே மனித உரிமைகள் என்று தெரிவித்ததுடன், மனித உரிமைகளை மீறும் நாடுகளைக் கண்டிப்பதற்காக புதிய கருவிக்கு உதாரணமாக முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கென நியமிக்கப்பட்ட போர்க் குற்ற விசாரணை மன்றை எடுத்துக் காட்டினார்.

இந்த மகாநாட்டிலே 100க்கும் அதிகமான நாடுகள் பங்குபற்றின. கடந்த 25 வருடங்களில் மனித உரிமைகள் தொடர்பாக கூட்டப்பட்ட சர்வதேச மகாநாடுகளில் இதுவே மிகப்பெரியது. ■

## வடக்கு - கிழக்கு இணைப்பு தமிழ் மக்கள் வற்புறுத்து

வடக்கு - கிழக்கு இணைப்பே கிழக்கு மாகாண மக்களுக்கு விமோசனம் அளிக்கும் என்பதை, மட்டக்களப்பு மாவட்ட மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். இணைப்பைத் தவிர வேறு எந்த வழியும் தமிழரின் அபிலாசைகளை பூர்த்தி செய்ய மாட்டாது என மட்டக்களப்பு சமாதானக் குழுவினர், மட்டு நகர் சென்ற சர்வதேச சமாதானக்குழுவிடம் எடுத்துக் கூறினர். மட்டக்களப்பு கத்தோலிக்க கழக மண்டபத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கு மக்களிடையே கடந்த கால அனுபவங்கள் அவர்களது மனநிலைகளில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்திவிட்டது. இருமாகாணங்களின் இணைப்பே தமக்கு நன்மையாக இருக்கும் என இரு மாகாண மக்களும் உணர்ந்துள்ளனர் என மட்டக்களப்பு சமாதானக்குழுத் தலைவர் அன்ரன் மார்ட்டின், சர்வதேச சமாதானக்குழுவிடம் எடுத்துக் கூறினார்.

சர்வதேச சமாதானக்குழுவினர் தாம் வடபகுதியில் விஜயம் செய்தபோது கண்டது, அறிந்தது குறித்து இச்சந்திப்பின்போது விபரித்தனர். ■

## வாழைச் சேனை பகுதியில் 500 படையினர் தேடுதல்

■ 2000 பேர் முகமூடிகள் முன் நிறுத்தம்

வாழைச்சேனையை அண்டியுள்ள பல கிராமங்கள் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்பட்டது. தேடுதலின்போது முகமூடி அணிந்த 4 பெண்கள் உட்பட 25 பேர் படையினரால் கூட்டி வரப்பட்டிருந்தனர்.

தேடுதலின்போது ஏழு பேர் கைது செய்யப்பட்டு முகாம் கொண்டுசெல்லப்பட்டனர். பேத்தாளை, கண்ணன்கிராமம், கண்ணகிபுரம், பண்டிமடு, கல்மடு, கல்குடா, பட்டியச்சேனை, பாசிக்குடா, கருஞ்சேரி போன்ற கிராமங்கள் அதிகாலை 3 மணிக்கே இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டது. 12 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வாழைச்சேனை மீன்பிடித்துறைமுகக் கட்டடத்திற்கு அழைத்து வரப்பட்டு முகமூடிகள் முன் நிறுத்தப்பட்டனர்.

பாசிக்குடா, கல்குடா போன்ற கிராமங்களில் உள்ள மீனவர்களும் தொழிலுக்குச் செல்லும் வழியில் கைது செய்யப்பட்டு வலை, அத்தாங்கு, ஆகியவற்றுடன் அடையாளம் காணப்படுவதற்காக முகமூடிகள் முன் நிறுத்தப்பட்டனர். தேடுதல் பிற்பகல் 2 மணிவரை நீடித்தது. 2000 பேர் படையினரால் முகமூடிகள் முன் அழைத்து வரப்பட்டதாகத் தெரியவருகிறது. 500 க்கும் மேற்பட்ட படையினர் தேடுதலில் பங்குபற்றினர். ■

## விடுதலைப் புலிகள் ஆற்றலும் பலமும் கொண்டவர்கள்

■ விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதி தகவல்

"விடுதலைப் புலிகள் ஒரு அரசாங்கத்தை நிர்வாகிக்கக் கூடிய ஆற்றலும் திறமையும் கொண்டவர்கள். சிறீலங்கா அரசை விட அதிக பலம் கொண்டவர்கள்." இவ்வாறு விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதியான விஜயக்கோன் பண்டார என்பவர் பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

"எனது மூன்று வருட கால அனுபவத்தில் புலிகளின் விடுதலை புரிந்துகொண்டேன். இவர்களது போர் வீரத்தை சிறீலங்கா அரசினால் செயலிழக்கச் செய்ய முடியாது. இவர்கள் சொன்னதையே செய்வார்கள், செய்வதையே சொல்வார்கள்." எனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். ■

## அங்கிலிக்கன் ஆயருக்கு வெளிநாட்டவர்கள் ஆதரவு

வடக்கு - கிழக்கு யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த முயன்றுவரும் அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் கென்னத் பெர்னாண்டோவின் முயற்சிக்கு, பல வெளிநாட்டு தூதுவர்களும் ஒத்துழைப்புத் தர முன்வந்துள்ளதாக ஆயருக்கு நெருங்கிய கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த மாதம் ஆயர் அதி வணக்கத்துக்குரிய கென்னத் பெர்னாண்டோ பல வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து மேற்படி விடயம் குறித்து பல மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார் எனவும், அப்பொழுது இம் முயற்சியை வரவேற்ற மேற்கு நாடுகளைச் சேர்ந்த பல வெளிநாட்டுத் தூதுவர்களும் அவரது முயற்சிக்கு முழுஒத்துழைப்புத் தருவதென உறுதியளித்தார்கள் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

வடக்கு கிழக்குப் பகுதியில் யுத்தம் நிறுத்தப்பட்டு நிரந்தர சமாதான சூழ்நிலை ஏற்பட்டால், யுத்தத்தினால் சிதைந்துபோயுள்ள இப்பகுதிகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவி செய்யத் தயாராக இருப்பதாக உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளதாகவும்,

திரு. பிரேமதாசா கொலை செய்யப்பட்டதையடுத்து உருவாகியிருக்கும் அரசியல் சூழ்நிலையிலும் அங்கிலிக்கன் ஆயரின் முயற்சியைத் தொடர்ந்து மேற்கொள்ளும்படியும் இத்தூதுவர்கள் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ■

## நிதியுதவி வழங்கும் நாடுகள் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணுமாறு சிறீலங்காவை நெருக்க வேண்டும்

"நிதியுதவி வழங்கும் நாடுகள் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியையும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியையும் இனப்பிரச்சினையை யதார்த்தமான முறையில் தீர்த்து வைப்பதற்கான தமது யோசனைகளை முன்வைக்கும்படி நெருக்க வேண்டும். இதன் பின் சிறீலங்கா அரசு ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் இனப்பிரச்சினையை தீர்த்துவைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட வேண்டும்" இவ்வாறு இந்தியானா -கென்தக்கி மாநாட்டின் தலைவர் Rev. Paul F. John அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

சிறீலங்காவிற்கும், தமிழீழத்திற்கும் அண்மையில் மேற்கொண்ட விஜயத்தை முடித்துக்கொண்டு இவர் அமெரிக்கா திரும்பியுள்ளார். மூன்று வாரம் நீடித்த சுற்றுப் பயணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை, திருக்கோவில், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் சென்று பொதுமக்கள், சமய -சமூகத் தலைவர்கள், புலிகள் ஆகியோரை நேரில் சந்தித்து உரையாடினார்.

மட்டக்களப்பில் 8000 அகதிகளும், 1,33,000 இடம்பெயர்ந்தோரும், ஆயிரக்கணக்கான விதவைகள், அநாதைப் பிள்ளைகள் இருப்பதாக Rev. John குறிப்பிட்டுள்ளார். இதேமாதிரி 2,50,000 அகதிகளும், 2,65,894 இடம்பெயர்ந்தோரும் இருப்பதாக யாழ் அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் மூலம் அறிந்து கொண்டதாகத் தெரிவித்தார்.

கிளிநொச்சியிலிருந்து கிளாலியை படகில் வைகாசி 1ம் நாள் கடந்தபோது சிறீலங்கா கடற்படை துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அப்போது தனது படகுக்கு பின்னால் வந்த படகில் பயணம் செய்த நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் தனது அறிக்கையில் குறிப்பிடுகிறார்.

புலிகளுடன் பேசி இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்கக் கூடிய அரசியல் பின்னணிப் பலம் இன்றைய ஜனாதிபதி விஜயதுங்கவிற்கு இருக்கிறதென யாரும் நம்பத் தயாராயில்லை எனவும் தெரிவித்தார். ■

## யாழ் மாவட்டத்தில் 3 மாதத்தில் 84 சிசுக்கள் மரணம்

யாழ் மாவட்டத்தில் இந்த ஆண்டு முதல் காலாண்டுப் பகுதியில் சிசு மரணங்கள் அதிகரித்துள்ளதாக புள்ளி விபரங்களில் இருந்து தெரியவருகிறது. தாய்மாருக்குப் போதிய போசாக்கு உணவு கிடைக்காமையே இவ்வாறான அதிகரிப்புக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை குருதி அழுகல் நோயினால் மூன்று சிறுவர்கள் இக்காலப் பகுதியில் மரணம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ■

# பிரேமதாசாவின் உண்மை முகம்

## ❋ 1580 நாட்கள் ஆட்சியில் ஒரு இலட்சம் மக்கள் கொல்லப்பட்டனர்

பிரேமதாசா மக்கள் தலைவர். உண்மையான பௌத்தர். சமாதானத்தில் நாட்டமுள்ளவர். ஏழை மக்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்காக உழைத்தவர். என்றெல்லாம் கூறப்படுகின்றது. இதைப் பலரும் நம்பத்தான் செய்கின்றார்கள்.

பிரேமதாசாவை எம் நேரடி பட்டறிவின் மூலம் அடையாளம் காண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கம். இது முழுமையாக அமையாது எனினும் ஓரளவு சரியாக அடையாளம் காண உதவும் என நம்புகிறேன்.

நாம் சிறீலங்கா அரசோடு பேசிய காலம், பிரேமதாசா எம்மை 'கம்உதாவ' பார்ப்பதற்காக மகியங்கனைக்கு அழைத்திருந்தார்.

மிகவும் பின்தங்கிய பகுதி அது. அங்கு வழமைபோல் வீடுகள், மருத்துவமனை, பாடசாலை, தபாற்கந்தோர் என எல்லாமே புதிதாக அமைக்கப்பட்டிருந்தன.

ஆயிரக்கணக்கில் மக்கள் 'கம்உதாவ' நிகழ்ச்சிகளைப் பார்க்க வந்தவண்ணம் இருந்தனர்.

"கொழும்பு -7 இல் இருப்பவர்களுக்கு இம்மக்களைப்பற்றி என்ன தெரியும்? இங்கு மின்சாரம் இல்லை. மருத்துவமனை இல்லை. பாடசாலை இல்லை. பலரிடம் வானொலிப் பெட்டி கூடக் கிடையாது. எந்த வசதியுமே இல்லை. இந்த மக்களைப் பற்றி அவர்களுக்குப் புரியாது" எனப் பிரேமதாசா எமக்கு விளக்கினார்.

**இயல்பாக உயர்குழாத்தின் மீது அவருக்கிருந்த வெறுப்பை வெளிப்படுத்தினார்.**

"மகியங்கனைக்கு புத்தர் ஒரு முறை வந்திருந்தார்" என, புத்தரின் வருகை பற்றிய கதையைக் கூறினார். பழைய மரபுக் கதைகள் உண்மையற்றவை என்பது பிரேமதாசாவுக்குத் தெரியாமல் இருக்காது.

**பழைய மரபுக் கதைகளை அப்படியே ஏற்பதன்மூலம் அவர் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கும் சிங்கள மேலாதிக்க உணர்வை தன்னை அறியாமலேயே வெளிப்படுத்தினார்.**

"இங்குள்ள மக்கள் அமைதியை விரும்புகின்றார்கள். வடக்கு உங்களுடையதுதான். கிழக்குத்தான் சிக்கல். நாம் சமாதானமாக இருந்தால் அடுத்த தேர்தலில் எம்மை யாரும் அசைக்க முடியாது" என்ற கருத்துப்படப் பலதடவை கூறினார்.

**அவருடைய மிகப்பெரிய குறிக்கோளே தேர்தலில் வெல்வதுதான் என்பதை, சொல்லாமல் சொல்லிக்கொண்டிருந்தார்.**

தனிப்பட்ட முறையில் நேரடியாகப் பிரேமதாசாவின் மீது அழுத்தம் போடப்பட்டால் எதிர்விளைவுகளை ஆராயாமல் அவ்வழுத்தத்தை எதிர்க்கும் பண்பு அவரிடம் இருந்தது.

ஆசியாவுக்கான அமெரிக்கப் பிரதிநிதி 'சோலக' பிரேமதாசாவிடம், இஸ்ரேல் பிரதிநிதிகளை இலங்கைத் தீவில் இருந்து வெளியேற்றினால் அமெரிக்க உதவிகள் கிடைக்காமல் போகலாம் என மறைமுகமாக மிரட்டியபோது, "எமக்கு அமெரிக்க உதவிகள் தேவையில்லை" என அவருக்கு தான் கூறியதாக பிரேமதாசா எம்மிடம் ஒருமுறை எமது சந்திப்பின்போது கூறினார்.

அதேபோல் பிரித்தானியத் தூதுவர் 'கிலாட் சுரோன்' பிரேமதாசாவின் மீது மனித உரிமைகள், தேர்தல் சீர்கேடு என அழுத்தம் போட முயன்றபோது, நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார்.

இச்செயல்கள் பிரேமதாசா தான் செய்ய நினைக்கும் செயல்களுக்குக் குறுக்கே வரும் மேற்குலக அழுத்தங்கள் தார்மீகங்களுக்கு எத்தகைய மதிப்பளிப்பார் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

பிரேமதாசா எளிமையானவர், மிகவும் பண்புள்ளவர், மிகுந்த கட்டுப்பாடு உள்ளவர், கடுமையான உழைப்பாளி என்று கூறப்படுவதில் உண்மையில்லாமலில்லை. இங்கே தனிமனிதரான பிரேமதாசாவுக்கும் ஆட்சியில் ஜனாதிபதியாக இருக்கும் பிரேமதாசாவுக்கும் இருக்கும் வேறுபாட்டை, நாம் புரிந்து கொள்ளல் வேண்டும்.

தனிப்பட்ட முறையில் பிரேமதாசா எளிமையானவரும் மிகுந்த பண்பாளருமே என்பதை மறுக்க விரும்பவில்லை.

**பிரேமதாசாவுக்கு உயர் குழாத்தின்மேல் வெறுப்பிருந்தது. ஆனால் அவர்கள் ஆட்சி முறையின் மேல் பெரும் விருப்பிருந்தது.**

**இதுதான் அடிப்படை முரண்பாடு.**

உயர்குழாத்தை ஆட்டம் காணச் செய்ய பாமரமக்களின் பலம் அவருக்குத் தேவைப்பட்டது.

எனவே அவர்களுக்காக உழைப்பவர் என்ற எண்ணத்தை ஏற்படுத்தினார்.

சிலவேளைகளில் அவர்களுக்காக உழைக்க வேண்டும் என எண்ணியிருந்தாலும் கூட, தான் செயற்படுத்தும் திட்டங்கள் அவர்களுடைய வாழ்க்கை முறையை மாற்றாது என்பது பிரேமதாசாவுக்குத் தெரியாததல்ல.

அவரைப் பொறுத்தவரை தமது ஆட்சிக்காலம் முடியும்வரை தாம் பலமாக இருப்பதே போதுமானதாக இருந்தது.

உண்மையில் பாமர மக்களின் தலைவராகப் பிரேமதாசா இருந்திருந்தால், உயர்குழாத்தின் ஆட்சி அதிகாரங்களை உடைத்தெறிந்திருக்க வேண்டும்.

அடிப்படை மாற்றத்தை விரும்பி நின்றது மக்கள் விடுதலை முன்னணி. அதன் தலைமை சரியான முறையில் நடக்கவில்லை என்றபோதும் அதனோடு இணைந்து நின்றவர்கள், இத்தீவில் மாபெரும் புரட்சிகர மாற்றத்தை வேண்டி நின்றனர்.

இங்கே உயர்குழாத்தின் ஆட்சிக் கரங்களைப் பலப்படுத்த சாதாரண மக்களின் உரிமைக்குரலை அழித்தவர்களில் முதன்மையானவர் பிரேமதாசா என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

தான் ஆட்சிக்கு வரும்வரை அவர்கள் குறித்து மென்போக்கை கடைப்பிடித்த பிரேமதாசா, தன் ஆட்சிக்கு அவர்களால் ஆபத்து என்றதும் அவர்களை ஈவிரக்கம் இன்றி அழித்தொழித்தார்.

பிரேமதாசாவின் செயற்பாட்டுக்குக் குறுக்கே மேலை நாட்டினரின் அழுத்தங்கள் பயன்தராது என்பதை முன்பே பார்த்தோம்.

தமது தலைவர் ஆட்சியில் எல்லாம் மாறப்போகின்றது எனப் பல மக்கள் நம்பினர். அவர்கள் நம்பிக்கொண்டிருக்கும் போதே அவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த எழுந்த புரட்சிகரச் சக்திகள் பெரியளவில் நசுக்கப்பட்டன.




**1991 இல் இலண்டனுக்கு பிரேமதாசா வந்தபோது எதிர்ப்புக் காட்டிய தமிழ்மக்கள்**

பிரேமதாசாவை நம்பிய மக்களில் 60,000 இற்கும் மேற்பட்டோர் அவர் ஆட்சிக் காலத்தில் கொல்லப்பட்டனர்.

**முடிவில் உயர்குழாத்தின் ஆட்சிக் கரங்களை மிகவும் பலப்படுத்தினார்.**

பௌத்தத்தை, பௌத்த சங்கத்தை மீண்டும் அரியாசனத்தில் ஏற்ற வேண்டும் என்பதில் பிரேமதாசா கடுமையாக உழைத்தார். அது 'புத்த காயா' வரை சென்றது.

பௌத்தத்தின், பௌத்த சங்கத்தின் மறுமலர்ச்சி என்பது சிங்களப் பேரினவாதத்தின் மறுமலர்ச்சி. இலங்கைத்தீவு புத்தரால் சிங்களவர்களுக்கு எனத் தரப்பட்ட புனித பூமி என்ற கோட்பாட்டின் மறுமலர்ச்சி என்பதை, பலர் அடையாளம் காணத்தவறினர்.

அமைதி, சமாதானம் எனக்கூறிக்கொண்டே, இத்தீவின் அமைதிக்கும், சமாதானமும் அழிந்து போகக் காரணமான சிங்களப் பேரினவாதம் கட்டியெழுப்பப்பட்டது.

மக்கள் சொர்க்க வாசலையே பார்த்துக்கொண்டிருக்க காலுக்குக் கீழ் நரகக்குழிகள் வெட்டப்பட்டன.

21 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தில் தமிழீழம் மிகப்பெரிய அழிவுகளை பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்திலேயே சந்தித்தது.

மக்கள் விடுதலை முன்னணியை அழித்துக் களைப்பு கண்ட பிரேமதாசா, தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தையும் ரயர் போட்டுக் கொளுத்த முயன்றார்.

ஏறத்தாழ மூன்று ஆண்டுகளில் 20,000 க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் நேரடியாக அல்லது மறைமுகமாகக் கொல்லப்பட்டனர்.

தமிழீழத்தில் வாழும் தமிழ் மக்கள் தொகையில் அரைவாசிப் பேருக்கு மேல் -பத்து இலட்சம் மக்கள் -ஏதிலிகள் ஆனார்கள்.

ஆயிரக்கணக்கில் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

குண்டு வீச்சால் இறந்தோர் ஆயிரம் எனில் மருத்துவம், உணவு, போக்குவரத்து வசதியின்றி மறைமுகமாக இறந்தோர் பத்தாயிரமாகும்.

**இந்த பத்தாயிரம் மக்களின் இறப்பு யாருக்கும் தெரியாமல் நடந்தது.**

மூன்று ஆண்டுகளாக அடிப்படைத் தேவைகளான உணவு, மருத்துவம், போக்குவரத்துக்கு நேரடியாகத் தடையும் மறைமுகமாக பல தடைகளும் நடைமுறையில் இருக்கின்றன.

இத்தனை அழிவுகளுக்கும் பின்பும் பிரேமதாசா தமிழ் மக்களுக்கு இருக்கும் ஒரே ஒரு நண்பர் எனக் காட்டப்பட்டார்.

1987 ஆம் ஆண்டு செய்யப்பட்ட இந்திய -இலங்கை ஒப்பந்தத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டன. பிரேமதாசாவினால் சமாதானம், தீர்வு என்பதன் பெயரால் அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு, இத்தற்காலிக இணைப்பையும் பிரிக்கவே முயல்கின்றது.

அமைதியை எதிர்பார்த்துக் காத்திருந்த தமிழர்களின் இதயம் அவர்கள் அறியாமலேயே அறுக்கப்பட்டது.

இது பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில்தான் நடந்தது.

பௌத்த பேரினவாதத்தை வளர்த்த தற்கால மகாநாமவை (மகாவம்சத்தை எழுதியவர்) இத்தீவு இனங்காணத் தவறியது.

தமக்கே கோடரிக்காம்பாக மாறிய தம் தலைவரை சிங்களப் பாமர மக்கள் இனங்காணத் தவறினர்.

அமைதி, சமாதானம் எனப்பேசிக்கொண்டே தமிழ் மக்களைப் பெருமளவில் அழித்து தமிழர் தாயகத்தைச் சிதைத்த சிங்களத் தலைவர், பிரேமதாசா என்பதை பல தமிழர்கள் இனங்காணத் தவறினர்.

**எல்லாவற்றிற்கும் மேலாக பிரேமதாசாவின் 1580 நாட்கள் ஆட்சிக் காலத்தில்தான் (நான்கு ஆண்டு காலம்) இத்தீவில் வாழும் சிங்கள, தமிழ் மக்களில் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் நேரடியாகவும் மறைமுகமாகவும் கொல்லப்பட்டனர் என்பதை, பெரும்பாலோர் தெரிந்துகொள்ளவில்லை! ■**

- யோகி

நன்றி:
விடுதலைப்புலிகள்
(வைகாசி -93)

---

## பலமான சிந்...

தோட்டங்களிலும் பார்த்து ரசித்து ... தன்னிடம் ... பழைய அல்பத்தில் கூடுகளும் சினிமா நடிகர்கள், நடிகைகளின் படங்களைத்தான் ஒட்டுகின்றான் ... செல்வராசாவின் மனம் தீர்மானத்திற்கு வருகின்றது ...

கடுகள் ... தனது பரிசை மறந்து, தாங்கும் பரிசை மறந்து சினிமாப் படங்களை ஒட்டுகின்றான் என்பதை நினைக்கும் போது அவ்பத்தையும் அதிலுள்ள படங்களையும் கிழித்தெறிந்தாலென்ன என்ற கோபம் அவருக்கு வருகின்றது.

சாறத்தை மடித்துக் கொண்டு, தனது சேட் பையுள் இருந்த கண்ணாடியை எடுத்துப் போட்ட செல்வராசா ... சிறிது குனிந்து படங்களைப் பார்க்கின்றார் ...

... திரும்பவும் பார்க்கிறார் ...
... திரும்பத் திரும்பப் பார்க்கின்றார் ...

அந்தப் படங்கள் ... சினிமா நடிகர்கள் ... பிறந்த நாள் படங்கள் இரண்டுமல்ல ... அத்தனையும் வீரமரணமடைந்த ... படங்கள் ... தேசத் துணிவைச் சேர்ப்பதுபோல் ... கடுகள் ... சேர்த்த ... மேற்பட்ட மாவீரர்களின் படங்கள் ...

இருந்து பெற்ற பழைய அல்பத்தில் இருந்து பெற்ற ... படங்களைப் ... வீதியோரத்தில் ... கடைக்கு ... இடைக்கால இடத்த ... பரிசை மறந்து ... தாயை மறந்து ... அவன் கடுகள் ...

பலவீனமான அவனது இதயத்துள் ...

பலமான சிந்தனைகள் ...

கடுகள் படங்களை ஒட்டிக் கொண்டிருக்கின்றான் ...

செல்வராசா ...

ஒட்டியதைப் ... இருந்தபடியே மௌனமாக நிற்கின்றார்! புதிய அல்பமும் ... அதிலுள்ள அந்த படங்களும் ... அவரது இதயத்தில் ஒட்டிக்கொண்டிருக்கின்றது ■

# 83ன் இனக்கலவரமும்
# 93ல் அரசியல் போக்கும்


**1983ம்** ஆண்டு நடைபெற்ற ஈழத்தமிழர் இன அழிப்புக் கலவரம் 1993ம் ஆண்டு யூலை மாதம் பத்து ஆண்டுகளைத் தாண்டும் போது அக்கலவரத்தின் பின்னணியிலும், அக்காலப் பகுதியில் பதவியிலிருந்த அரசியல் தலைவர்களின் கொலைகளும், அரசியல் பிளவுகளும் மீண்டும் ஒரு இனக் கலவரத்தை ஏற்படுத்துமோ என்ற அச்சத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு எல்லைக்கு அப்பால் வாழும் தமிழீழ மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்ததென்பது உண்மையே. இப்பகுதியில் வாழும் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளிடம் பாதுகாப்புத் தேடி அவர்களின் பாதுகாப்பு வலயத்தை நோக்கிச் சென்ற பொழுது கிளாலிப் பாதையில் சிறீலங்கா இராணுவத்தின் அட்டகாசம் காரணமாக பயணத்தைத் தொடர முடியாது வவுனியாவில் குவிந்து கிடந்தமை தெரிந்ததே. இச்சம்பவமானது அரசியல் அவதானிகளினதும், கொப்பேகடுவவின் கொலையை விசாரிக்க வந்த சர்வதேச விசாரணைக்குழுவினதும், வெளிநாட்டிலிருந்து வந்த லலித் கொலையின் புலன் விசாரணைக் குழுவினதும் கவனத்தை இழுத்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நவீன போராட்ட யுத்திகளும், அரசியல் தலைமையின் இராஜதந்திரமும், தமிழீழ மக்கள் தமது தேசியத் தலைவரின் வழிநடத்தலில் வைத்திருக்கும் அளவில்லாத நம்பிக்கையும் சேர்ந்து சர்வதேச ரீதியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சர்வதேச அங்கீகாரத்தை நோக்கிச் செல்லவைத்துள்ளது. இதனால் தென்னிலங்கையில் இராணுவத்தால் மீண்டும் ஒரு இனக்கலவரத்தை 93 இல் ஏற்படுத்த முடியவில்லை. இனப்பிரச்சினைக்குத் தூபமிடும் பிரேமதாசா கொலையுண்டதாலும் இம்முயற்சி கைவிடப்பட்டது போலும்.

1956, 58, 61, 64, 74, 76, 77, 83 என ஒழுங்கு ரீதியான இடைவெளித் தொடர்புடன் ஈழத் தமிழர்கள் அழிக்கப்பட்டு அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டமை சிங்களக் காடையர்கள் மத்தியில் ஒரு பருவ கால விளையாட்டாகவே காணப்பட்டது. 1993ல் நடைபெற்ற லலித் கொலையை விடுதலைப் புலிகளின் தலையில் போடுவதன் மூலம் ஒரு இனக்கலவரத்தைத் தூண்டிவிட்டு 83 இனக்கலவரத்தின் பின் வற்றிப்போன சிங்களக் காடையரின் வருமானத்தைப் பெருக்கவும் தென் இலங்கைத் தமிழர்களை அழிக்கவும் இதனால் மாகாணசபைத் தேர்தலை ஒத்திப் போடவும் வாய்ப்புத் தேடி இராணுவமும் சில அரசியல்வாதிகளும் திட்டமிட்டிருந்தனர் என்பது அரசியல் அவதானிகளின் கருத்து.

1983 ஆம் ஆண்டு யூலைக் கலவரத்தில் 2000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டும், 400 கோடி ரூபா பெறுமதியான 5000க்கும் மேற்பட்ட தமிழர்களின் உடமைகள் அழிக்கப்பட்டும், 2 இலட்சத்திற்கும் அதிகமான தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டதற்கும் காரணம், அன்று பதவியிலிருந்த ஐ.தே.க. அரசாங்கமும் அவர்களால் கட்டவிழ்த்துவிடப்பட்ட இராணுவமும் சிங்களக் காடையர்களுமாகும். ஐ.தே.க. அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மூன்று சகோதரர்கள் தலைமையில் சென்ற 200 பேர் கொண்ட காடையர் கூட்டமொன்று இராணுவம், பொலிஸ் படையின் உதவியுடன் பதுளையைச் சேர்ந்த இராமநாதனின் வீட்டைத் தாக்கினர். இராணுவம் துப்பாக்கி வேட்டு வைத்து விரட்டியவுடன் அச்சம் கொண்ட இராமநாதன், தமது இரண்டு வயதுக் குழந்தை விஜியுடன் வெளியில் வந்து அவர்களிடம் சரணடைந்ததும் இராமநாதனை இரும்புக் கம்பிகளாலும் மரக்கட்டைகளாலும் அடித்துக் கொன்று அவர் முகத்தை எரித்தனர். சிங்கள இனவாதி சிறில் மத்தியுவின் நண்பரான நிர்மல் என்பவர் அந்த இரண்டு வயதுச் சிறுமியை காலில் பிடித்து மரத்தில் அடித்துக் கொன்றார். அவரது இன்னொரு மகனான பாக்கியநாதனையும் மூன்று வயதுக் குழந்தை கௌசிகாவையும் துப்பாக்கியால் சுட்டனர். அத்துடன் அந்தக் குடும்ப மீதி அங்கத்தவர்களான யோகநாதன், சத்தியநாதன், விமலநாதன் உட்பட மற்றும் 15 பேர்களின் சடலங்கள் அருகிலிருந்த கரும்புத் தோட்டத்தினுள் கண்டுபிடிக்கப்பட்டது.

இதே காடையர் கூட்டமொன்று 25-07-83 அன்று கொழும்பில் போக்குவரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வாகனங்களை நிறுத்தி அதிலிருந்த தமிழர்களை உயிருடன் பெற்றோல் ஊற்றிக் கொழுத்தியதுடன் சிலரை வெளியில் இழுத்துப் போட்டு இரும்புக்கம்பிகளால் அடித்துக் கொன்றனர்.



1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தை நினைவுபடுத்தும், சிறீலங்கா அரசின் தொடரும் இன அழிப்பை வெளிப்படுத்தவும் இலண்டனில் வருடாந்தம் நடைபெறும் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஒரு பகுதி (1993)

29-07-83 நுவரேலியாவில் ராதிகா ஸ்ரோர்ஸ் முதலாளியின் கழுத்தில் கயிற்றைக் கட்டி இராணுவ வண்டிகளில் பிணைக்கப்பட்டு வீதிவழியாக இழுத்துச் சென்று பின் இராணுவ வண்டியை அவர் மேல் ஏற்றிக் கொன்றனர். வெலிக்கடைச் சிறையில் இருந்த தமிழீழப் போராளிகள் உட்பட 53 பேர் சித்திரவதைக் குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர். தப்பியோட முயற்சித்த இன்னொருவரை சிறைக் காவலர் ஒருவர் கத்தியால் வெட்டிக் கொன்றபின் இச்சடலங்கள் யாவற்றையும் வெலிக்கடைச் சிறைச்சாலையின் முன்பிருந்த புத்தர் சிலைக்கு அருகில் கொண்டுவந்து குவித்தனர். போராளி ஒருவரின் நாக்கை வெட்டிய இராணுவத்தினர், "நான் புலியின் இரத்தத்தைக் குடித்தேன்" என கூத்தாடினான்.

இவ்வாறு 83 கலவரத்தை முன்நின்று நடத்திய தென்னிலங்கை அரசியல்வாதிகள் 10 வருடங்கள் கழித்து கொலையுண்டபொழுது தமிழீழ மக்கள் மனதை உருக்காத மரணங்களாகவே இவை இருந்தன. அதுமட்டுமின்றி தென்னிலங்கையில் சிங்கள மக்

**விவே**

களின் ஒருபகுதியினர் எம்மைப் பிடித்த பிசாசு ஒழிந்தது என வெடிகொழுத்தி ஆர்ப்பரித்துக் கொண்டாடினார்கள்.

இவற்றை அவதானித்த சர்வதேச அரசியல் அவதானிகளுடன் லலித்தின் கொலைபற்றி விசாரிக்கச் சென்ற விசாரணைக் குழுவும், கொப்பேகடுவவின்


1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தைக் கண்டித்து [illegible] 1983 ஆம் ஆண்டு [illegible] இலண்டனில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.

கொலை பற்றி விசாரித்த சர்வதேச விசாரணைக்குழுவும் நாட்டின் ஜனாதிபதியின் மரணத்தை வெடிகொழுத்திக் கொண்டாடும் அளவிற்கு இருந்ததற்கான காரணத்தை அறியத்தவறவில்லை.

83ம் ஆண்டு இனக்கலவரத்தை அன்றைய சிங்கள அரசியல்வாதிகள் உள்நாட்டுக் கலவரமாக விமர்சித்தபோது தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களும் இந்தியாவிலிருந்த கட்சி நலன்கருதும் சில ஆவேசப் பேச்சாளர்களும் கூட இது ஒரு தேசிய இனத்தின் பிரச்சினையென சர்வதேச அரங்கிற்கு கொண்டுவர முயற்சி எடுக்கவில்லை. உள்நாட்டுப் பிரச்சினையாக வைத்து ஒரு ஆட்சியின் கீழ் தற்காலிகத் தீர்வு காணவே முற்பட்டனர்.

இன்று தமிழீழப் பிரச்சினையானது எரித்திரியா, பொஸ்னியா, சோமாலியா போன்ற நாடுகளுடன் ஒப்பிடுவதுபோன்ற ஒரு தேசிய இனத்தின் பிரச்சினை என்பதை சர்வதேச அரங்கிற்குக் கொண்டு வந்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் என்பதை உலகம் ஒப்புக்கொள்கிறது.

83 யூலைக் கலவரத்தின்போது வெளிவந்த பத்திரிகைச் செய்திகள் சர்வதேச அரங்கத்தை ஈர்த்தது.

"தமிழர்களின் இரத்த ஆறு"
"சிறீலங்கா இராணுவத்தின் புதிய சித்திரவதை"
"வாகனத்துடன் தமிழர் எரிப்பு"
"சிறீலங்காவிலிருந்து உல்லாசப் பயணிகள் திருப்பியழைப்பு"
"சிறீலங்காவில் புதிய கலவரம்"
"[illegible] தீவு எரிகிறது"
"பெரும்பான்மையினர் ஒத்துப் போக மறுக்கின்றனர்"

போன்ற தலைப்புக்களில் ஐரோப்பிய நாடுகளின் பிரபல்ய பத்திரிகைகள் செய்திகளை வரைந்தன.

வெளிநாடுகளில் இருந்து சிறீலங்கா வந்திருந்த உல்லாசப் பயணிகள் இனக்கலவரத்தை இன அழிப்பு என வர்ணித்தனர். அங்கே நடந்த ஈழத் தமிழர் சித்திரவதைகளை நேரில் கண்டவர்கள் தொலைக்காட்சி நிறுவனத்திற்கும், செய்தி நிறுவனத்திற்கும் நேர்செவ்வி கொடுத்தனர். சிறீலங்கா சென்றிருந்த தமது நாட்டுப் பிரசைகளை அந்த அரசாங்கங்கள் விசேட விமானங்களை அனுப்பி திருப்பி அழைத்தனர். அவ்வாறு அழைக்கப்பட்டவர்களில் ஜேர்மன் பிரசைகளை அழைத்து தொலைக்காட்சி நிறுவனம் பிராங்போட் விமான நிலையத்தில் பேட்டி கண்டபொழுது "ஒரு சிங்கள டாக்சிச் சாரதி தமிழர்களை நாம் ஒழித்துவிட்டோம் என சந்தோசத்தில் துள்ளிக் குதித்தார்" எனவும், "தமிழன் ஒழிந்தான் என்று கூத்தாடினார்கள்" எனவும், அவர்கள் தமிழரின் சொத்துக்களை நாசப்படுத்தியதை நேரில் கண்டதாகவும், சில தமிழர்களை கார் ஒன்றினுள் வைத்து உயிருடன் நெருப்பூட்டி எரித்தனர் எனவும் கூறினர்.

இச்சம்பவங்களை தொலைக்காட்சி, செய்தித் தாபனங்களின் மூலம் அறிந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தமது ஆவேசத்தை தெரிவிக்கும் வகையில் விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுக் கிளைகள் மூலம் இலங்கை அரசாங்கத்தைக் கண்டித்து "இலங்கை அரசாங்கத்திற்கு நிதி வழங்க வேண்டாம்", "ஆயுதம் வழங்க வேண்டாம்" என வெளிநாட்டு அரசாங்கங்களிடம் வேண்டுகோள் விடுத்தும் கண்டன ஊர்வலங்களை பல நாடுகளிலும் நடத்தினர். சில நாடுகளில் நடைபெற்ற ஊர்வலங்களில் சர்வதேச அரசியல் சார்பற்ற நிறுவனங்களும், அந் நாடுகளின் அரசியல் கட்சிகளும் கூட பங்குபற்றின.

இலண்டன், ஜேர்மனி, கனடா, பிரான்ஸ், டென்மார்க், நோர்வே, சுவிஸ் ஆகிய நாடுகளில் பாரிய ஊர்வலங்கள் நடைபெற்றன. குறிப்பாக ஜேர்மன் நாட்டில் நடைபெற்ற ஊர்வலத்தின்போது கலந்து கொண்ட இளைஞர்களில் சிலர் [illegible] தெருவில் உருண்டு சென்று ஜேர்மன் மக்களை மனம் உருகச் செய்தது.

தமிழீழத்தில் இடம்பெறும் குண்டு வீச்சுக்கள், பொருளாதாரத் தடை, மனித உரிமை மீறல்கள் யாவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பொஸ்னியாவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கும், சிறீலங்கா அரச பயங்கரவாதத்திற்கும் அதிக வித்தியாசம் இல்லை. சோமாலியாவின் பட்டினிச் சாவிற்கும் சிறீலங்காவின் பொருளாதாரத் தடைக்கும் இடைவெளி அதிகமில்லை.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# சிங்கள தேசத்தை உலுக்கிய அரசியல் படுகொலைகள்

## தங்களது அதிகாரத்தின் கீழ் — பத்தாண்டு காலத்திற்குள் — 30,000 தமிழர் களைக் கொன்ற இரு பெரும் சிங்களத் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

தங்களது அதிகாரத்தின் கீழ் - பத்தாண்டு காலத்திற்குள் -30,000 தமிழர்களைக் கொன்ற இரு பெரும் சிங்களத் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

சிங்கள பௌத்த பேரினவாதத்தின் காவற்தெய்வங்களாக விளங்கிய திரு. லலித்அத்துலத் முதலியும், திரு. பிரேமதாசா அவர்களும் ஒன்பது நாட்கள் இடைவெளிக்குள் அடுத்தடுத்துப் படுகொலை செய்யப்பட்டுவிட்டனர்.

இந்த இருபெரும் அரசியல் தலைவர்களது மரணத்துடனும், சிறீலங்கா அரசியலில் இப்படுகொலைகள் ஏற்படுத்திய சர்ச்சைகள் -தாக்கங்களுடனும் சிங்கள தேசத்தின் அரசியல் ஸ்திரமும் கேள்விக்குரியதாக மாறிவிட்டது.

மாகாண சபைத் தேர்தலுக்காக கிருலப்பனையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் வைத்து, ஏப்ரல் 23ஆம் திகதி இரவு 8.45 மணிக்கு லலித் சுடப்பட்டார். அவர் மேடையில் ஏழு நிமிடங்கள் பேசிய பின், அவருக்கு முன்னால் சுமார் 10 அல்லது 15 அடி தூரத்தில் மேடைக்கு அருகே வந்த துப்பாக்கி இளைஞன் ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.



வளர்த்துச் செல்லப்பட்டதாக அவரின் எதிரிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

அரசியல் எதிரிகளை அழிப்பதன் மூலம் எதிர்ப்புகளை வெற்றிகொள்ள விழையும் ஒரு அரசியல் மரபை, சிங்கள தேசத்து அரசியல் அரங்கில் சிருஷ்டித்துவிட்டவர் பிரேமதாசாதான் என்றால் அது மிகையாகாது.

அடாவடித்தனம்கொண்ட இந்த அரசியல் மரபு, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தால் திடீர் வளர்ச்சியைக்கண்ட ஜே.வி.பி யின் கிளர்ச்சியை ஒடுக்குவதில் உச்சம் கண்டது. அன்றிலிருந்து பிரேமதாசா தான் இறக்கும் வரை, தனது அரசியல் எதிரிகளது வாழ்வை கனகச்சிதமாக முடித்து, தன்னுடைய அரசியல் அடித்தளத்தைப் பலமாக்க முயன்று வந்தார்.

இத்தகையதொரு யதார்த்த நிலையிலிருந்து தான் லலித்தின் கொலைக்கு பிரேமதாசா குற்றம் சாட்டப்பட்டார். எதிர்க்கட்சிகளதும், பத்திரிகைகளினதும் ஏகோபித்த கண்டனக் கணைகளால் நிலைகுலைந்த பிரேமா, "......நான் மனிதர்களுக்கு மட்டுமல்ல மிருகங்களுக்கே தீங்கிழைக்காதவன்" என்று, எவருமே ஏற்கத்தயாரில்லாத புலம்பலைச் செய்து தப்பிக்க முயன்றும், அவர் மே 1 ஆம் திகதி நண்பகல் கோரமான வடிவில் சாவைத் தழுவுகின்றார்.

கொழும்பில் மேதின ஊர்வலத்தில் குதூகலமாகச் சென்றுகொண்டிருந்தபோது, ஆமர் வீதிச் சந்திக்கு அருகாமையில், குண்டுவெடிப்பொன்றின் மூலம் பிரேமதாசா கொல்லப்படுகின்றார். அது ஒரு மனிதக் குண்டு ஆகும்.

கொடிய மனிதர்களே இந்த இரண்டு பேருமாகும்.

தமிழ் மக்களைக் கொன்றுகுவித்து -வேட்டையாடி அவர்களின் சொந்த இருப்பிடங்களிலிருந்து விரட்டியடித்து இனப்படுகொலை புரிவதில் இருவருமே ஒத்த கருத்துடையவர்களாகவும், அதைச் செயற்படுத்துவதில் அதிதீவிரம் காட்டுபவர்களாகவும் இருந்துள்ளனர்.

ஆனாலும், ஜே. ஆரின் பாணியில் முரட்டுத்தனமாக தனது தமிழின விரோதச் செயல்களுக்கு அத்துலத் முதலி விளக்கமளிப்பதைப் போல, பிரேமதாசா நடப்பதில்லை.

**வெளிப்பார்வைக்குச் சமாதானப் பிரியரைப் போலவும், பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை உள்ளவர் போலவும் தன்னைக் காட்டிக்கொண்ட பிரேமதாசா, தமிழர் இனப் பிரச்சினைக்கு வைத்திருந்த தீர்வு, இராணுவ பலம் கொண்டு அவர்களை நசுக்குவதுதான். எல்லா வகையாலும் அழிவுகளையும் அவலங்களையும் தமிழர்கள் என்றுமில்லாதவாறு சந்தித்தது, பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில்தான்.**

ஏதும் அறியாத ஒரு அப்பாவி போல -காருண்யம்மிக்க ஒரு கனவானைப்போல -வெளியில் கதைத்து அறிக்கைகளை விடுத்துக்கொண்டு, மறுபுறத்தில் மிகத் தீவிரமாகவும் கச்சிதமாகவும் தமிழின அழிப்பில் [illegible] ஈடுபட்டுள்ளார்.

இவ்விருவரினதும் அதிகாரத்துக்குள் தமிழர்களின் உயிர்களும் உடைமைகளும் கொண்டுவரப்பட்ட கடந்த 10 ஆண்டுகளிலும், சுமார் 30,000 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

1984 ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஏற்ற திரு. அத்துலத்முதலி, தமிழினத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் இராணுவத்தை நவீனப்படுத்திவிட்டு, ஒழுங்கு படுத்தப்பட்ட இராணுவ அட்டூழியத்தை தமிழ் மக்கள் மீது ஏவிவிட்டார்.

**1984 ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பு அமைச்சராகப் பதவி ஏற்று, தமிழினத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் சிங்களப் படையை நவீனப்படுத்திவிட்டு ஒழுங்கு படுத்தப்பட்ட இராணுவ அட்டூழியத்தைத் தமிழ் மக்கள்மீது ஏவிவிட்ட அத்துலத்முதலி சாகும்வரை, புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தார்.**

மணலாறு, திருகோணமலை, மட்டக்களப்பு -அம்பாறை மாவட்டங்களிலுள்ள பல தமிழர் கிராமங்களைச் சில மணிநேரங்களுக்குள் துடைத்தெறிந்து தமிழர்களை விரட்டியடிப்பு லலித் இராணுவத்திற்கு உத்தரவு வழங்கியிருந்தார். அதே வேளை தமிழீழம் எங்கும் சுற்றி வளைப்புகள், கைதுகள்மூலம் தமிழ் இளைஞர்களை வேட்டையாடும்படியும் இராணுவத்தைப் பணித்தார்.

இதனால் பல அப்பாவிக் கிராமவாசிகள் கொல்லப்பட்டனர். அகதிகளாக இடம்பெயர்ந்தோர் ஏராளம்.

பூசா வதைமுகாம்களும், தடுப்பு முகாம்களும், தமிழ் இளைஞர்களின் இருப்பிடங்களாகின.

புதிய புதிய சித்திரவதை வடிவங்கள் தமிழர்கள் மீது பிரயோகிக்கப்பட்டன.

அதேவேளை, பொதுமக்களையும் அவர்களது சொத்துக்களையும் அழிப்பதை மட்டுமே இலக்காகக் கொண்ட பீப்பாய்க் குண்டுகளின் சூத்திரதாரியும் அத்துலத் முதலியேயாகும்.

பீப்பாய்க் குண்டுகள் சிலவற்றுடன் ஒரு அவ்ரோ விமானத்தில் பறந்து வந்த லலித், யாழ்நகர் மீதான ஒரு பீப்பாய்க் குண்டு வீச்சை நெறிப்படுத்தியிருக்கிறார். இக்குண்டுகளில் ஒன்று யாழ். வைத்தீஸ்வரன் கோவிலில் மாலை நேர பூசையில் ஈடுபட்டிருந்த பக்தர்கள் மீது வீழ்ந்து வெடித்தது. அதில் 10 பேர் உடல்சிதறிப் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே போன்ற பாரிய உயிர் - பொருள் இழப்புக்கள் ஏற்படும் என்று உலக நாடுகள் எச்சரித்திருந்தும், வடமராட்சி மீதான படையெடுப்பை நடாத்த லலித் தீர்மானித்தார். அந்த இராணுவ நடவடிக்கையில் 100 க்கும் மேற்பட்ட மக்கள்கொல்லப்பட்டனர். கோடிக்கணக்கான ரூபா பெறுமானமுள்ள சொத்துக்களும் அழிக்கப்பட்டன. அத்துடன் வடமராட்சியின் பெரும்பான்மை மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்தனர்.

இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல, இலங்கை - இந்திய ஒப்பந்த விதிகளுக்கு முரணாக புலிகளின் மூத்த தளபதிகள் புலேந்திரன், குமரப்பா உட்பட பன்னிருவரைக் கைது செய்ததுடன் அவர்களின் சாவுக்கும் நேரடிக் காரணியாக அத்துலத் முதலியே இருந்தார்.

கைது செய்யப்பட்ட புலிகளின் தளபதிகளைக் கொழும்புக்குக் கொண்டுவராவிட்டால் தான் இராஜினாமாச் செய்யப்போவதாக லலித் கூறியிருந்தாரென ஜே. ஆர். தெரிவித்திருந்தார்.

இந்தச் சம்பவத்தைப் பற்றி 2-5.93 ஆம் திகதிய 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையில் வந்த ஒரு கட்டுரையில் ஒரு சிறு குறிப்புள்ளது.

அக்கட்டுரையாளர் எழுதுகிறார்:

"..... இப்படி நடக்குமென்று [illegible] என்றார்."

அதாவது, புலிகளின் ஒப்பற்ற தளபதிகளை லலித் எவ்விதம் திட்டமிட்டு மரணப்பொறிக்குள் கொண்டு சென்றார் என்பதை இது காட்டுகின்றது.

லலித்தின் பதவி ஆசைக்குக் குறுக்கே பிரேமதாசாதான் நின்றார். பிரேமதாசா வீழ்த்துவதில் குறியாக இருந்த அதேவேளை, புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்பதிலேயே லலித் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

கொல்லப்படுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு தனது கட்சிக் கூட்டமொன்றில் லலித் கூறினார்:



"..... நாங்கள் இப்போது [illegible] குறிவைத்துள்ளோம். அது வீழப்போவது உறுதி. அதே நேரத்தில் புலி தப்பிவிடக்கூடாது நாம் ஆழமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்."

லலித்தின் படுகொலைக்குப் பின்னர் ஒரு கொடூரமான மனிதனாக பிரேமதாசா சிங்கள மக்களுக்குத் தெரிந்தார். அந்த உணர்வு சிங்களமக்களை ஆழமாக ஊடுருவிக் கொண்டிருந்த போதே பிரேமதாசாவும் கொல்லப்படுகின்றார். இதனால் பிரேமதாசாவின் கொலையை விட்டு சிங்கள மக்கள் பெரிதாக அதிர்ச்சியடையவில்லை. [illegible]

திரு. பிரேமதாசா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின் ஜே.வி.பி.யின் கிளர்ச்சியை ஒடுக்குவேன் என்று கூறிக்கொண்டு, தனது அரசியல் எதிரிகள் - அதிருப்தியாளர்கள் என்று சிங்கள இனத்தில் [illegible] மக்களைக் கொன்று குவிக்க உத்தரவு வழங்கியவர் என்பது அனைவரும் அறிந்த கதை.

அதேவேளை, ஜே.ஆர். தொடக்கிவைத்த தமிழின அழிப்பு வேலையை பிரேமதாசா கச்சிதமாகத் தொடர்ந்து செய்தபடி இருந்தார்.

கடந்த மூன்று வருடங்களாக இடைவிடாது தமிழ் மக்கள் மீது போரைத் தொடர்ந்து நடத்தி வந்தார். உணவுத் தடை, மருந்துத் தடை, எரிபொருள் தடை, [illegible] தடை, போக்குவரத்துத் தடை என்று ஒரு முழுமையான பொருளாதாரத்தடையை தமிழர்கள் மேல் திணித்து தமிழினத்தைக் கொடுமைப்படுத்தி வந்துள்ளார்.

இந்த மூன்று வருட காலத்திற்குள் பல படுகொலைகள் [illegible]

அத்துலத் முதலியின் கொலைக்கு அரசே காரணம் என, உடனேயே ஜ.ஐ.தே.மு. கட்சி அறிக்கையும் விட்டது. பெரும்பாலான சிங்கள மக்களின் கருத்தும், ஏன் உலகினதும் முடிந்த முடிவும் அதுதான்.

பிரேமதாசாவின் முதல்தர அரசியல் எதிரியாகவும், பிரேமாவின் அதி உயர் பதவியைப் பறிக்கக்கூடிய ஆளுமையும் அரசியல் செல்வாக்கும் பெற்றவராகவும் லலித் வளர்ந்துவந்தார். அதனால் பிரேமதாசா தனது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ள லலித்தைக் கொலை செய்தார் என்ற அபிப்பிராயம், பரவலாகக் குடிகொண்டிருக்கின்றது.

இந்த அபிப்பிராயம் வெறும் ஊகங்களின் அடிப்படையில் எழுந்த வதந்திகள் அல்ல. பிரேமதாசாவின் இரத்தக்கறை படிந்த அரசியல் வாழ்வுக்கு சிங்கள மக்கள் பல ஆதாரங்களை வைத்திருக்கின்றனர். பிரேமதாசாவின் அரசியல் வாழ்வு -அண்மைக்காலத்தில் -கொலைகளாலும், சண்டித்தனங்களாலும், கழுத்தறுப்புகளாலும் தான்

இவ்விரு படுகொலைகளுக்கும் புலிகள் இயக்கத்தைச் சம்பந்தப்படுத்தி சிங்கள பொலிஸ்துறை குற்றம் சுமத்தியுள்ளது. ஆனால் சுயாதீன பத்திரிகைகளும், வெளிநாட்டுச் செய்தியாளர்களும் இப்படுகொலைகளை சிங்கள தேசத்தின் உள் பிரச்சினைகளாகவும், பழிவாங்கும் படலமாகவுமே சித்திரிக்கின்றனர்.

இந்த இரு சிங்களத் தலைவர்களது படுகொலைகளின் பின்னணிகள் பற்றிய ஆழமான விசாரணைகள், ஆய்வுகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனாலும், இந்த இரு மனிதர்களும் தமிழ் மக்கள் மீதான போரில் எத்தகைய பாத்திரத்தை வகித்தார்கள் என்ற விபரங்களை மீட்டுப் பார்ப்பது அவசியம்.

1977 ஆம் ஆண்டு சிங்களக் காடையர்களின் இனவெறித் தாக்குதல்களுக்கு இலக்காகிப் படு வேதனையுடன் நின்ற தமிழர்களைப் பார்த்து, "போரா? சமாதானமா?" என்று திமிருடன் கேட்ட முதுபெரும் இனவெறியன் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் பேரினவாதப் பட்டறையில் உருவாக்கப்பட்ட

தொடர்ச்சி 13ம் பக்கம்

# அரசியல் தீர்விற்கான அடிப்படையை உருவாக்குவதே எமது நோக்கம்

## *சர்வதேச நல்லெண்ணக் குழு

**அ**ண்மையில் வெளிநாட்டு சர்வமத நல்லெண்ணக் குழுவினர் யாழ் சென்று விடுதலைப் புலிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது யாவரும் அறிந்ததே. இவர்கள் யாழ் மறை மாவட்ட ஆயர் இல்லத்தில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் ஈழநாதம் பத்திரிகையாளருக்கு வழங்கிய பதில்களை இங்கு தருகின்றோம்.

இச்சந்திப்பில் வெளிநாட்டு நல்லெண்ணத் தூதுக்குழுவின் செடக் அமைப்புப் பிரதிநிதி ஜோ வில்லியம்ஸ், தாய்லாந்து தேரர் சொம்சை குசலிசிற்றோ, பிலிப்பைன்ஸ் ஆயர் ஏ.செல்வநாயகம், கரோலியன்ஸ் பிறிஸ் (புருணை) ஆகியோரே கலந்து கொண்டனர்.

**கேள்வி:** தற்போதைய யாழ் விஜயத்தின் பின் நீங்கள் என்ன செய்ய உத்தேசித்துள்ளீர்கள்?

ஜோ வில்லியம்ஸ்: யாழ்ப்பாணம் வந்துள்ள வெளிநாட்டு நல்லெண்ணக்குழு மடு, கிளிநொச்சி, திருமலை, கல்முனை மற்றும் அம்பாறை ஆகிய இடங்களுக்கு விஜயம் மேற்கொண்டு அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும். இது கொழும்பிலுள்ள சர்வமத மத்தியக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். சர்வ மத மத்திய குழு இந்தப் பரிந்துரையின் அடிப்படையில் நீண்ட கால சமாதானத் திட்டத்தைத் தயாரிக்கும்.

**கேள்வி:** சமாதானத்தை எட்டுவதற்கு நீங்கள் எடுத்துள்ள முயற்சிகள் என்ன?

ஜோ வில்லியம்ஸ்: எமது குழு யாழ்ப்பாணத்தில் பல இடங்களைப் பார்வையிட்டு, பலரைச் சந்தித்து பலரது அபிப்பிராயங்களை அறிந்துள்ளது. சமாதானத்திற்கான எமது சூழ்நிலையை ஏற்படுத்துவதே எமது நோக்கம். சர்வமத மத்திய குழு இதற்கான ஒரு பூர்வாங்க திட்டத்தைத் தயாரித்து உதவும். இறுதியாக மக்களே சமாதானத்திற்கான தீர்வை எட்ட வேண்டும். சமாதானத்திற்கான இறுதி நடவடிக்கைகளை எம்மால் எடுக்க முடியாது. விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் பேசுவதன் மூலம் தான் சமாதானத்தை எட்ட முடியும். நாம் இதில் மூன்றாம் தரப்பினரே.

**கேள்வி:** மடுவிலும், மன்னாரிலும் சமாதான வலயங்களை எவ்வாறு அமைக்கப் போகின்றீர்கள்?

ஆண்டகை பியூப்பிலஸ் (பிலிப்பைன்ஸ்): எமக்கு இது பற்றிய சில திட்டங்கள் இருக்கின்றன. இந்த இரு இடங்களையும் நாம் பார்வையிட்டு அங்கு வாழும் மக்களுடன் பேச வேண்டும். சமாதான வலயம் குறித்து சிறீலங்கா அரசுடனும் பேச்சு நடத்த வேண்டியுள்ளது. சமாதான வலயங்கள் சமாதானத்திற்கான முன்னேற்பாடாக அமையும். சிங்களவரும் தமிழரும் புரிந்துணர்வு இல்லாமல் இருக்கின்றனர்.



விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் வெளிநாட்டு சர்வமத நல்லெண்ணக் குழுவினரை வரவேற்கின்றனர்.

இதைக்களைய எப்படியாயினும் மூன்றாம் தரப்பினராகிய நாம் ஊக்குவிப்பை வழங்க வேண்டும். வீண் உயிரிழப்புக்களைச் சந்திக்காது, சகல மக்களும் சமாதானமாக வாழவேண்டும். எனது மறைமாவட்டத்தில் (மின்றோனா) முஸ்லீம்கள் அரசுக்கெதிராகப் போராடுகின்றனர். இங்கு ஒரு சமாதான வலயம் செயற்படுகின்றது.

**கேள்வி:** யாழ்ப்பாணத்தில் பேசும்போது இனப்பிரச்சினைக்கு சமய அடிப்படையிலான தீர்வை எட்டலாம் என நீங்கள் கூறியுள்ளீர்களா? அனைவரும், அரசியல் தீர்வையே விரும்புகின்றனர்.

பியூப்பிலஸ்: சர்வசமய குழுவின் தீர்வு முறையானது, மக்களின் மனப்போக்கை மாற்றுவதற்கான முயற்சியாகும். இம்முயற்சியின் முடிவு அரசியல் தீர்வாகவே இருக்கும். மனதில் மாற்றம் ஏற்படாது அரசியல் தீர்வு ஏற்படுமா.....?

மேதகு அன்டன் செல்வநாயகம் (மலேசியா): சமய அணுகுமுறையை, மதமாற்றம் என்ற கருத்தில் எடுக்கக் கூடாது. ஒரு சமயத்திலிருந்து மற்றச் சமயத்திற்கு மாற்றுவது இதன் கருத்தல்ல. மக்களின் உண்மைக்கான மனமாற்றத்தையே கூறுகிறோம். நாம் இங்கு அரசியல் தீர்வு ஏற்படுத்த வரவில்லை. அதற்கான அடிப்படையையே தோற்றுவிக்க வந்துள்ளோம்.

**கேள்வி:** கொழும்பில் நீங்கள் மல்வத்தை அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்தீர்களா? அவர்களின் கருத்து என்ன?

ஜோ வில்லியம்ஸ் (செடக்): நாம் செடக் அமைப்பின் சார்பில் பலரைச் சந்தித்துள்ளோம். கொழும்பு மேயர் மற்றும் 30 பௌத்த பிக்குகளைச் சந்தித்தோம். மற்றும் திருச்சபை, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளைச் சந்தித்தோம். எதிர்க்கட்சி உறுப்பினர்களைச் சந்தித்துப் பேச முயன்றபோது சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கொழும்பு திரும்பியதும் அவர்களைச் சந்திப்போம். அஸ்கிரிய மல்வத்தை பீடாதிபதிகளைச் சந்திக்க முயற்சித்து வருகின்றோம். கண்டியில் உள்ள செடக் பிரதிநிதிகள் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இம்முயற்சி செயல்வடிவம் பெறும்போது இப்பீடாதிபதிகளுடன் ஆலோசனை கலக்கவுள்ளோம். சகல தரப்பு யோசனைகளையும் நாம் இப்போது பெற்றுவருகின்றோம். வடக்கு தெற்கு மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்த முயற்சிக்கின்றோம்.

**கேள்வி:** பௌத்த பிக்கு என்ற வகையில் நீங்கள் அஸ்கிரிய மல்வத்தை பீடாதிபதிகளை சந்திக்க முயற்சித்தீர்களா?

குசலிசிற்றோ (தாய்லாந்து தேரர்): எனக்கு சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. கொழும்பிலும் புறநகர்ப் பகுதியிலும் ஏனைய பீடாதிபதிகளை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஏனைய தரப்பினரையும் சந்தித்தேன். எமது பணி கஷ்டமானது. மக்கள் மனதை மாற்றுவது சிரமமானது. சிறீலங்காவிலும் எனது நாட்டிலும் (தாய்லாந்து) சமாதானம் ஏற்படுத்த எனது வாழ்வை அர்ப்பணித்துள்ளேன்.

**கேள்வி:** பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை குறித்து நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளீர்கள்?

அன்டன் செல்வநாயகம் (மலேசியா): இந்தக் கோணத்திலும் நாம் சிந்தித்துள்ளோம். சமாதான முன்னேற்பாட்டில் இதுவும் முக்கியமானது. இதுபற்றிக் கவனிக்கவுள்ளோம்.

**கேள்வி:** வடக்கு - கிழக்கில் நடைபெறுவது ஒரு தேசிய விடுதலைப் போராட்டம். பேச்சுக்கான அடிப்படையில்லாது சமாதானம் பற்றிப் பேச முடியுமா?

அன்டன் செல்வநாயகம்: இங்குள்ளவர்களை சந்தித்து அவர்கள் கருத்தை நாம் அறிந்து கொள்கின்றோம். இதை பௌதிக ரீதியான அவதானிப்பாகக் கருதமுடியாது. இச்செயற்பாட்டில் பல விடயங்களை நாம் அவதானித்துள்ளோம்.

**கேள்வி:** உங்கள் மறை மாவட்டமான மின்றோனாவில் முஸ்லீம்கள் போராடுவதன் நோக்கம் என்ன?

பியூப்பிலஸ் (பிலிப்பைன்ஸ் ஆயர்): அங்குள்ள முஸ்லீம்கள் தமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகின்றார்கள். அவர்களுக்கும் அரசுக்குமிடையில் பேச்சுக்கள் நடைபெற்றுவருகின்றன.

கரோலியன்ஸ் பிறிஸ் (புருணை): மணிலா, இந்தோனேசியா இன்னும் பல நாடுகளில் மின்டோனா போராளிகளுக்கும் அரசுக்குமிடையில் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றது.

**கேள்வி:** விடுதலைப் புலிகளின் காவலிலுள்ள யுத்தக் கைதிகள் குறித்து என்ன நடவடிக்கை எடுக்கின்றீர்கள்?

ஜோ வில்லியம்ஸ்: அவர்களைச் சந்தித்து, அவர்களது விருப்பங்களைக் கேட்டறிந்துகொண்டோம். கொழும்புக்குத் திரும்பியதும் போர்க்கைதிகள் தொடர்பான பிரச்சினைக்கு உடனடிக் கவனம் செலுத்துவோம்.

**கேள்வி:** அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ உங்கள் சர்வமத குழு அமைப்பில் அங்கம் பெறுகிறாரா?

ஜோ வில்லியம்ஸ்: அவரைக் கொழும்பில் சந்தித்தோம். கென்னத் இக்குழுவில் அங்கத்துவம் வகிக்காவிடினும் அவரது கிறிஸ்தவ தேசிய சபை பிரதிநிதிகள் எமது அமைப்பில் அங்கம் வகிக்கின்றனர்.

**கேள்வி:** நாட்டின் முக்கிய அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகள் உங்கள் சர்வமத குழுவில் இருக்கின்றனரா?

ஜோ வில்லியம்ஸ்: அவர்களின் பிரதிநிதிகள் எமது சர்வமத குழுவில் இன்னும் இடம்பெறவில்லை. அவர்கள் இணையக்கூடும். வேறு பௌத்த பிரதிநிதிகள் இப்போது அங்கம் வகிக்கின்றனர். காலப் போக்கில் விரிவான சர்வமத குழுவில் அஸ்கிரிய, மல்வத்தைப் பிரதிநிதிகள் இடம்பெறுவர். ■

- மதன்

நன்றி ஈழநாதம்



# 10 ஆண்டுக

# இதே ஆடி 2

**1983** ஆடி 17ம் திகதி 'சண்டே ஒப்சேவர்'(Sunday Observer) பத்திரிகை சிறீலங்காவின் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா "இப்பொழுது நான் யாழ்ப்பாணத்து மக்களது அபிப்பிராயங்களைப் பொருட்படுத்துவதில்லை. இப்பொழுது உங்களால் அவர்களைப் பற்றி நினைத்துப் பார்க்கக்கூட முடியாது. அவர்களுடைய உயிர்களைப் பற்றியோ அல்லது அவர்கள் எங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றியோ எமக்கு அக்கறையில்லை." என இலண்டன் 'ரெலிகிராப்' பத்திரிகையின் பத்திரிகையாளர் ஒருவருக்கு 11-7-83 இல் அளித்த பேட்டி ஒன்றை மறுபிரசுரம் செய்திருந்தது.



கொழும்பு வீதியில் எரிந்த நிலையில் தமிழர் சொத்துக்கள்.

சிறீலங்கா ஜனாதிபதி கூறியது முற்றிலும் உண்மையே என இப்பேட்டி பிரசுரமாகி ஒரு வாரத்துள் கொழும்பில் தொடங்கி சிறீலங்காவின் சிங்களப் பிரதேசங்கள் முழுவதும் நடந்த இனக்கொலை மூலமான இனஅழிப்பு நிகழ்ச்சிகள் உலகுக்கு நிரூபித்தன.

ஆடி 22 இல் யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா இராணுவம் மூன்று இளம் தமிழ்ப் பெண்களை கடத்திச் சென்று கற்பழித்தது. இப்பெண்களுள் ஒருவர் தற்கொலை புரிந்து கொண்டார். இத்தகைய மக்கள் அழிப்பு நடவடிக்கைகளில் சிறீலங்கா இராணுவம் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் 1983 ஆடி 23 இல் மக்கள் அழிப்பு நடவடிக்கைக்காக புறப்பட்ட இராணுவ அணியொன்றின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் கரந்தடித் தாக்குதலை நடாத்தினர். இதனால் 13 இராணுவத்தினர் பலாலி வீதியில் திருநெல்வேலியில் பலியாகினர். இதனைச் சாட்டாகக் கொண்டு, சிறீலங்கா இராணுவம் 24ம் திகதி காலையில் மானிப்பாய் முதல் பண்டத்தரிப்பு வரை கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டை அப்பாவித் தமிழர்கள் மேல் நடாத்தினர். ஆறு பள்ளிச் சிறுவர்கள் உட்பட 9 தமிழர்கள் உயிரிழந்தனர். அதேதினம் யாழ்ப்பாணத்தில் 30 பேர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் பாதசாரிகள் மீதும் அப்பாவித் தமிழர்கள் மீதும் கொலைவெறித் தாண்டவத்தை சிறீலங்கா அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினர் நடாத்தி முடித்த கையோடு சிறீலங்கா அரசாங்கத்தின் கையாட்களாலும் பாதுகாப்புப் படையினராலும் திட்டமிடப்பட்ட கலவரம் கொழும்புப் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## வைகாசி முதல்.....

சிறீலங்கா அரசாங்கமும் அதன் ஏவலாட்களும் வைகாசி முதலே இனக்கொலைக்கான ஆரம்ப ஆயத்தங்களைச் செய்து வந்தனர். வைகாசி 11, 12ம் திகதிகளில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர்கள், சிங்கள மாணவர்களின் ஒரு பகுதியினரால் இரவிரவாக நையப் புடைக்கப்பட்டனர். அத்துடன் காலை 6 மணிக்கிடையில் பல்கலைக் கழக தமிழ் மாணவர்கள் போய்விட வேண்டுமென இச்சிங்களக் காடையர்களால் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டு ஓட ஓட விரட்டப்பட்டனர்.

இதையடுத்து தமிழ் மக்களின் அரசியல் ஏடுகளான சுதந்திரன், சற்றடே றிவியூ ஆகியவை தடைசெய்யப்பட்டு இவற்றின் ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டனர். உண்மைகள் வெளிவராது மறைப்பதற்காக பத்திரிகைத் தணிக்கை மிகக் கடுமையாக அமுலாக்கப்பட்டது. வைகாசி 18 ம் திகதி யாழ்ப்பாணத்தில் இளநிலை இராணுவ அதிகாரி ஒருவர் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குப் பலியானார். இதனைச் சாட்டாக வைத்து யாழ் நகரப் பிரதேசத்துள் நுழைந்த 600க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கடைகளை எரித்தும், வாகனங்களை எரித்தும் மீளவும் இரண்டாம் முறை யாழ் நகரத்தை தீயில் மூழ்கடித்தனர். பாதசாரிகள் தாக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக வேறிடத்திற்கு இடம்பெயர்ந்தனர்.

இதே போல் ஆனி முதலாம் திகதி வவுனியாவில் இரண்டு விமானப்படையினர் தாக்குதல் ஒன்றில் பலியானதையடுத்து வவுனியா நகரை சிறீலங்காப்படையினர் எரித்து நாசப்படுத்தினர். ஆனி மாதத்தில் தொடர்ச்சியாக இன வன்முறைகள் நாடெங்கும் கட்டவிழ்த்து விடப்பட்டன. ஆனி 4ம் திகதி திருகோணமலையில் 'மான்சன் கவுஸ்' எரிக்கப்பட்டது. திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் வீட்டிற்கு எறிகுண்டுகள் வீசப்பட்டன. இச்சம்பவங்கள் எல்லாம் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்ததின் பின்னரே நிகழ்த்தப்பட்டன என்பது இங்கு கவனிக்க வேண்டிய விடயம். இதற்கு முன்னர் 1982 ம் ஆண்டு வைகாசி 20 திகதி, 1977 ஆம் ஆண்டில் இனவன்முறையில் ஈடுபட்டவர்களை பாதுகாக்கக் கூடிய சட்டம் (Indeminity Act) ஒன்றை சிறீலங்கா அரசு அமுல் செய்தது. இதனால் சிங்களக் காடையர்கள் அரசின் ஏவலாளராக மாற்றப்பட்டுச் சட்டப்பாதுகாப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டது. "நான் முகத்தில் குத்து விடுவதுபோல் நடிப்பேன். ஆனால் வயிற்றில்தான் குத்துவேன்" என்னும் சிறீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் வார்த்தை வெறும் உதாரணக் கதையல்ல. நடைமுறையில் ஆளும் சிங்கள பௌத்த பேரினவாதிகளும் செய்ய நினைத்ததின் அடிப்படைத் தத்துவம். அதுதான் 1983 ஆடி மாதத்தின் ஆரம்பத்தில் (7-7-83) சிறீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா பிரிட்டன் 'கார்டியன்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், "பாதுகாப்புப் படைகள் சட்டத்தின் மூலம் எந்தவிதமான தொல்லைகளுக்கும் ஆளாகாதவாறு பாதுகாக்கப்பட்டாலே அவர்கள் தங்கள் கடும் ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்த முடியும்." எனப் பகிரங்கமாகக் கூறினார். இந்த அடிப்படையில் பாதுகாப்புப் படைகளினால் கொல்லப்படுவோர்களின் உடல்கள் உடனடியாக எரிக்கப்படலாம் என்னும் சட்டத்தை சிறீலங்கா அரசாங்கம் இயற்றி அமுல் செய்தது. இதனால் மரண விசாரணையோ நீதி விசாரணைகளோ எதுவுமே இல்லாது பாதுகாப்புப் படைகளினால் கொல்லப்படுபவர்களின் சடலங்கள் எரித்து அழிக்கப்படுவதும் இது இனஅழிப்பினை உலகிற்கு வெளிப்படுத்தாதவாறு தடுப்பதற்கான வழியாகும்.

இவ்வாறு உண்மைகள் வெளிவராது பத்திரிகைகளுக்கு தணிக்கை வாய்ப்பூட்டும், நீதி விசாரணைகள் தலைதூக்காதவாறு சட்டப்பாதுகாப்புக்களும் செய்து கொடுத்த சிறீலங்கா அரசின் திட்டமிட்ட நடவடிக்கையே 1983 இனக்கொலை. சிறில் மத்தியூ போன்ற சிறீலங்கா அரசின் அமைச்சர்கள் பலர் இந்த இனக்கொலைக்கான திட்டங்களை வகுத்துக் கொடுத்தனர் என்பது இன்று ஆய்வாளர்களாலும், ஐக்கிய தேசியக் கட்சியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் முகவர்களாக இருந்தவர்களே, வாக்காளர் இடாப்புடன் முன்நின்று தமிழ் வீடுகளை இனம் காட்டினர் என்பது கலவரத்தின் பின் சாட்சிகளால் நிரூபணமான உண்மை. அவ்வாறே பாதுகாப்புப் படையினர் நேரடியாக ஈடுபட்டும், கண்டுகொள்ளாமலிருந்தும் இக்கலவரத்தை தூண்டினர் என்பது மற்றொரு உண்மை.



எரிந்த நிலையில் தமிழர் வியாபார நிலையமொன்று..

இப்பின்னணியில், 1983 இல் நடைபெற்ற இனக்கொலையின் கோரத்தாண்டவத்தின் சில சம்பவங்களைப் பார்ப்போம்.

### நடு வீதியில் நடந்த கொடூரம்

யூலை 25 மதியம் 1.30 மணியளவில், கொழும்பு மாநகரின் சனநடமாட்டமான வீதியில் 18 வயதுடைய ஒரு இளம்பெண்ணும் அவரின் 11 வயது தங்கையும் சிங்களக் காடையர்களால் இழுத்துவரப்பட்டனர். அந்தப் பதினொரு வயதுப் பெண்ணை கத்தியால் வெட்டினர். "ஐயோ என் தங்கையை ஒன்றுமே செய்யாதீர்கள்" என்று கெஞ்சிய அக்காவின் முன்னாலேயே கோடரியால் தங்கையின் தலையைப் பிளந்தனர். இந்த அரக்கத்தனத்தைக் கண்ட அக்காள் மயக்கமுற்றாள். அப்பெண்ணை நடுவீதியிலேயே நிர்வாணமாக்கி இருபதுக்கும் மேற்பட்ட சிங்களக் காடையர்கள் அடுத்தடுத்துக் கற்பழித்தனர். துவண்டு மயங்கிய நிலையிலிருந்த அப்பெண்ணை அவர்கள் பின் பெற்றோல் ஊற்றிக் கொளுத்தினார்கள்.



கொழும்பு அகதி முகாமொ

இன்னொரு இடத்தில் ஓடும் பஸ் வண்டியில் ஏறுகிறது சிங்களக் காடையர் கூட்டம். 'எங்கே குங்குமம்' என்று தேடுகிறது அவர்களின் கண்கள். நெற்றியில் குங்குமத்தோடு வீற்றிருந்த பெண் ஒருத்தியைக் காண்கிறார்கள். இதோ தமிழிச்சி என்றபடியே பாய்ந்து அவளின் குங்குமத்தை ஒருவன் அழிக்கின்றான். மற்றவன் பாரக் கத்தியால் அடுத்தடுத்து அவளைக் கண்டதுண்டமாக வெட்டுகின்றான். சீறும் தமிழ் இரத்தத்தில் குளித்து மகிழ்ந்தபடியே வெளியேறுகிறது காடையர் கூட்டம். சதைசதையாக வெட்டுண்டு கிடக்கின்றது தமிழ் மகளின் உயிரற்ற உடல்.

யூலை 25ம் திகதி முழுவதும் இதே கதை. தமிழர் வீடுகளை உடைப்ப

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive


# ளுக்கு முன்பு

# 3, 24, 25 .....

தும், பொருட்களைக் கொள்ளையடிப்பதும், தமிழர்களை வெட்டிக் கொன்று குவிப்பதும் தொடர்ந்தபடியே இருந்தது. கையிலே வாக்காளர் இடாப்புடன் முன்னணியில், ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் முன் நடக்க பௌத்த பிக்குகள்கூட நடந்து உற்சாகமூட்ட, திட்டமிட்ட இனக் கொலை வெற்றிகரமாக அரங்கேற்றப்பட்டது.

சில வீடுகளில் யேசுபிரான், பிள்ளையார், தேவமாதா, முருகன் போன்ற படங்களைக் கண்ட காடையர் அப்படங்களைக் கழற்றி குப்புறக் கவிழ்த்து வைத்துவிட்டு தெய்வம் தங்களைப் பார்க்கவில்லை என்ற நம்பிக்கையுடன் முன்னேறிச் சென்று இனக்கொலை நடத்தியதும் உண்டு.

காடையன் அதிலிருந்து சொட்டும் இரத்தத்தைக் குடித்து "ஒரு புலியின் இரத்தைக் குடிக்கிறேன்.. குடிக்கிறேன்" எனச் சத்தமிட்டான். "நான் காந்தீயத்தில் நம்பிக்கை உள்ளவன்" என்று சொன்ன டாக்டர் இராஜசுந்தரத்தைக் கெஞ்சக் கெஞ்ச இரும்புச் சட்டங்களால் அடித்துக் கொன்றனர். அங்கு 16 வயதுச் சிறுவனாக இருந்த மயில்வாகனத்தை சிறைப் பாதுகாவலன் ஒருவனே அடையாளம் காட்டிக் குத்திக் கொன்றான். இப்படி எத்தனையோ வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத சித்திரவதைகள் அந்த வெலிக்கடைச் சிறைக்கூடத்துள் சிறீலங்கா அரசின் பாதுகாவலில் நிராயுதபாணிகளாக இருந்த தமிழர்கள் 53 பேர்கள் மீதும் நடாத்தி கொலை செய்யப்பட்டதுடன் அவர்கள்



...ான்றில் தங்கியிருந்த அகதிகள் உணவுக்காக வரிசையில்..

"யாழ்ப்பாணத்தில் எங்கட 13 ஆட்களைக் கொன்று போட்டாங்கள். நாங்கள் தமிழர்களை எல்லாம் கொல்ல வேண்டும்" என கோசம் எழுப்பப்பட்டதும் உண்டு.

வாகனங்கள் எரிக்கப்பட்டன. பயணிகள் வெட்டி வீசிப் பந்தாடப்பட்டனர். வர்த்தக நிலையங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. தொழில் முயற்சிகள் நிர்மூலமாக்கப்பட்டன. பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள் சேதமாக்கப்பட்டன.


இத்தனைக்கும் சிகரம் வைத்தாற் போன்ற நிகழ்ச்சி யூலை 26ம் திகதி மாலை 4.30 மணியளவில் வெலிக்கடையில் நடைபெற்றது. நானூற்றுக்கும் மேற்பட்ட சிங்களக் காடையர்கள், சிறைப் பாதுகாவலர்களால் வேண்டுமென்றே பூட்டாது விடப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளின் அறைகளுக்குள் புகுந்து அங்கு விசாரணைக்கைதிகளாக இருந்த 53 தமிழர்களைப் பயங்கரமாகக் கொலை செய்தனர். மலரும் தமிழீழத்தைக் காண்பதற்கென தங்கள் கண்களை தானம் செய்வதாகவும் அதனை வேறு ஒருவருக்குக் கொடுத்து விடும்படியும் நீதிமன்றத்தில் கேட்டிருந்த குட்டிமணி (செல்வராசா யோகச்சந்திரன்), ஜெகன் (கணேசானந்தன் ஜெகநாதன்) ஆகிய இருவரது கண்களும் தோண்டி வீசப்பட்டன. குட்டிமணியின் நாக்கை வெட்டிய ஒரு சிங்களக்

உடல்கள் கூட உருக்குலைக்கப்பட்டன.

இவ்வாறு தமிழ் இரத்தம் ஆறாக ஓடிக்கொண்டிருந்த நேரத்தில்தான் சிறீலங்கா ஜனாதிபதி ஜெயவர்த்தனா "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என்ற புகழ் பெற்ற வானொலி உரையை நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. நிராயுதபாணிகளான தமிழர்கள் யாருடன் போர் செய்தனர்? இயமனுடனா? அல்லது இயமனாக வந்த சிங்களப் பேரினவாதத்துடனா? ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்குத்தான் வெளிச்சம்.

இந்த நேரத்தில் யூலை 28ம் திகதி சிறீலங்காப் பாராளுமன்றத்தில் அரசியல் சாசனத்தின் ஆறாவது சரத்தை திருத்தி அமைப்பதில் சிறீலங்கா அரசாங்கம் அவசரம் காட்டியது. "நேராகவோ மறைமுகமாகவோ சிறீலங்காவுக்கு உள்ளோ வெளியிலோ சிறீலங்காவின் எல்லையுள் ஒரு தனியரசை நிறுவுவதற்கு ஆதரவளிப்பதோ, ஒத்துழைப்பதோ, உற்சாகமூட்டுவதோ நிதியீட்டம் செய்வதோ வழிநடத்துவதோ தடைசெய்யப்படுகிறது." என்னும் ஆறாவது சரத்து திருத்தச் சட்டத்தை அரசியல் யாப்பில் சேர்த்துக் கொண்டது. இதன்மூலம் இந்த இனக்கொலையை நடாத்தி அதன்வழி, தனிநாட்டுக் கோரிக்கைதான் அழிவுகளின் அடிப்

படையான காரணி என்ற போலித் தோற்றத்தை உருவாக்கி, இந்தக் கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்கும் மனித உரிமைக்கெதிரான சட்டத்தை நிறைவேற்றி சிறீலங்கா அரசு திட்டமிட்டுச் செயலாற்றியது. இச்சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் பாராளுமன்றத்தில் தனிநாட்டை அமைப்பதற்கான ஆணையாக 1977 தேர்தலைக் கணித்து தமிழர் பிரதிநிதிகளாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியையும் சட்ட விரோத அமைப்பாக்கியது சிறீலங்கா அரசு.



எனவேதான் 1983 யூலை 28ம் திகதியுடன் தமிழ் மக்கள் தங்களது ஜனநாயக உரிமைக்கான கடைசி அத்திவாரத்தையும் இழந்து "தங்களுக்கு ஒரு அரசு நோக்கிய அரசை (Defacto Government) நிறுவ வேண்டிய நிலைக்கு சிறீலங்கா அரசாங்கத்தால் தள்ளப்பட்டனர்.

இது ஒருபுறம் இருக்க, யூலை 28 இல் இச்சட்டம் இயற்றப்பட்டதன் பின்னர் மலையகத்தில் இனக் கொலை உச்சக்கட்டத்தை அடைந்தது. நுவரெலியவில் வைத்தியசாலை ஒன்றினுள் புகுந்த சிங்களக் காடையர்கள் அங்கு நோயாளிகளாக இருந்த 56 பேரைக் கொன்று குவித்து எரித்தனர். மாத்தளையில் மட்டும் ஒரு சில மணிநேரத்தில் 6000 பேர் வீடற்றவர்களாக்கப்பட்டனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இந்த நேரத்தில் உலகமெங்கும் இவ்வின அழிப்புபற்றி கண்டனங்கள் எழுந்தன. பிரித்தானியாவில் கூட பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பம் இட்டு நீதி விசாரணை கோரி மகஜர் கொடுத்தனர். ஆயினும் இன்று வரை சிறீலங்கா அரசாங்கம் இந்த 1983 ஆடிக் இனக் கொலை பற்றி எந்தவிதமான நீதிவிசாரணை முடிவையும் வெளியிடவில்லை. ஆனால் காலப்போக்கில் சர்வதேச சமூகம் மௌனமாகிவிட்டது. அன்று 'கார்டியனில்' செய்திகளை வெளியிட்டமைக்காக சிறீலங்கா அரசாங்கத்தின் சார்பாக இலண்டன் பத்திரிகைக் கவுன்சில் கார்டியன் பத்திரிகைக்கு எதிராக வழக்குத் தொடுத்தது. ஆயினும் பத்திரிகைக் கவுன்சில் U10477/1730 ம் இலக்க அறிவிப்பின்படி 'கார்டியன்' பத்திரிகை வெளியிட்ட செய்திகள் சரியானவை எனத் தீர்ப்பளித்தது. அன்றுபோல்தான் இன்றும் சிறீலங்கா அரசாங்கம் தான் செய்யும் இனக் கொலைகளின் உண்மைகள் உலகிற்கு வெளிவராது தடுத்து வருகிறது. ஆனால் இன்று உலகப் பத்திரிகைகளும் செய்தித் தொடர்புச் சாதனங்களும் ஏனோ அன்றுபோல் உற்சாகமாக இலங்கைத் தமிழர் நிலைகளை வெளிக்கொண்டுவரத் தயங்குகின்றன.

இந்நிலையில் மண்ணின் உண்மை நிலையினை உலகுக்கு உணர்த்த வேண்டிய வரலாற்றுக் கடமை, புலம் பெயர்ந்த தமிழர்களையே சார்ந்துள்ளது.

அத்துடன் 1983 முதல் இன்றுவரை இலங்கைத் தமிழர்களின் மேல் நடாத்தப்பட்டுவரும் இன அழிப்பு நடவடிக்கைகளை நோக்கின் 'தமிழர்களுடைய பாதுகாப்பு தமிழர்களின் கையில்' இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அவை உணர்த்துகின்றன. இதைத்தான் தமிழீழ விடுதலைப் புலிகளும் வலியுறுத்துகின்றனர். வாக்குகளால் அல்ல நிகழ்வுகளால் இத்தேவை மேலும் மேலும் நிறுவப்பட்டு வருகிறது. இதுவே 1983 ஆடி 23 தரும் படிப்பினை. ■

## SRI LANKA

### Remembering the July 1983 Violence Against Tamils

The ethnic violence which erupted in Sri Lanka in July 1983 brought untold misery to the Tamils. They were beaten, hacked and burnt to death in a frenzy of racial hatred. Their houses and businesses were selectively looted and destroyed. The Sri Lankan government had admitted that the violence was pre-planned and well organised and that even sections of the security forces joined in the attacks against the Tamils. 53 Tamil detainees held in a maximum security prison in Colombo were brutally killed on July 25th and 27th. Yet, to date, no impartial inquiry into these violent attacks has taken place.

Amnesty International (AI) recently reported a number of cases of extrajudicial killings and secret disposal of bodies without inquest or post-mortem. The AI and the International Commission of Jurists (ICJ) have also reported on a number of cases of torture and death in custody, of persons detained incommunicado for periods of up to 18 months under the Sri Lankan Prevention of Terrorism Act. "No legislation conferring remotely comparable powers is in force in any other free democracy . . . such a provision is an ugly blot on the statute book of any civilised country" (ICJ).

The Sixth Amendment to the Constitution has virtually disenfranchised the country's 3 million Tamils by reason of the ban imposed on their political parties. This Amendment according to the ICJ, "constitutes a clear violation by Sri Lanka of its obligations in international law". The one million Tamils working in the tea plantations, who were deprived of nationality, citizenship and franchise in 1948 continue to remain stateless persons.

WE ARE OF THE OPINION THAT :

- An impartial international commission should be set up to inquire into the violence against the Tamils in July 1983 including the killing of 53 Tamil detainees held in custody by the government.
- The Prevention of Terrorism Act should be repealed and the powers given to the security forces which facilitate arbitrary killing of civilians and disposal of their bodies without inquest or post-mortem should be rescinded.
- The use of torture and incommunicado detention in violation of Sri Lanka's obligations under International Covenants should be discontinued.
- The rights of nationality, citizenship and franchise to the Tamils working in the plantations should be restored.
- The Sri Lankan government should repeal the Sixth Amendment to the Constitution and take meaningful steps to arrive at a political solution to the country's ethnic problem by the granting of the legitimate rights of the Tamil people of Sri Lanka.

Signed by :
David Alton MP
Paddy Ashdown MP
Norman Atkinson MP
Tony Banks MP
Prof John Barrett
Kevin Barron MP
Tony Benn MP
Gerry Bermingham MP
Alan Beith MP
Sydney Bidwell MP
Prof Tom Bottomore
Malcolm Bruce MP
Dale Campbell-Savours MP
Dennis Canavan MP
Alex Carlile MP
Tom Clarke MP
Bob Clay MP
Anne Clwyd MP
Harry Cohen MP
Jeremy Corbyn MP
Ron Davis MP
Eric Deakins MP
Alf Dubs MP
Prof Michael Dummett
Derek Fatchett MP
Mark Fisher MP
Martin Flannery MP
Michael Foot MP
Roy Hattersley MP
Simon W. H. Hughes MP
Lord Jenkins
Russell Johnston MP
Robert Kilroy-Silk MP
Archy Kirkwood MP
Ted Knight
Sir David Lane
Terry Lewis MP
Bob Litherland MP
Ken Livingstone
Tony Lloyd MP
Eddie Loyden MP
Max Madden MP
Joan Maynard MP
Willie McKelvey MP
Bill Michie MP
Dr Paul Noone
Bob Parry MP
Allan Roberts MP
Ernie Roberts MP
Allen Rogers MP
Aubrey Rose
Ernie Ross MP
Steven Ross MP
Clare Short MP
Dennis Skinner MP
Prof Peter Townsend
Jim Wallace MP
Gareth Wardell MP
Dafydd Wigley MP
And many others




விடுதலைப்புலிகள் இயக்க முகாம்கள் எல்லாமே ஒவ்வொரு குடும்பம் போன்றவை. ஒரு குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் மற்றவரை எவ்வளவுக்கு நேசிப்பார்களோ அதேபோலத்தான் இங்கும் இருக்கும். அதைப் போலத்தான் சின்னச் சின்னப் பிரச்சினைகள் தோன்றும். பின்னர் சமாதானமாவார்கள். ஆனால் ஒரேயொரு பிரச்சினையில் மட்டும் இலகுவில் சமாதானம் தோன்றாது. அது தாக்குதல்களுக்கு தம்மைக் கூட்டிக் கொண்டு போகாமல் விடுவதால் வரும் பிரச்சினை. இந்த ஒரு விடயத்தில் மட்டும் தமக்கு அநீதி இழைக்கப் பட்டதாகக் குமுறுவார்கள். இந்த விடயத்தைக் கிளப்பும் ஒருவன் எந்த விளக்கத்தையும் கேட்கத் தயாரில்லாதவனாகவே இருப்பான். அவனது இதயத்தின் குமுறல் அடுத்த போர்க்களத்தில் துப்பாக்கியை இயக்கும் வரை ஓயாது.

இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவனாக இருந்த றெஜிக்குக் கூட இந்த மனோபாவம் இருந்தது. பயிற்சி எடுத்து முடித்திருந்த காலத்தில் எந்த மோதலுக்குமே சந்தர்ப்பம் கிடைக்காமல் குமுறினான் அவன். அந்தக் காலத்தில் கிடைத்த சந்தர்ப்பங்களிலும் ஏனையோர் தான் தாக்குதலில் ஈடுபட்டனர். இந்தத் தாக்குதலில் ஈடுபட்டோரைவிட றெஜி வயதில் கூடியவன். இதைப் பார்க்கும்போது அவனுக்கு இன்னும் கோபம் வந்தது. ஒரு நாள் கோபத்துடன் கூறினான்: "நான் தலைவருக்குச் சொல்லப் போறன் எனக்குப் பென்சன் தாருங்கோ எண்டு. இவ்வளவு காலம் இயக்கத்தில இருந்தும் இன்னும் சண்டைக்குப் போகாமல் இருந்திருந்து வயசும் ஏறிப் போச்சு. இந்தப் போக்கில போனா 55 வயசிலையும் பீல் டுக்குப் போறது சந்தேகம். பேசாமல் பென்சன் கேட்டிட்டா நல்லது" என்றான். பின்னர் அவனது போராட்ட வாழ்க்கையில் கிடைத்த முதல் சந்தர்ப்பமான ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத் தாக்குதலின் போது உள்ளே அவன் சென்ற வேகம் -சண்டையிட்ட விதம் -"என்னை இத்தனை நாள் சண்டையிட அனுமதிக்காதது எத்தனை பெரிய தவறு" என்று கேட்பதைப் போல இருந்தது.

இயக்கத்தின் மூத்த உறுப்பினனான றெஜியாலேயே, தன்னை தாக்குதலுக்கு அனுப்பாததற்கு விசேட காரணம் எதுவும் இல்லை என்பதை ஒப்புக் கொள்ள முடியவில்லையானால், முகாமில் எல்லோருக்கும் பிரியமானவனாக -எல்லோருக்கும் சின்னவனாக இருந்த கெங்காவால் மட்டும் எப்படி அந்த நிலையைச் சகித்துக் கொள்ள முடியும்? அதுவும் நாம் வாழ்வதற்கான போராட்டம் இது என்பதை எமக்கு உணர்த்திக் கொண்டிருக்கும் திருமலை மண்ணில் பிறந்த அவனால் -அவனைத் தவிர்த்து -அவனது கண்ணுக்கு எதிரேயே -ஏனையோர் சிறீலங்காப் படைகளுக்கு எதிரான தாக்குதலுக்காகப் புறப்படுவதை எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? தாக்குதலுக்கு அவனைக் கூட்டிச் செல்லாத முகாம் பொறுப்பாளர் அவனது முகத்தில் சிரிப்பை எதிர்பார்ப்பதற்கு என்ன நியாயமுண்டு? சிரிக்காதது மட்டுமல்ல அவர்களுடன் கதைக்காமல் கோபம் போட்டும் விடுவான் கெங்கா. அவனைச் சமாதானப்படுத்துவதென்றால் -மீண்டும் அந்த முகாம் பொறுப்பாளருடன் -அவன் கதைக்க வேண்டுமென்றால் -நிச்சயம் அடுத்த தாக்குதலில் பங்கு பற்ற அவன் அனுமதிக்கப்பட வேண்டும்.

1985 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இயக்கத்துடன் இணைந்து கொண்ட கெங்காவின் சொந்த இடம் திருமலை நகரிலிருந்து 16 மைல் தொலைவில் உள்ள கும்புறுபிட்டி என்ற கிராமமாகும். தந்தையை இழந்த இவனுக்கு தாயைத் தவிர எந்தச் சொந்தமுமில்லை. அவனது உலகம் -குடும்பம் எல்லாமே இயக்கம்தான். அண்ணா -அக்கா -தம்பி -தங்கச்சி எல்லா உறவையும் அவன், இந்தப் போராட்டத்தை நேசித்தவர்களிடமே கண்டான். அதேபோல் பிறராலும் நேசிக்கப்பட்டான்.

இவனது கடின உழைப்பு, போராட்டத்தின் மீது இவன் கொண்ட பற்று என்பன ஏனையோருக்கு முன்மாதிரியாக இருந்தன. பன்குளம், தம்பலகாமம், சாம்பல்தீவுப் பகுதிகளில் சிறீலங்காப் படையினர் மீது மேற்கொள்ளப் பட்ட [illegible] வெற்றிக்கு இவனது கடினமான உழைப்பே காரணமாக இருந்திருக்கின்றது.

இவன் பங்கு பற்றிய தாக்குதல்களில் இரு தாக்குதல்கள் இவனுடன் பழகிய போராளிகளால் மறக்கப்பட முடியாதவை. சிங்கள குடியேற்றத்தால் மொறவேவா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட முதலிக்குளம் பகுதியில் சிறீலங்கா விமானப் படையினரின் ட்றக் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் அந்த மண்ணுக்குச் சொந்தம் இல்லாத வெதமாத்தயா என்ற ஆக்கிரமிப்பாளன் உட்பட 23 பேர் கொல்லப்பட்டனர்.

சிறீலங்காப் படையினரை முழுமனிதராகக் கணித்துப் பழக்கமில்லாத லங்கா புவத் இச்சம்பவத்தில் இரு உயர் அதிகாரிகள் உட்பட எட்டுப் படையினரும் ஒரு பொதுமகனும் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தது. கொல்லப்பட்டவர்களில் எயர்லீட்ர் கிறஸ்லெக், எயர்லீட்ர் பெர்னான்டோ, விமானப்படை தொழில்நுட்பவியலாளர்கள் ஜே. பி. ஜீ. பெர்னான்டோ, பி. எம். டீ. ஆர். வீரசிங்க, ஐ. எல். இந்திரசாந்த மற்றும் ஆர். டீ. கொட்டாச்சி, வீரசிங்க லாமசிறி, என். ஏ. கே. லக்ஸ்மன், ஏ. ஜீ. பியதாச என்ற படை வீரர்களும், கவேணவத்த வெத மாத்தயா என்ற பொதுமகனும் கொல்லப்பட்டதாகக் குறிப்பிட்டது.



**கெங்கா**

(ஆனந்தராஜா சுந்தரராஜா)

திருமலை

23. 08. 67 - 02. 10. 86

சாம்பல்தீவில் சிறீலங்காப் படையின் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரமரணம்

அந்துடன் தாக்குதலுக்கு உள்ளாகிய ட்றக்கின் எஞ்சின் 100 மீற்றர் தூரத்தில் காணப்பட்டதாகவும், பலியான படைவீரர்களின் உடல்கள் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தூரம் வரை சிதறுண்டு கிடந்ததாகவும் குறிப்பிட்டது.

அப்போதைய திருமலை மாவட்டப் பொறுப்பாளர் லெப். கேணல் சந்தோசம் தலைமையில் நடைபெற்ற இத்தாக்குதல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இதேபோல குரங்குப் பாலத்தில் சிறீலங்காப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இவன் செயற்பட்ட விதம் இவனுடன் பழகிய போராளிகளால் மறக்கப்பட முடியாததாகும். இத்தாக்குதலில் எப்படியும் தான் ஒரு ஆயுதத்தைக் கைப்பற்றிவிட வேண்டும் என்ற வைராக்கியம் இவனுள் எழுந்தது. சரமாரியாகப் பொழிந்து கொண்டிருந்த துப்பாக்கி வேட்டுக்களின் மத்தியில் காயப்பட்டுக் கிடந்த சிறீலங்காப் படைவீரனை நோக்கி இவன் ஓடிய வேகம் -அவனது ஆயுதத்தைக் கைப்பற்றிக் கொண்டு வந்த திறமை -இவையெல்லாம் விவரிப்பதற்கு வார்த்தைகள் இல்லாத காட்சிகளாகும்.

ஒவ்வொரு தாக்குதலின் முடிவிலும் 'கெங்கா இப்படிச் செய்தான்' என்றெல்லாம் கதைத்துக் கொண்டிருக்கும் போராளிகள் 02-10-1986 இல் சாம்பல் தீவுப் பகுதியில் [illegible] முற்றுகையைப் [illegible] கதைப்பதில்லை. ஏனெனில் துக்கம் அவர்கள் வாயை அடைத்துக் கொள்ளும். அந்த முற்றுகையை முறியடித்துக் கொண்டு திரும்பியவர்களில் இவனும் கடைசியிலும் [illegible] இல்லை. காயமடைந்த நிலையில் தனது உடலில் உயிர் ஒட்டியிருப்பது இவனுக்காகத்தான் என்றிருந்த இவனது தாய்க்கு அவன் கேட்க விரும்பாத செய்தியைச் சொன்னார்கள் போராளிகள். ■

## பலமான சிந்..

புனிதம் குடும்பத்தினர் காலைச் சாப்பாடு சாப்பிட்டு மத்தியானச் சாப்பாடு சாப்பிட்டு அதுவும் ஜீரணமாகிவிட்டது... கடுகன்...?

"அப்ப சாப்பிடன்..."

"கட்டித் தாருங்கோ..."

"நீ சாப்பிடு... உன்ரை அம்மாவுக்குக் கட்டித் தாறன்..."

"நீங்கள் கட்டித் தாருங்கோ..."

எவ்வளவுதான் பசியாக இருந்தாலும் அவன் தனித்துச் சாப்பிடமாட்டான்.

புனிதம் பழைய பத்திரிகை ஒன்றை எடுத்துக் கொண்டு சாப்பாடு கட்டுவதற்காகக் குசினியை நோக்கிச் சென்றாள்.

"ஐயா..."

"என்ன கடுகன்..."

"......." கடுகன் கேள்விக் குறியோடு மௌனமாக செல்வராசாவைப் பார்க்கிறான்

"என்னடா கடுகன்..."

"... இந்தப் பழைய அல்பத்தை எனக்குத் தாறீங்களா...." முன்பு கேட்ட அதே கேள்வி!

செல்வராசா பதில் எதுவும் கூறாமல் தடித்த கண்ணாடிக் கூடாக, கடுகனைக் கூசிக் கூசிப் பார்க்கிறார்.

ஆஸ்பத்திரி வீதியையும், ஸ்ரான்லி வீதியையும் இணைக்கின்ற தார்றோட்டு. இந்த றோட்டில் புகையிரதக் கடவையைத் தாண்டி வலதுபக்கமாக அமைந்துள்ள குறுக்கு வீதியில், முதலாவது வளைவில் அமைந்துள்ள மாடிவீடு. 'புனித மகால்' -இதுதான் செல்வராசாவின் வீடு. செல்வராசாவுக்கு மூன்று பிள்ளைகள். மூத்த இரண்டும் ஆண்கள். கடைக்குட்டி பெண். ஆண்கள் இருவருமே வெளிநாட்டில் இருக்கின்றனர். பெண் பிள்ளை மட்டும் இங்கு இருக்கின்றாள்.

இந்த வீட்டின் ஐந்து அங்கத்தவர்களுக்கும் தனித்தனி அல்பங்கள் உண்டு. ஒவ்வொருவரின் அல்பங்களிலும் அவர்களின் பிறந்தநாள் படங்கள் தொடக்கம் வரிசைக் கிரமத்தில் ஒட்டப்பட்டுள்ளன.

மூத்தமகன் இந்த அல்பத்தை அனுப்பியபோது 'இந்த அல்பத்தில் உள்ள படங்களை ஒட்டி வையுங்கள்' என்ற குறிப்பையும் எழுதியனுப்பியிருந்தான். இன்னும் நான்கு அல்பங்கள் வெளிநாட்டிலிருந்து மகன் அனுப்புவான் என்பதைச் செல்வராசா அறிந்துக் கொண்டு இப் புதிய அல்பத்தில் தனது படங்களை ஒட்டுகிறார்.

படம் ஒட்டி முடிகிறது.

சப்பாணி கொட்டி அமர்ந்திருந்த செல்வராசா எழும்பி பக்கத்திலிருந்த குசன் செற்றியில் அமர்ந்து, மடியில் அல்பத்தை வைத்துப் பக்கங்களைப் புரட்டுகிறார். கண்ணாடிக்கூடாக அவரது பார்வைக்கோடுகள் மிகவும் சிரமப்பட்டு ஒவ்வொரு படமாக மேய்கின்றன!

தனது வாழ்க்கையைத் தானே இரை மீட்கிறார்.... இறந்தகாலத்தை மட்டுமல்ல, எதிர்காலத்தைப் பற்றியுமே. எதுவுமே புரியாத கடுகனும் அந்தப் புகைப் படங்களைப் பார்க்கிறான்!

செல்வராசாவின் முகத்தில் நிறைவு.

கடுகனின் முகத்தில் பெருமை!

புனிதம் பார்சலோடு வருகிறாள். பார்சல் கடுகனின் கைக்கு மாறுகிறது.

பார்சலைப் பெற்றுக்கொண்ட கடுகன், புனிதத்தின் முகத்தைப் பார்க்கிறான். அவனது பார்வையைப் புரிந்து கொண்ட புனிதம் அந்தப் பழைய அல்பத்தை எடுத்து அவனிடம் கொடுக்கிறாள்.

கடுகனுக்குப் பெரும் மகிழ்ச்சி. கடுகன் புறப்படுகிறான்.

கடுகன் சென்று பத்து நிமிடங்களில், வெளியே சென்றிருந்த செல்வராசாவின் மகள் வதனா வருகின்றாள். இவர்களின் வீடு அமைந்திருக்கும் வரிசையில் ஐந்தாவது வீட்டில் கடுகன் அமர்ந்திருக்கும் செய்தியை வதனா கூறுகின்றாள்.

புனிதம் அச்செய்தியை வழமைபோல் சாதாரணமாகவே எடுத்துக் கொள்கிறாள்......

ஆனால் செல்வராசா.... அவர் காரியக்காறன்..... கண்ணாடிக் கூடாக வதனாவைப் பார்க்கிறார்.... அப்பார்வைக் கோட்டில் கடுகனைப் பற்றிய கேள்வி பளிச்சிடுகின்றது!

அல்பத்தை வைத்துவிட்டு சேட்டை எடுத்துப் போட்டுக்கொண்டு புறப்படுகின்றார்.

"அவன் இருந்தால்... உங்களுக்கென்ன... நீங்கள் போகாமல் இருங்கோ... " செல்வராசா முன்கோபக்காரர். அதை உணர்ந்திருந்த புனிதம் அவரை மறிக்கிறாள்.

"இல்லை புனிதம்.... எந்தப் பற்றுமே... இல்லாத கடுகன் அல்பத்துக்கு ஆசைப்படுகிறானெண்டால்... இவன்ரை மனதுக்குள்ளை ஏதோவொரு ரகசியம் இருக்கவேணும். அதை என்னெண்டு அறியவேணும்..."

செல்வராசா புறப்படுகின்றார்.

ஐந்தாவது வீடு.

[illegible] தவிர ஏனைய பகுதிகள் [illegible] வீடு. இந்த வீட்டின் முன்வீட்டின் கீழ்த்தான் கடுகன் இருக்கின்றான்.

நேரம் ஐந்து மணியைத் தாண்டிவிட்டது. மனிதரே இல்லாத இடிந்துபோன அந்த வீட்டில் தனித்திருந்து கடுகன் என்ன செய்கின்றான்?

செல்வராசாவின் பார்வைக்கு கடுகன் அமர்ந்திருப்பது தெரிகின்றது. கடுகன் கால்கள் இரண்டையும் விரித்து, நீட்டி அமர்ந்திருக்கின்றான். அவனது முதுகுப்புறமாகச் சத்தமிடாது செல்வராசா செல்கிறார்.

செல்வராசா கடுகனை அவதானித்து நிற்கிறார்.

[illegible]

தொடர்ச்சி [illegible] பக்கம் ....

சிறு கதை

# பலமான சிந்தனைகள்

கே.ஆர்.டேவிட்

"ஐயா... எனக்கொரு படம் ஒட்டிற புத்தகம் தாறீங்களா..." இதுவரை மௌனமாக நின்ற கடுகன் திடீரென்று இப்படிக் கேட்கின்றான். கடுகன் இப்படிக்கேட்பானென்று செல்வராசாவோ, புனிதமோ எதிர்பார்க்கவில்லை.

கடுகனுக்கு ஏற்பட்ட ஆசையை உணர்ந்து கொண்ட செல்வராசா அவனை ஆச்சரியத்தோடு பார்க்கிறார். புனிதம் வாய்விட்டுச் சிரிக்கின்றாள்.

'படமொட்டுற புத்தகம்' என்று அவன் புகைப்படங்கள் ஒட்டுகின்ற அல்பத்தைத்தான் கேட்கின்றான். அல்பம் என்று கேட்டுவிட அவனுக்குத் தெரியவில்லை.

தன்னைப் பார்த்துச் சிரிக்கின்ற புனிதத்தையும், தன்னை ஆச்சரியத்தோடு பார்க்கின்ற செல்வராசாவையும் மாறிமாறிப் பார்க்கின்றான் கடுகன்.

"எடை கடுகன்... உனக்கேனடா அல்பம்..." செல்வராசா தனது வழமையான தடித்த குரலில் கேட்கின்றார். கடுகன் எதுவும் கூறாமல் பிடரி மயிருக்குள் விரல்களைப் புதைத்துச் சொறிகின்றான்.

கடுகன் பிச்சைக்காரன்... இவன் அல்பத்திற்கு ஆசைப்படலாமா,...? சமுதாயத்தின் மேடு பள்ளங்களையும் அதன் நிலைகளையும் புரியாத கடுகன் தனது மனதில் பட்டதைக் கேட்டுவிட்டான்!

"எடை கடுகன்"

"என்னையா...."

"உன்னட்டை உன்ரை போட்டோ இருக்கா"

"இல்லை"

"உன்ரை அப்பாவின்ரை போட்டோ..."

"இல்லை..."

"உன்ரை அம்மாவின்ரை...."

"இல்லை..."

"பிறகு உனக்கேனடா படம் ஒட்டிற புத்தகம்..." தனது கண்ணாடியைச் சுட்டுவிரலால் மேல் நோக்கித் தள்ளியவாறு கேட்கின்றார் செல்வரராசா.

கடுகன் பிடரியைச் சொறிகின்றான். கண்முளிக்காத நாய்க்குட்டியின் கண்முளிகள் துடிப்பதைப் போல் அவனது மனத்துள் ஏதோவொரு உணர்வு துடிப்பதை அவனது முகம் காட்டுகின்றது. அவன் எதுவும் பேசவில்லை.

முன்மண்டப வாசலோடு சப்பாணி கட்டியமர்ந்திருக்கும் செல்வராசா பழைய அல்பத்திலுள்ள புகைப்படங்களை உரித்தெடுத்து புதியதொரு அல்பத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிறார். அவரது மனைவி புனிதம் அவருக்கருகே அமர்ந்து புகைப்படங்களை இரசித்துக் கொண்டிருக்கிறாள்.

கடுகன் முன்மண்டபப் படிக்கட்டில் குந்தியமர்ந்திருக்கின்றான்.

மிகப் பெரியளவான, மிகவும் அழகான தொரு அல்பம், சென்ற கிழமை செல்வராசாவின் மூத்த மகன் வெளிநாட்டிலிருந்து வாங்கி அனுப்பியிருந்தான். படிக்கட்டில் குந்தியமர்ந்திருந்த கடுகன் அந்தப் புதிய அல்பத்தைத் தடவிப் பார்க்கின்றான். அவனது கைகள் வழுக்கிக் கொண்டு வருகின்றன... அவனது முகத்திலே பெரும் ஆச்சரியம்!

"ஐயா... இந்தப் புத்தகம் என்ன விலை வரும்..."

"கடுகன்... இது இதைப் புத்தகம் என்டு சொல்றதில்லை... அல்பம் என்டு சொல்ல வேணும்..." புனிதம் சிரித்தபடி கூறுகின்றாள்.

"அம்மா இந்த அல்பம் என்ன விலை வரும்...."

"இந்தச்சந்தையில் விலைக்கு ஆயிரம் ரூபா வரும்..." புனிதம் இப்படிக் கூறியதும், கடுகன் தலையைக் குனிந்து எதையோ சிந்திக்கின்றான்.

"ஒரு நாளைக்கு ஒரு ரூபாப்படி சேர்த்தாலும்... ஆயிரம் நாள் போனால் தான் நான் இப்படி ஒண்டை வாங்கலாம்..." கடுகன் தனக்குத் தானே கூறிக்கொள்கிறான்.

செல்வராசா தொடர்ந்து படங்களை ஒட்டிக் கொண்டிருக்கிறார். கடுகன் பார்த்தபடி இருக்கின்றான். செல்வராசா கண் பார்வை குறைந்தவர். கண்ணாடி போட்டாலும் கூசிக் கூசித்தான் பார்ப்பார்.

கடுகன் -

காந்தன். இவனது பிறப்புச் சாட்சிப்பத்திரத்தோடு ஒட்டியுள்ள இவனது உண்மைப் பெயர் இதுதான். பதினெட்டு வயதிருக்கும். சிவந்த ஒட்டியுலர்ந்த தோற்றம், பருத்த கண்கள் மொட்டையாக வெட்டப்பட்ட தலைமயிர், 'லோங்ஸ்'-ஒன்றை வெட்டிக் குறைத்துக் களிசானாகப் போட்டிருக்கின்றான். கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு மேலாக இந்த ஒரே களிசானைத்தான் போட்டிருக்கின்றான்.

இவன் இருதய வருத்தக்காரன். இவனது தாய் இவனை வருத்தக்காரனாகவே பெற்றெடுத்தாள்.

தாயின் வயிற்றில் கடுகன் கருவாக உருப்பெற்றபோது அவளின் கருப்பை நிறைந்ததே தவிர இரைப்பை நிறையவில்லை..... இரைப்பையில் வறுமையின் வெக்கை.... கடுகன் நோயாளியாகவே ஜனித்தான்!.... அவனுக்கு இதயத்தில் துவாரம்... பாவம்!

இருதய நோயாலும் வறுமையாலும் உருகிப்போய் உருவத்தில் மிகவும் நோஞ்சானாகிவிட்ட இவனை 'கடுகு' என்று உருவகப்படுத்திய ஊரார், அதையே 'கடுகன்' என்றாக்கிவிட்டனர்.

காந்தன் கடுகனானான்!

இனப்பிரச்சினை முற்றி - வெடித்து தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில், தமிழர்களின் பிணங்கள் மிதிபட்ட காலம்.... இந்திய இராணுவம் தமிழீழத்துக்கு வந்தது ... மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததைப் போல், சிங்கள இராணுவத்தின் பலிக்களத்திலிருந்து தப்பிய தமிழர்களை இந்திய இராணுவம் பலியெடுத்தது!

இந்திய இராணுவத்தின் இந்த மனித வேள்விக்கு கடுகனின் தகப்பனும் பலியானான்.

கரப்பு வியாபாரியான கடுகனின் தகப்பனை இந்திய இராணுவத்தினர் குறி வைத்துச் சுட்டனர்!

'ஆண்டிக்குடும்பமாக' இருந்த கடுகனின் குடும்பம் 'ஒட்டாண்டியானது'.

இரண்டு வருடங்களுக்கு முன்பு -ஒரு நாள் -தற்செயலாக கடுகன் செல்வராசா வீட்டுக்கு வந்திருந்தான்.

புனிதம் ஆட்டிறச்சியும் சோறும் கொடுத்தாள்! அன்றுதான் கடுகனும் அவனது தாயும் வயிறு நிறையச் சாப்பிட்டனர்.... அதையும் சுவைத்துச் சாப்பிட்டனர். அதன் பின்பு கடுகன் கிழமையில் இரண்டு தடவையாவது இங்கு வருவான். ஊரெல்லாம் திரிவான் எங்குமே சாப்பாடு கிடைக்கவில்லையென்றால் நிச்சயமாக புனிதம் வீட்டுக்கு வருவான்.

புனிதம் சாப்பாடு கொடுப்பாள் -சுவையாகக் கொடுப்பாள் -வயிறு நிறையக் கொடுப்பாள்!

இந்த மண்ணில் புனிதமானவர்களில், புனிதமும் ஒருத்தி!

இப்போது நான்குமணி -

விடிந்து, இதுவரையில் வீடுவீடாக அலைந்து தோல்வி கண்ட கடுகன், இறுதி நம்பிக்கைக்குரிய புனிதத்தை நாடி வந்திருக்கிறான்! -

புனிதம் படங்களை ஒழுங்குமுறையில் எடுத்துக் கொடுக்க செல்வராசா புதிய அல்பத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிறார். பெருமளவு படங்கள் ஒட்டப்பட்டு விட்டன.

கடுகனின் வயிற்றுத்தோல் முதுகெலும்போடு ஒட்டிப்போய்க் கிடக்கின்றது. சிலுவையில் தொங்குகின்ற யேசுவின் வயிற்றைப் போல்.... அந்தப் பசியையும் மறந்து அல்பத்தைப் பார்க்கின்றான் கடுகன்.

"அம்மா..... புது அல்பத்தில் படங்களை ஒட்டினால் பழைய அல்பம் உங்களுக்குத் தேவைப்படாதுதானே.... அதை எனக்குத் தாறீங்களா..." புனிதத்திடம் கேட்கின்றான்.

இவ்வளவு நேரமும் கடுகனின் செயலை செல்வராசா பகிடியாக எடுத்துக் கொண்டார். ஆனால், இப்போது கடுகன்.... பிரச்சினைக்குரியவனாகி செல்வராசாவின் மனதில் கேள்விக்குறியாகின்றான்.

புனிதம் .... அவள் என்றுமே எதையும் பெரிய பிரச்சினையாக எடுப்பதில்லை.

செல்வராசா சுட்டுவிரலால் கண்ணாடியை மேல்நோக்கித் தள்ளிவிட்டு கடுகனைப் பார்க்கின்றார். செல்வராசா மிகவும் அனுபவசாலி. அவரின் பார்வைக் கோடு கடுகனின் முக உணர்வுகளை ஊடறுத்து இதயம் வரை நீள்கிறது....





கடுகன்.... நிரந்தர நோயாளி. இன்றோ நாளையோ இறந்துவிடப் போகின்றவன்.... பிச்சைக்காரன்.... அவனிடம் ஒரு போட்டோ கூட இல்லை.... இருந்தும் ஒரு அல்பத்திற்காக ஆசைப்படுகிறான்!....

பிச்சைக்காரர்கள் உணவு கேட்பார்கள். சிலவேளைகளில் உடுப்புக் கேட்பார்கள்.... ஆனால் இவன்.... கடுகன்.... எந்தவகையிலும் பொருந்தாத அல்பத்தில் ஆசைப்படுகிறான்....

.... பசியைக்கூட மறந்து 'அல்பத்தில்' ஆசைப்படுகிறான்....

இதுவரையில் எதையுமே வாய்விட்டுக் கேட்காதவன்.... இப்போது இந்த அல்பத்தைக் கேட்கின்றான்....

உறவென்று சொல்ல.... தாயைத் தவிர வேறொருவருமில்லை... இவனுக்கேன் அல்பம்?....

யாருடைய படங்களை ஒட்டிவைத்துப் பார்க்க ஆசைப்படுகிறான்?....!

கண்வெட்டாமல் கடுகனைப் பார்த்துக் கொண்டிருந்த செல்வராசாவைப் புனிதம் அவதானிக்கிறாள்....

"கடுகன் ஆசைப்படுகிறான்... அந்தப் பழைய அல்பத்தை அவனுக்குக் குடுங்கோ...." புனிதம் சிபார்சு செய்கிறாள்... புனிதம் ஏழைகளிடம் மட்டுமல்ல, சகலரிடமும் இரக்கமுள்ளவள். தன்னிடம் மற்றவர்கள் அன்பு செலுத்துகிறார்களோ இல்லையோ என்பதைப் பற்றி அவள் அலட்டிக் கொள்வதில்லை. எல்லோரிடமும்தான் அன்பைச் செலுத்திக் கொள்வாள்.

கடுகன் மீது தனது பார்வையைச் செலுத்தியிருந்த செல்வராசா, அதிலிருந்து விடுபட்டு மீண்டும் புதிய அல்பத்தில் படம் ஒட்டுவதில் ஈடுபடுகின்றார்.

கடுகன் மௌனமாக இருக்கிறான்.

நாவாந்துறை வீதியும் ஓட்டுமடம் வீதியும் சந்திக்கின்ற அந்தச் சந்தியில், முன்பு சைக்கிள் கடையாக இருந்த ஒரு கொட்டில். அந்தக் கொட்டில்தான் கடுகனின் குடியிருப்பு. இந்தக் கொட்டிலை யார் கட்டினார்கள், இந்த நிலம் யாருக்குச் சொந்தமானதென்ற விபரங்கள் எதுவுமே கடுகனுக்குத் தெரியாது. இனக்கலவரத்தால் இடம்பெயர்ந்து வந்தார்கள்... இந்தக் கொட்டிலில் குடியேறினார்கள் அவ்வளவுதான்!

இவனைப் பெற்ற அன்னையோ... அவளுக்கிப்போது நாற்பத்தெட்டு வயது. ஆனால் பார்ப்பவர்கள் எண்பத்திநான்கு வயது மதிப்பார்கள்... உணர்வுகள் அகால மரணமாகி, உடலால் முதிர்வடைந்தவள்... 'மூட்டு வருத்தம்'. எந்த நேரமும் கொட்டிலின் வாசலில் குந்தியிருப்பாள்.

கடுகன் வீடுவீடாகத் திரிந்து... கிடைக்கின்றதோடு மாலையில் வீடு திரும்புவான். அதன் பின்புதான் அவர்களின் சாப்பாடு...!

ஒரு சோற்றுப் பருக்கை கிடைத்தாலும் கடுகன் அதை வீட்டுக்குக் கொண்டு வந்து தாயோடுதான் சாப்பிடுவான்.

நாட்பழக்கத்தால் ஏற்பட்டதொரு பழக்கம்! "கடுகன் இன்றைக்கு ஏதாவது சாப்பிட்டியா?" புனிதம் கேட்கிறாள்.

"இல்லை"

தொடர்ச்சி 10ம் பக்கம் ....

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# ஆடி – 83 ஒரு நினைவு மீட்பு!

**1983** ஆம் ஆண்டு - பொஸ்னியாவும், சோமாலியாவும் இன்று எவ்வாறு சர்வதேச செய்தித் தாள்களில் பெரிதாய்ப் பேசப்படுகின்றனவோ, அதே போல் ஈழத்தமிழர்கள் மீது நடைபெற்ற வன்முறைகள், அநீதிகள்பேசப்பட்ட காலம். "துருப்புக்கள் தெருவிலே, குழந்தைகளும் அவ்வாறே" என்று கூறி இலங்கை வரைபடத்தோடு விளம்பரம் போட்டு SAVE THE CHILDREN FUND எமக்காக இரந்த காலம்.

பொஸ்னிய மக்களின் துயரம் ஒன்றரை ஆண்டுகளாகியும் இன்னும் தொடர்கின்றது. ஈழத்தமிழர்களின் துயரம் பத்தாண்டுகளுக்கு மேலாய்த் தொடர்கின்றது. இன்றும் கேட்பார் எவருமில்லை.

83 இல் இலங்கையில் நடந்த வன்முறைகளை உலக செய்தித்தாள்கள் விரிவாக வெளியிட்டிருந்தன. சிறீலங்கா இராணுவமும், பொலிசும் அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றதன் ஆதாரங்களைச் செய்திகள், பேட்டிகள் மூலம் வெளிப்படுத்தின. வெலிக்கடைச் சிறையில் நடத்தப்பட்ட கொலைகள் பற்றி விரிவாகக் கட்டுரைகள் தீட்டின. இருந்தும் என்ன பயன்? அங்கே இதுவரை முழுமையாக விசாரணைகள் நடத்தப்படவில்லை. குற்றம் இழைத்த எவரும் தண்டிக்கப்படவுமில்லை.

83 கலவரம் நடந்து பத்தாண்டுகள் கழியும் இந்நேரத்தில் அன்று சர்வதேச செய்தித்தாள்கள் வெளியிட்ட தகவல்கள் சிலவற்றை மீட்டுப் பார்க்கலாம்.

நாள் யூலை 27. இடம் பதுளை. சிறீலங்கா இராணுவமும், பொலிசாரும் சேர்ந்து பதின்நான்கு ஈழத்தமிழரை அங்கே கொன்றதை நேரடியாகக் கண்டவர் மூலம் அறிந்து GUARDIAN செய்தித்தாள் செய்தி வெளியிட்டிருந்தது.

பதுளையில் இரண்டு தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இந்த வன்முறைக்குப் பலியாகி இருந்தார்கள். அந்தக் குடும்பங்களில் ஒன்றைச் சேர்ந்தவர்தான் உயிர்தப்பிய திருமதி செல்வமணி கணேசன். (வயது முப்பத்தியாறு -அப்போது)

திருமதி கணேசன் ஒரு தொவு ஆசிரியை. மூன்று குழந்தைகளுக்குத் தாயார். இவரது கணவன் ஒரு கார் வியாபாரி. பதுளையில் முதியங்கன வீதியில் இருந்த மூன்று தமிழர் வீடுகளில் அவரதும் ஒன்று. மூன்றுமே வசதிபடைத்த குடும்பங்கள்.

யூலை 27 புதன்கிழமை காலை பத்துமணி இருக்கும். இவரது வீட்டிற்கு நூறு யார் தூரத்தில் இருக்கும் பஸ் நிலையத்திற்கு அருகே கூடிய கும்பல் ஒன்று வண்டிகளை உடைத்து நொறுக்கிக் கொண்டிருந்தது.

உடனே பொலிசோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு தம்மைப் பாதுகாப்பாக வீட்டைவிட்டு வெளியே கொண்டு செல்லும்படி திரு கணேசன் குடும்பத்தார் கேட்டார்கள். ஆனால் அவர்களுக்கு இறுதிவரை உதவி கிடைக்கவேயில்லை. பேருந்து நிலையத்தில் நின்ற கூட்டம் பிறகு இவரது அயலவர் ராமநாதனுடைய வீட்டுக் கேற்றைத் தாக்கத் தொடங்கியது. வேட்டைத் துப்பாக்கி வைத்திருந்த ராமநாதன் கும்பலைப் பயப்படுத்த முதலில் மேலே சுட்டார்.

இதன் பின்பு இராணுவம் வந்தது. கேற்றை மீண்டும் தாக்கத் தொடங்கிய கும்பலுக்குப் பின்னால் நின்றது. யாரையும் குறிவைக்காது ராமநாதன் கும்பலை நோக்கிச் சுட்டார்.

இதற்கிடையில் ராமநாதனின் மகன் ஒருவர் கூரையில் ஏறினார். அவருக்கு வயது பதினைந்து. மழைபெய்து கொண்டிருந்ததால் கையில் குடையோடு நின்ற அவரை இராணுவம் சுட அவர் அப்படியே கூரையிலிருந்து கீழே வீழ்ந்தார்.

இவற்றை நேரடியாகப் பார்த்துக் கொண்டிருந்த திருமதி கணேசன் அருகிலிருக்கும் தமது மாமியார் வீட்டிற்கு குழந்தைகளோடு ஓடினார். அங்கே குழந்தைகளோடு குளியலறைக்குள் பதுங்கிக் கொண்டிருந்த சமயம் வெளியே துப்பாக்கிச் சூட்டுச் சத்தமும் குண்டு வெடிக்கும் சத்தமும் கேட்டன. வெளியே ஓடிச் சென்று பார்த்தால் அவர்களின் வீடு எரிந்து கொண்டிருந்தது. உடனே அந்த இடத்தை விட்டு ஓடியவர்களை ஒரு தமிழ் இராணுவ வீரர் இடைமறித்தார்.

இவர்கள் பின்பு - பிரதான வீதிக்கு அழைத்துவரப்பட்டார்கள். பிரதான வீதியில் ராமநாதன் அவர்களது வீட்டிற்கு முன்னால் ஒரு கும்பலாக உடல்கள் கிடந்தன. அதற்குள் இவரது கணவன் கணேசன், அவரது மச்சான், மச்சானின் கணவர், மாமனார் ஆகியோரும் இறந்து கிடந்தனர். ஒவ்வொரு உடலிலும் குண்டுக் காயங்கள். திரு. கணேசனின் குடல் வெளியே நிலத்தில் விழுந்து கிடந்தது. கழுத்து துளைபட்டுக் கிடந்தது.

இந்த நிலையில் கணேசனை நேரில் கண்டவர்கள் அவரது மனைவி, ஏழு வயதும் ஒன்பது வயதுமான அவரது பெண்பிள்ளைகள் [illegible] மகன்.

திருமதி கணேசனின் மாமியாரின் வீட்டில் குடியிருந்த நபரும் அவரது மூன்று வயது மகளும், மச்சாளும், அவர்களின் விருந்தினர் ஒருவரும், திருமதி ராமநாதனும் அவரது நான்கு பிள்ளைகளும் அங்கே இறந்து கிடந்த ஏனையோர்.


திருமதி கணேசனின் மாமனாரை அவரது படுக்கையிலேயே சுட்டுக் கொன்றிருந்தனர். இவரது மற்றைய உறவினர் ஒழுங்கை ஒன்றினுள் வைத்து இராணுவ வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். ராமநாதனின் உறவினர்கள் (ஆண்கள்) கும்பலினால் அடித்து நெரித்துக் கொல்லப்பட்டிருந்தனர். இறந்தவர்களின் உடல்களுக்கு முன்னால் திருமதி ராமநாதன் நின்று கொண்டிருந்தார். அவரை வீட்டுக்குள்ளே போய் மற்றப் புலிகளை அழைத்து வா என்று இராணுவத்தினர் ஆணையிட்டனர்.

தன் வீட்டில் இருந்த அனைவரும் உயிரிழந்து இதோ கிடக்கிறார்கள் என்று திருமதி இராமநாதன் கூறியும் அதனைக் கேளாது அவர்கள் அவரின் பதினாறு வயது மகளை வீட்டுக்குள் அனுப்பி வைத்தார்கள். வீட்டினுள் எவருமில்லை. இதன் பின் வீட்டைச் சுற்றி நின்ற மூன்று லொறிகள், வான், மோட்டார் சைக்கிள் என்பவற்றின் மீது டீசல் ஊற்றப்பட்டது.

பின்னர் -

ஒரு தீப்பந்தத்தைக் கொழுத்தி ராமநாதனின் பதினாறு வயதுப் பெண்ணிடம் கொடுத்து வாகனங்களுக்கு தீவைக்கச் சொன்னார்கள். அதன் பின் இறந்தவர்களின் உடல்கள் அந்தத் தீயினுள் எறியப்பட்டன. அப்போது இராணுவத்தினர் சிலர் பெண்களையும், குழந்தைகளையும் [illegible]. கூட்டத்தில் இருந்த பொலிசார் இதனைத் தடுத்தார்கள். அவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு பெயர்களைப் பதிவு செய்தபின் விடுவிக்கப்பட்டனர்.

83 இல் சிறீலங்கா இராணுவத்தால் நடத்தப்பட்ட கொலைகள் இவை. நேரடியாகக் கண்ட சாட்சியத்தின் வாய் மூலம் இது. இது நடந்து பத்தாண்டுகளாகின்றன. அரச படைகளின் இந்த செயற்பாடுகள்பற்றி விசாரணைகள் நடத்தப்பட்டதா, அவர்கள் தண்டிக்கப்பட்டார்களா என்றால் பதில் இல்லை.




சர்வதேச சிறுவர் பாதுகாப்பு அமைப்பொன்றினால் 7/8/1983 அன்று மேற்குலகப் பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டிருந்த விளம்பரம்.

தமிழீழ ஆவணக் காப்பகம் Tamileelam Archive

## குருதியிற்பூத்த இப்பத்தாண்டுகளில்.....

ஓய்ந்ததோ வேங்கையர் உறுதி வேகம்?
உறங்கிற்றோ ஆங்கவர் ஈழத்தாகம்?
காய்ந்ததோ எம்மண்ணில் வீரப்போகம்?
கலைந்ததோ நம்மக்கள் உணர்ச்சி மேகம்?
சாய்ந்ததோ இனமானம்? செல்விழுந்து...
சரிந்ததோ இமயத்தை விஞ்சும் ஓர்மம்?
தீய்ந்ததோ பட்டினித் தீயில் தேசம்?
திரிந்ததோ தலைவன் மேற்கொண்ட நேசம்?
மாய்ந்ததோ தமிழ்க்குடி? மாற்றார் சூழ்ச்சி...
பலித்ததோ; பயங்கரவாதக் கோசம்?
வேய்ந்ததோர் பகைகண்டு... சீற்றங்கொண்டு...
'விழியுங்கள்! விழியுங்கள்! என்றே கூவிப்
பாய்ந்ததோர் படை.... தமிழ்ப் படையாமிந்தப்
பாரினில் தமிழர்க்கோர் படையாமன்றோ!

## சிங்கள தே.....

விடுத்த வேண்டுகோள்களை பிரேமதாசா ஏற்றுக்கொள்ளவேயில்லை.

அதேவேளை, பகிரங்கமாகவும், நல்லெண்ணம் கொண்ட சில தனிநபர்கள் மூலமும் புலிகளின் தலைமைப் பீடம் பிரேமதாசாவுக்கு விடுத்த யுத்த நிறுத்தக் கோரிக்கைகளை, சமாதான சமிக்ஞைகளை பிரேமதாசா முற்றாக நிராகரித்தார். பதிலாக புதிய புதிய போர் வியூகங்களை, அழிவைத் தேடும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து தமிழர்களுக்கு எதிரான போரை விரிவுபடுத்திக் கொண்டிருந்தார்.

பிரேமதாசாவின் இந்த [illegible]

[illegible]

இலங்கை நடந்த 10 ஆண்டுகளாக தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக [illegible]

[illegible] ■

நன்றி :
'விடுதலைப் புலிகள்'
வைகாசி '93

# ஐரோப்பிய சமூக நாடுகளும் வெளிநாட்டு அகதிகள் நிலையும்

( 3 )

மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு கல்வி, வேலைவாய்ப்பு நிமித்தமாகவும் அகதிகளாகவும் குடியேற்றக்காரர்களாகவும் இடம்பெயர்ந்து வாழ்கின்ற வெளிநாட்டவர்களை ஐரோப்பிய சமூகத்தின் ஒன்றிணைவு (European Community) எந்த வகையில் பாதிக்கின்றது என்பதையும், ஐரோப்பிய நாடுகளில் பரவிவரும் வெளிநாட்டவர்களுக்கு எதிரான இனத்துவேசத்தின் தன்மை பற்றியும் இக்கட்டுரை ஆராய்கின்றது. இக்கட்டுரையின் மூன்றாவது (இறுதி) பகுதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

ஐரோப்பிய சமூகம் வந்தால் கிழக்கு ஐரோப்பாவினூடாக வரும் அகதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக போலந்து, செக்கோசிலவாக்கியா, ஸ்பெயின், இத்தாலி, வட ஆபிரிக்கா ஆகிய நாடுகளுக்கூடாக வருவதைக் குறைக்க அந்தந்த நாடுகளின் எல்லைகளைப் பலப்படுத்துவதுடன் முடிந்தளவு அந்த நாடுகளுடன் ஒப்பந்தங்களைச் செய்யவும் முன்வந்துள்ளனர். சில ஒப்பந்தங்கள் செய்யப்பட்டும் உள்ளன. போலந்து, செக்கோசிலவாக்கியா, கங்கேரி, ருமேனியா போன்ற நாடுகளுடன் ஜேர்மனியும் ஸ்பெயின், இத்தாலி, வட ஆபிரிக்க நாடுகளுடன் பிரான்சும் ஒப்பந்தங்களைச் செய்துள்ளன. இவை பெரும்பாலும் பொருளாதார ஒப்பந்தங்களாக எல்லைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கங்களைக் கொண்டுள்ளன. இதைவிட எல்லைகளில் அதிகளவு பொலிஸ், கண்காணிப்பினையும் விமானப் படை, தரைப்படையினரையும் ஈடுபடுத்தி பாதுகாப்புக்களை வலுப்படுத்தியுமுள்ளன.

விமானம் மூலமாக வருபவர்கள் தகுந்த விசா அனுமதியில்லாது வருவதைத் தடைசெய்ய கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்துள்ளனர். விசாவோ, தரமான அனுமதிப்பத்திரமோ இல்லாது பிரயாணிகளை ஏற்றிவரும் விமானங்களின் சொந்த ஸ்தாபனம் அவர்களைத் திருப்பிக் கொண்டு போகும் பொறுப்பை ஏற்க வேண்டுமெனவும், அப்படி ஏற்றிவரும் விமான முகவர்களுக்கு அதிகமான தண்டனைப் பணம் விதிக்கப்படும் எனவும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். உதாரணத்திற்கு ஜேர்மனி இதனைச் செயற்படுத்தி வருவதனால் விமான மூலம் வந்த அகதிகள் தொகை 30% இலிருந்து தற்போது 5% மாகக் குறைந்துள்ளது.

ஒரு நாட்டிற்கு விசா எடுத்து வந்தால் அதைப்பயன்படுத்தி வேறு நாடுகளில் இறங்குவதை கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க உள்ளார்கள். எந்த நாட்டிற்கான விசா அவரது கடவுச்சீட்டிலிருக்கிறதோ அந்த நாட்டிற்குத் திருப்பியனுப்பப்படுவர். விமான நிலையத்தில் கடவுச்சீட்டு இன்றி வந்து அகதி அந்தஸ்து கோரினால், அவர்களது விண்ணப்ப விசாரணையை விமான நிலையத்தில் வைத்தே விசாரணை செய்து போதியளவு ஆதாரங்கள், உண்மைகள் இல்லாதவிடத்து அவரை உடனடியாக அவரது நாட்டிற்குத் திருப்பியனுப்புவது, அடுத்து அவர் சட்ட விரோதமாக நாட்டிற்குள் பிரவேசித்தார் என்ற காரணத்தை வைத்து அவரை திருப்பியனுப்ப நடவடிக்கை எடுப்பது போன்ற நடைமுறைகளை மேற்கொள்ள இருக்கிறார்கள். சில நாடுகளில் செயற்படுத்திக் கொண்டும் வருகிறார்கள்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஏதாவதொரு நாட்டில் ஒருவர் அகதி அந்தஸ்துக்கு விண்ணப்பம் செய்து விசாரணையின் பின்னர் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்தால் அவர் வேறொரு ஐரோப்பிய நாட்டில் அகதி நிலைக்கு விண்ணப்பம் செய்யமுடியாது. அப்படி விண்ணப்பம் செய்யப்பட்டால் அவரது விண்ணப்பம் உடனடியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு அவரைத் திருப்பியனுப்பலாம். அதாவது ஐரோப்பிய சமூக நாடுகளில் ஏதாவதொரு நாட்டில் ஒரு முறைதான் அகதி நிலைக்கு ஒருவர் விண்ணப்பிக்க முடியும் என்ற நடைமுறையைத் தீவிரமாகச் செயற்படுத்த இருக்கிறார்கள். ஒருவருக்கு ஒருமுறை மட்டுமே சந்தர்ப்பம் கொடுப்பது என்பதுதான் அடிப்படை நோக்கம். இந்த நடைமுறையை மேற்கொள்வதனால் தற்பொழுது ஒரு நாட்டில் அகதி நிலை நிராகரிக்கப்பட்டால் மற்ற நாட்டிற்குச் சென்று விண்ணப்பிக்க இருக்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போய் விடுகின்றது. இதனாலும் அகதிகள் தொகை குறைய வாய்ப்புண்டு.



நாசிகளின் வெளிநாட்டவர்களுக் கெதிரான குண்டுவீச்சுக்கள்

ஒருவர் ஒரு நாட்டில் அகதி நிலைக்கு விண்ணப்பம் செய்யும் பொழுது, அவரை அந்த நாட்டிலுள்ள பொலீஸ் புலனாய்வுத் துறையினர் படம் பிடிக்கிறார்கள். கைவிரல் அடையாளம் எடுக்கிறார்கள். இவைகள் கொம்பியூட்டரில் போட்டு வைக்கப்படுகின்றன. பொதுவாக ஒரு குற்றவாளியைப் போலக் கையாளுகிறார்கள். அவர் தான் இருக்கும் நாட்டில் ஏதாவது குற்றம் செய்தாலோ, தேவை ஏற்படும் பொழுதோ அவரது கைவிரல் அடையாளங்களை கொம்பியூட்டரில் போட்டுப் பார்த்து அவரை அடையாளம் காணக் கூடியதாக இருக்கின்றது. தற்பொழுது அந்தந்த நாடுகளில் இந்த நடைமுறை கையாளப்படுகின்றது. ஆனால் ஐரோப்பிய சமூக இணைப்பு வந்த பின்னர் அதில் உள்ள நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தங்களது நாடுகளில் அகதி நிலைக்கு விண்ணப்பித்தவர்களின் தகவல்களை, கைவிரல் அடையாளங்களை தங்களது நாட்டுக் கொம்பியூட்டரில் போட்டு வைப்பதுடன் மட்டுமல்லாது எல்லா நாடுகளுக்கும் பொதுவானதொரு கொம்பியூட்டரில் போட்டு வைக்கவும் தீர்மானித்துள்ளனர்.

இந்த நடைமுறையைக் கொண்டு வருவதனால் பல கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். அவையாவன: ஒருவர் பல நாடுகளில் அகதி நிலைக்கு விண்ணப்பம் செய்வதைக் கட்டுப்படுத்தவும், ஒருவர் ஒரே காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் விண்ணப்பம் செய்திருப்பதைக் கண்டுபிடிக்கவும் முடியும். ஒருவர் ஒரு நாட்டில் தவறோ, குற்றமோ செய்துவிட்டு இன்னொரு நாட்டில் போய்த் தலைமறைவாகவோ சட்ட விரோதமாகவோ இருந்தால் அதனைக் கண்டுபிடிக்க முடியும். சட்ட விரோதச் செயல்கள், மாபியா கொலைகள், கொள்ளைகள், போதை வஸ்துக் கடத்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்திக் குறைக்கவும் முடியும். இதனால் ஒரு பாதுகாப்பான கட்டுப்பாட்டினை நாடுகளுக்கிடையில் கடைப்பிடிக்க முடியும். அத்துடன் முக்கியமாக இந்த நாடுகளில் அகதிகளாக வருபவர்கள் தொகையைக் குறைத்து கட்டுப்படுத்தக் கூடிய வாய்ப்பும் ஏற்படும்.

பொதுவாக ஐரோப்பிய சமூக நாடுகள் எல்லாம் சேர்ந்து தங்களது தனித்துவத்தை (Individuality) பேணவும், உள்நாட்டுப் பாதுகாப்பை (Internal Security) வலுப்படுத்துவதற்காகவும் குற்றவியல் (criminality), போதை வஸ்து(Drugs), மாபியா (Mafia) போன்ற சட்டவிரோத குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும் அகதிகள் வருகையை நிறுத்துவதற்காகவும் அல்லது குறைப்பதற்காகவும், வெளிநாட்டவர் குடியேற்றத்தைக் குறைப்பதற்காகவும், பெருமளவில் வெளிநாட்டவர் வருகையை (Migratory Movement) தடை செய்வதற்காகவும் வேண்டி எல்லைப் பாதுகாப்பு, எல்லைத் தடுப்புக்காவல் இவைகளை ஸ்திரப்படுத்திப் பலப்படுத்த முனைகின்றன. இந்த நாடுகள் எல்லாம் சேர்ந்து கூட்டாக மூன்று முக்கிய நடைமுறைகளை மேற்கொள்ள இருக்கின்றன.

1. தகவல் முறை
2. பொலீஸ் கூட்டு நடவடிக்கை
3. கூட்டு எல்லை ரோந்து பாதுகாவல்

இந்த மூன்று நடைமுறைகளையும் செயற்படுத்துவதால் அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்த முடியுமென்றும் நாடுகளுக்கிடையே அகதிகள், வெளிநாட்டவர் ஆகியோரின் குற்றச் செயல்களைக் குறைத்து கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர ஏதுவாக இருக்குமெனவும் இந்த நாடுகளின் உள்துறை அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர். இப்படிக் கூட்டு முறையில் செயற்படுவதினால் தங்களது ஐரோப்பிய ஐக்கியம் பேணப்படுவதுடன் பாதுகாக்கப்படுமெனவும் கருதுகிறார்கள்.

இவைகள் மூலம் அகதிகளை எல்லைகளில் வைத்தே திருப்பி அனுப்பக்கூடிய நடைமுறைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. சட்டவிரோதமாக நாடுகளுக்குள் நுழையும் குடியவரவாளர்கள், அகதிகளைத் தடுத்து நிறுத்தவும் முடியும். ஒரு நாட்டின் எல்லையுள் சென்று அரசியல் விண்ணப்பம் செய்ய முடியும். அப்படிச் செய்



ஜேர்மனியில் நாசிகளின் ஊர்வலம்

யப்பட்டதும் அதனை உடனடியாக விசாரணை செய்து தகுந்த நியாயமான காரணங்கள் இல்லாவிட்டால் எல்லையில் வைத்தே திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். அதிகளவில் வெளிநாட்டவர் வருவதைக் கட்டுப்படுத்துவதுடன் எல்லைகளை ஒரு [illegible] நிலையில் வைத்திருக்கக் கூடியதாகவும் இருக்கும்.

இவைகளை விட அந்தந்த நாடுகளில் அகதி நிலைக்கு விண்ணப்பித்தவர்களை பெருமளவில் திருப்பியனுப்புவதற்கான சட்டமாற்றங்களைச் செய்வதில் ஒவ்வொரு நாடும் மிகக் கடுமையாக தீவிரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. போதிய நாட்டுக் காரணங்கள், அந்நாட்டில் இன்றி சொந்தப் பிரச்சினைகள் அதாவது தனிப்பட்ட பிரச்சினைக்கான காரணங்கள் போதிய அரசியல் காரணங்களின்றி வந்து விண்ணப்பிக்கும் அகதிகளின் விண்ணப்பங்களை விரைவாக விசாரணை செய்து நிராகரிக்கப்படுபவர்களை உடனடியாகத் திருப்பியனுப்ப நடவடிக்கை எடுப்பது. உண்மையாகவே இனரீதியான மதரீதியான பிரச்சினைகள், அரசியல் பிரச்சினைகள், உயிர் ஆபத்துக்கள் இருக்குமெனக் கண்டால் அவர்களை மனிதாபிமான அடிப்படையில் வைத்திருக்கவும் நடவடிக்கை எடுக்கவிருக்கிறார்கள்.

சோமா

ஒருவர் ஒரு நாட்டில் பல இடங்களிலோ அல்லது மற்றும் நாடுகளிலோ ஒரே நேரத்தில் பல விண்ணப்பங்களைச் செய்திருந்தால் அது சட்டவிரோதமான செயல் எனக் கருதப்பட்டு அவரை நாடு கடத்துவதற்கான நடவடிக்கை எடுக்கலாம். குற்றச் செயல்கள் போதைவஸ்து, பாலியல் குற்றங்கள் போன்ற சட்டவிரோத குற்றங்கள் செய்தவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றுவது, ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு சட்டவிரோதமாக எல்லைகளைக் கடக்க வைத்து ஆட்களைக் கடத்துவது, அதற்குத் துணையாக இருப்பவர்கள், இவர்களை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்றுவதும், அரசியல் பிரச்சினை, தனிப்பட்ட பாதுகாப்பு இல்லை, உயிருக்கு ஆபத்து என்பன போன்ற காரணங்களைத் தங்களது அகதி நிலைக்கான விண்ணப்பங்களில் [illegible] அந்தந்த நாடுகளில் தற்காலிக வதிவிட அனுமதியுடன் (Temporary staying permit) [illegible]

தொடர்ச்சி 14ம் பக்கம்

## 83 ன் இனக்க.....

தமிழீழ சுயநிர்ணய விடுதலைப் போராட்டத்திற்கும் எரித்திரிய மக்களின் விடுதலைக்கும் உடன்பாடு உண்டு. எனவே சர்வதேச சமூகத்தினால் இலங்கை அரசாங்கத்திற்கு கொடுக்கப்படும் அழுத்தமானது சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவை சிறீலங்காவின் அரசியல், இராணுவ நடவடிக்கைகளில் மாற்றத்தைக் கொண்டுவர நிர்ப்பந்திக்கின்றது. இதற்கு மற்றும் காரணங்களாக 83 ஆம் ஆண்டின் இனக்கலவரத்திலிருந்து தொடர்ந்து பல இன அழிப்பு இராணுவத் திட்டங்களைத் தீட்டி வந்த கூட்டுப்படைத் தலைமையக உயர்மட்ட அதிகாரிகள் பலர் அழிக்கப்பட்டதும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்று தாக்குதல்களை நடாத்தி வெற்றி பெறுவதும், சிறீலங்கா இராணுவத்திற்குள் பிளவுகள், பின்வாங்கல், தப்பி ஓடுதல் போன்ற இராணுவக் குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ளமையும், விடுதலைப் புலிகளின் அரசியல் இராஜதந்திர முறைகளும் 93ம் ஆண்டில் பதவிக்கு வந்த ஜனாதிபதியின் அரசியல் போக்கில் மாற்றத்தைக் கொண்டுவர வழிவகுக்கின்றது.

விடுதலைப் புலிகள், சர்வதேச போர்முறைகளுக்கு அமைய கைதிகள் பரிமாற்றத்தை மேற்கொண்ட செயலும் மனித உரிமைச் சட்டத்திற்கு அமைய கைதிகள் பராமரிக்கப்படுவதும் சிங்கள மக்கள் மத்தியில் மனநல்லெண்ண அபிப்பிராயத்தை உருவாக்கியுள்ளது. பிரேமதாசாவின் ஒரு தலைப் பட்ச அரசியல் போக்கில் 39 சிங்களக் கைதிகளின் விடயத்தில் அக்கறை காட்டாமல் இருந்தமையும், இராணுவத் தளபதிகள் சிலர் விடுதலைப் புலிகளின் இராணுவப் பலத்தை எடுத்துக் கூறியபோதும் உண்மையை உணராது வலிந்து இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டமையும் சிங்கள மக்கள் மத்தியில் அம்பலமாயுள்ளது. இதனால் தற்போதைய ஜனாதிபதி, இந்து கைதிகள் விடுதலையின் விளைவாக புலிகளின் நிபந்தனைக்கு இணைந்து வடபகுதி பொருளாதாரத்தடையை தளர்த்துவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார். அது ஒரு நாள் மட்டுமே செயல் வடிவம் கண்டது யாவரும் அறிந்ததே.

இம்முயற்சிகள் எந்தளவிற்கு பலனளிக்கும் என்பது சிங்கள அரசியல்வாதிகளை ஆட்டிப்படைக்கும் பௌத்த மத பீடங்களின் தலையீட்டில் தங்கியுள்ளது. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் மரணம் தொடக்கம் சிங்கள அரசியல்வாதிகளின் பின்னணியில் பௌத்த குருமார்கள் இருக்கின்றார்கள். 1983 இன் கலவரத்தின் போதுகூட தமிழீழ மக்களின் அழிவில் முக்கிய பங்கு வகித்துள்ளனர்.

83 ஆம் ஆண்டு கலவரத்தில் மலேசியத் தமிழரான டாக்டர். நதானியலும் அவரது மனைவியும் பாதுகாப்புக்கருதி பொலிஸ் வாகனத்தில் வேறு இடத்திற்கு கூட்டிச் செல்லும் பொழுது Obedlle என்ற இடத்தைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் அவர்களது ஜீப்பை மறித்து அவர்களை வெளியில் இழுத்துப் போட்டுக் கத்தியால் குத்திக் கொன்றார்.

"தமிழனே நீ தமிழ் நாடு போ", "சிறீலங்கா சிங்களவர்களுக்கு மட்டும் உரிய நாடு", "மோட்டுத் தமிழா வெளியேறு" போன்ற வாசகங்களை உள்ளடக்கி 28-5-1983 ல் ஒரு கடிதம் 532, கோல் றோட், சிறிகோதா, கொழும்பு -3 என்ற இடத்திலிருந்து யாழ்ப்பாண Sunday Times உட்படப் பலருக்கு அனுப்பிவைக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அதேபோன்று தற்போதைய ஜனாதிபதிக்கும் சில கடிதங்கள் வந்தன. "தமிழர்களை அழிக்க இந்தியாவை மீண்டும் உதவிக்கு அழைக்கவும்" என வற்புறுத்தி கையொப்பம் இடாமல் அனுப்பப்பட்டிருந்தது. இவற்றிற்கு எல்லாம் புதிய ஜனாதிபதி காது கொடுப்பாரேயானால் ஈழப்பிரச்சினையில் தீர்வு காணமுடியாது. பிரேமதாசாவின் ஆட்சியில் இருந்த ஊழல்களையும், அவரது கையாட்களையும், அவர் கையாண்ட பித்தலாட்டங்களையும் தூக்கி எறிந்து துணிவுடன் செயல்படும் புதிய ஜனாதிபதி எனவும், புலிகளுடன் இணங்குவதில் ஆர்வம் காட்டும் ஜனாதிபதி என தென் இலங்கையின் பத்திரிகைகள் தலையங்கம் வடிக்கின்றன.

1993 இல் மீண்டும் ஒரு இனக் கலவரம் தோன்ற வில்லை. எனினும் தென்தமிழீழ இளைஞர்கள் பெருமளவில் கைது செய்யப்பட்டு, நீண்ட காலமாக விளக்கம் இன்றிச் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு வருகின்றனர். இது 83 ஆம் ஆண்டுக் கலவரத்தை விட மிக மோசமாகவே இடம்பெறுகிறது. தமிழர் பண்பாட்டைச் சீர்குலைக்கும் நோக்குடன் தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டபின் ஆண்பெண் இருபாலாரும் ஒரே சிறையில் அடைக்கப்படுகின்றனர். இந்த அழிவுகளுக்கு பிரேமதாசாவின் கைக்கூலிகளாக இருந்து கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் தமிழ்க்குழுக்களும் ஒரு காரணம். இவர்கள் இராணுவத்துடன் இணைந்து தென்பகுதியில் வாழும் தமிழீழ மக்களைக் கைது செய்வதிலும், அவர்களிடம் பணம் பறிப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

சிறீலங்காவின் அரசியல் தலைவர்கள் ஒவ்வொருவரும் பதவிக்கு வந்தபின் தமிழீழமக்களுக்கு கொடுக்கும் வாக்குறுதிகளை அவர்களே மீறுவதற்குக் காரணம் அவர்களால் சுயமாக ஒரு முடிவை எடுக்க முடியவில்லை என்பதேயாகும். அவர்களுக்குப் பின்னால் சிங்களப் பேரினவாதத்தை ஆட்டிப்படைக்கும் ஒரு பின்னணிக்கு அரசாங்கம் கட்டுப்படுகிறது. பண்டா செல்வா ஒப்பந்தம் தொடக்கம் டட்லி செல்வா ஒப்பந்தம், சிறிமா சாஸ்த்திரி ஒப்பந்தம், விடுதலைப் புலிகள் பிரேமதாசா பேச்சுவார்த்தைகள் போன்ற பல தேச முயற்சிகளில் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை அவர்களே மீறுவதற்குக் காரணம், அவர்களையும் மீறிய ஒரு சக்தி அவர்களை ஆட்டிப்படைக்கிறது என்பதேயாகும். இது சர்வதேச அரங்கில் இவர்களின் முகமூடிகள் கிழிக்கப்படுவதோடு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சிங்கள அரசாங்கத்திடம் எந்த ஒரு திட்டமும் இல்லையெனவும், கொடுத்த வார்த்தைகளைப் பாதுகாக்கும் அளவிற்கு சிங்கள மக்கள் மத்தியில் அரசியல் தலைவர்கள் இன்னும் உருவாக்கப்படவில்லை என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

தமிழீழ மக்கள் தமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் அணிதிரண்டதன் மூலம் ஒரு தேசிய தலைமையை உருவாக்கியுள்ளார்கள். அதனால் ஒரு தீர்வை முன்வைக்க முடிகிறது. அதனை அமுல்படுத்தவும் முடிகிறது. 90 ஆம் ஆண்டு தொடக்கம் அமுலில் இருந்துவரும் பொருளாதாரத்தடையை கைதிகள் பரிமாற்றத்தின் மூலம் தளர்த்திவிடுவதாக அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட வாக்குறுதி மீறப்பட்டிருக்கும் இக்கட்டத்தில் ஏனைய 33 கைதிகளின் நிலைமையும், அவர்களைக் கூட்டிக் கொண்டே தென்னிலங்கை செல்வோம் என இருக்கும் பெற்றோரின் நிலைமையும் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வரும். ■

## ஐரோப்பிய....

மிக நுணுக்கமாகக் கவனித்து கணக்கெடுத்து, அதனைக் காரணமாகக் கொண்டு புதிதாக வரும் அகதிகளை அவர்களது அகதி விண்ணப்பங்களை நிராகரித்து, திருப்பி அனுப்பக்கூடிய நடைமுறைகளை மேற்கொள்ள உத்தேசித்து நடவடிக்கைகளை எடுக்க இருக்கின்றன மேற்கு ஐரோப்பிய நாடுகள். ஜேர்மனி, அகதிகள் அடிப்படைச் சட்டமான 16 வது சரத்தில் நிரந்தரமான மாற்றத்தைக் கொண்டுவர மிகப் பிரயத்தனம் எடுக்கிறது. உண்மையான அரசியல் காரணங்களின்றி வருபவர்களை உடனடியாக விசாரணையின் பின்னர் திருப்பி அனுப்புவது என அரசியற் கட்சிகள் தீர்மானம் எடுத்துக் கொண்டிருக்கின்றன. விசாரணைகளைத் துரிதப்படுத்துவது, சமூக உதவிகளைக் குறைப்பது, வசதியீனங்களை ஏற்படுத்துவது என்பன போன்ற நடைமுறைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது ஜேர்மன் அரசாங்கம்.

பிரான்ஸ், அகதிகள் சட்டத்தைக் கடுமையாக்கவும் சில மாற்றங்களை, கட்டுப்பாடுகளை கொண்டுவருவதற்குமான தீர்மானங்களை எடுப்பதுபற்றி ஆலோசித்து வருகிறது. இதனைவிட பிரான்ஸ், அகதிகள் வெளிநாட்டவர்களுக்கான வேலை வாய்ப்பினைக் கட்டுப்படுத்த தடைசெய்ய முற்படலாமென்ற அச்சம், சூழ்நிலை உருவாகலாம் என்று அறியக்கூடியதாக இருக்கின்றது. பிரான்சும், ஜேர்மனியும் அகதிகள் சம்பந்தமாக தங்களுக்குள் சில நடைமுறைகள், கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுவதற்கான கலந்துரையாடல்களை, பேச்சுவார்த்தைகளை, விவாதங்களை மேற்கொண்டு வருகின்றன. இவைகள் அகதிகள் வருகையைக் குறைப்பது, கட்டுப்படுத்துவது, தடைசெய்வது என்ற அடிப்படையில் அமைந்துள்ளன.

சுவிற்சலாந்தில் கூட அகதிகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். தற்போது சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டவர்கள், குற்றவாளிகள் நாட்டை விட்டு வெளியேற்றப்படுகிறார்கள். தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது சம்பந்தமான ஆலோசனைகள், பரீட்சார்த்த முறைகள் நடைபெற்று வருகின்றன. எனவே, பொதுவாகப் பார்க்கப்போனால் இனி வருங்காலங்களில் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலோ மற்றும் கைத்தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளிலோ மூன்றாம் உலக நாட்டவர்களுக்கு எதிர்காலம் இல்லையென்பதும் நிரந்தரமில்லையென்பதும், பாதுகாப்பில்லை என்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது.

தமிழர்களாகிய நாம் இதனை நன்கு புரிந்து கொள்ள வேண்டிய உண்மை நிலையை உணர்ந்து செயற்பட வேண்டிய காலம் வந்துவிட்டது. அசட்டுத்தனமான எண்ணங்களுடன் ஏனோ தானோ என்று இனி மேல் காலம் கடத்தாது விழிப்புடனும், தெளிவுடனும் நடந்து கொள்ள வேண்டும். மேற்குலக நாடுகளில் வசதிகள், ஆடம்பரங்கள், பொருளாதார நிலைகளைக் கண்டு மயங்கியது போதும். நாங்கள் ஜேர்மன் தமிழராகவோ, பிரித்தானித் தமிழராகவோ, சுவிஸ் தமிழராகவோ, பிரான்ஸ் தமிழராகவோ வாழமுடியாது என்பது தற்போது தெளிவாகத் தெரிகிறது.

நிம்மதியற்ற நிரந்தரமற்ற சுதந்திரமற்ற இந்த வேற்று நாட்டு வாழ்க்கையை நிரந்தரமென்று எண்ணாமல் போலியைக் கண்டு மயங்காமல், எங்களதும் எங்கள் எதிர்காலச் சந்ததியினதும் வாழ்க்கையைச் சிதறவிடாமல் ஒரு நல்ல திடமான நிரந்தரமான இலட்சிய நோக்குடன் வாழ முன்வருவோமாக. ■

(முற்றும்)

## நிகழ்வும் .....

எனத் தலைப்பிட்டு எழுதலாம் என்றார் நகைச்சுவையாக. இது நகைச்சுவையாகக் கூறப்பட்ட போதும் விடுதலைப் புலிகளும் முழுமையாகவே இந்தியாவிடம் தங்கி நின்றிருக்குமேயானால் போராட்டத்திற்கு ஏற்பட்டிருக்கக் கூடிய ஆபத்தினைச் சுட்டிக் காட்டுவதாய் அமைந்திருந்தது.

இந்திய - விடுதலைப் புலிகள் யுத்தம் நடைபெற்ற போதும் இந்தியப் படையினர் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை வேட்டையாடுவதில் குறியாக இருந்தனர். 'ஈழமுரசு'வில் இருந்து இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு அப்போது நாம் இந்தியாவிடம் 'யுத்தக்கைதி'களாக இருந்தோம். அப்போது என்னை விசாரணை செய்த மேஜர் நாயர் என்னிடம் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் பற்றித் துருவிக் கேட்டார்.

"விடுதலைப் புலிகளுக்கு எங்கிருந்து ஆயுதங்கள் கிடைக்கின்றன?" -இது நாயரின் கேள்வி.
"நீங்கள்தானே வழங்கினீர்கள். இப்போது என்னிடம் கேட்கிறீர்களே" -இது எனது பதில்.
"இல்லை நாங்கள் வழங்கியதை விட ஏராளமான ஆயுதங்கள் அவர்களிடம் இருக்கின்றன. அவை எங்கிருந்து அவர்களுக்குக் கிடைக்கின்றன?" -இது நாயர்.
"அவர்கள் ஏராளமான ஆயுதங்களை இராணுவத்திடம் இருந்து கைப்பற்றி வைத்திருக்கின்றனர்" -இது நான்.
"நாம் வழங்கியதை விட இராணுவத்திடமிருந்து கைப்பற்றியதை விட பல நூறு ஆயுதங்கள் அவர்களிடம் உள்ளன. அவை எங்கிருந்து அவர்களுக்குக் கிடைக்கின்றன?"
"அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது"

விடுதலைப்புலிகள் தொடர்பான பூரண தகவல், இந்திய தரப்பிடம் இருக்கவில்லை என்பதனைச் சுட்டிக்காட்ட மேற்குறிப்பிட்ட விசாரணை உதவும்.

சுதந்திர இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை வரலாற்றில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பட்ட அவமானத்தினைப் போன்று இந்தியா வேறு எங்கும் படவில்லை எனக்கூறலாம். இந்தியப் படைகள் தமது இலக்கினை நிறைவேற்ற முடியாமல் வெட்கம் தோய்ந்த முகத்தோடு திரும்பிச் சென்ற நிகழ்வினையும் யூலை 83 - யூலை 93 க்கு இடைப்பட்ட பத்தாண்டு கால வரலாறு பதிவு செய்து வைத்துள்ளது. இப்பத்தாண்டினை நாம் நான்காக வகைப்படுத்தலாம்.

1) 1983 யூலை 23 - 1987 யூலை 25
2) 1987 யூலை 29 - 1990 மார்ச் 24
3) 1990 மார்ச் 24 - 1990 யூன் 10
4) 1990 யூன் 10க்குப் பின்

முதலாவது காலப்பகுதி - சிறீலங்கா அரசுடன் ஆயுதப் போராட்டம் முனைப்படைந்த காலம்.
இரண்டாவது பகுதி - இலங்கை -இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இந்தியப் படை தமிழீழ மண்ணில் காலடி வைத்து பின் தோல்வி கண்டு திரும்பிப் போன காலம்.
மூன்றாவது காலப்பகுதி - தமிழீழப் பிரதேசங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த காலம்
நான்காவது காலப்பகுதி - சிறீலங்கா அரசுடன் தொடரும் யுத்தக்காலம்.

இக்காலப்பகுதிகளுள் தமிழீழ விடுதலைப் போராட்டம் எத்தனையோ நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கிறது. இருந்தபோதும் போராளிகளின் அப்பழுக்கற்ற தியாகத்தாலும், வீரத்தாலும், மக்களின் பங்களிப்பாலும் நிமிர்ந்துதான் நிற்கின்றது. தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமை அடையப்படும் வரை நிமிர்ந்துதான் நிற்கும். ■

## சிறீலங்கா....

மீது பாரிய தாக்குதல் ஒன்றை சிறீலங்கா அரசு நடாத்த பின்னணிகளை வகுத்து வருகின்றது. சிங்களப் பத்திரிகைகள், இலங்கை இந்திய கூட்டு இராணுவ நடவடிக்கை மூலம் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்க வேண்டும் எனும் கருத்தைப் பரப்பி வருகின்றன. விடுதலைப் புலிகளை தனித்துநின்று வெற்றி காணமுடியாது எனக் கண்ட சிறீலங்கா பௌத்த சிங்களப் பேரினவாதிகள், இந்தக் கூட்டு நடவடிக்கைகள் பற்றி கவனம் செலுத்தி வருவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

இதனால் சிறீலங்கா அரசாங்கத்தின் எல்லைக்குள் இனப்பிரச்சினைத் தீர்ப்புக்கான வழிவகைகளை இனியும் எதிர்பார்க்க முடியாது என்பது உறுதியாகிவிட்டது. எனவே சர்வதேச சமூகத்தின் மத்தியில் நம் மிக மிக அவசியமான ஒரு காலகட்டம் உருவாகியுள்ளது. ■

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின்
மெய்யுணர்வுகளை கலை —
பண்பாட்டுக்கூடாக வெளிக் —
கொணரும்

# சுதந்திர தாகம்

எழுச்சி நிகழ்வும் ஓவியக்கண்காட்சியும்

காலம்: 07-08-93
சனிக்கிழமை மாலை 7 மணி

இடம்: SAMFUNNSHUSET, OSLO
ARBEIDERSAMFUNNETS PLASS - 1

ஒழுங்குகள்: தமிழீழ விடுதலைப் புலிகள்
நோர்வேக் கிளை

# நிகழ்வும் நினைவும்

– திலீபன் –

## யூலை 83 - யூலை 93
## பத்தாண்டுகள் - சில நினைவுகள்

**1993** யூலை 23 - 83 யூலைக் கலவரங்கள் நடந்து முடிந்து பத்தாண்டுகளாகின்றன. 1983 யூலை 23ம் திகதி விடுதலைப் புலிகளினால் நடாத்தப்பட்ட தாக்குதலுக்கு 13 சிறீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவத்தை சாட்டாக வைத்து ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த ஒரு இனப்படுகொலையை நடாத்தி முடிக்கப்பட்டு பத்தாண்டுகளாகின்றன.

1983 ஆம் ஆண்டு யூலை 15ம் திகதி விடுதலைப் போராளிகள் சீலன், ஆனந்த் ஆகியோர் மீசாலையில் வைத்து சிறீலங்காப் படையினரால் கொல்லப்பட்டமைக்குப் பதிலடியாக 1983 யூலை 23ம் திகதி அன்று அதிகாலை யாழ் நகரம் அதிர்ந்தது. 13 சிறீலங்காப் படையினர் திருநெல்வேலியில் வைத்துக் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலும், இத்தாக்குதலைத் தொடர்ந்து இனவாதிகளினால் நடாத்தி முடிக்கப்பட்ட இனப்படுகொலையும் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

யூலைப் படுகொலைகள் தமிழீழ மக்களின் உணர்வலைகளைத் தட்டிவிட்டன. இளைஞர்கள் பலர் கொதித்தெழுந்தனர். தமிழீழ தனிநாடு ஒன்றே தமிழ் மக்களுக்கு விமோசனத்தை அளிக்க முடியும்; ஆயுதம் தாங்கிய போராட்டம் மூலமே எமது விடுதலையினை நாம் வென்றெடுக்க முடியும் என்பதில் நம்பிக்கையோடு ஆயிரமாயிரம் இளைஞர்கள் போராட்டத்தோடு தம்மை இணைத்துக் கொள்ளத் துடித்தனர்.

அன்றைய சூழலில் விடுதலை அமைப்புக்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய போராளிகளே இருந்தனர். அமைப்புக்களின் சக்தியும் மிகக் குறைந்த போராளிகளை உள்வாங்கக்கூடிய நிலைமையிலேயே இருந்தது. போராட்டத்தோடு தம்மை இணைத்துக் கொள்ள முன்வரும் இளைஞர்களை இனம்கண்டு, அவர்களின் உறுதியினை மதிப்பீடு செய்தே போராட்டத்தோடு இணைத்துக் கொள்ள வேண்டிய ஒரு தேவை இருந்தது. இந்நடைமுறை எமது போராட்டத்தில் பின்பற்றப்பட்டிருந்தால் போராட்டம் படிப்படியான ஒரு நிதான வளர்ச்சியினை அடைந்திருக்கக் கூடும்.

ஆனால், எமது போராட்டத்தில் இடம்பெற்ற இந்தியத் தலையீடு போராட்டத்தினை நிதான வளர்ச்சிக்கு இட்டுச் செல்லாமல் ஒரு வீக்க நிலையினைத் தோற்றுவித்தது. மக்களிடம் தங்கி நிற்கும் ஒரு பலமுள்ள அமைப்புத் தோற்றம் பெற்றுவிட்டால் போராட்டத்தினை தமது இஷ்டத்திற்கு கையாள முடியாது என்ற தீர்மானத்துடன் இருந்த இந்திய ஆளும் வர்க்கம், தமது விசுவாசிகளை இனம்கண்டு அவர்களுக்கு பயிற்சிக்கான ஏற்பாடுகளைச் செய்தது. இவ்விடத்தில், ஒரு விடயத்தினைக் கவனத்திற் கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் இந்தியா விடுதலைப் புலிகளுக்கு பயிற்சியினை வழங்க முன்வரவில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பு சொந்தப் பலத்துடன் வளரக்கூடிய தகைமைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதனை, இந்தியத் தரப்பு ஆரம்பத்திலேயே இனங்கண்டு கொண்டதே இதற்குக் காரணம் எனலாம். இருந்தபோதும் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திர நகர்வாலும், எந்த இயக்கத்தினையும் கையாளக்கூடிய செல்வாக்கினைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்ற இந்தியாவின் நோக்கத்தினாலும் இந்தியா விடுதலைப் புலிகளுக்கும் பயிற்சியளிக்க முன்வந்தது.

இந்தியா பயிற்சிக்கான வசதிகளைச் செய்து கொடுத்ததும் இயக்கங்கள் வீங்கத் தொடங்கின. தமது சக்திக்கு மேற்பட்ட தொகையில் இளைஞர்களை அவை சேர்த்துக் கொண்டன. அக்காலகட்டத்தில் போராட்டத்தின் பரிமாணத்தினைப் பலரும் புரிந்து கொள்ளவில்லை. போராட்டத்துடன் தம்மை இணைத்துக் கொள்ள முன்வந்த ஏராளமான இளைஞர்கள் போராட்டத்தினை குறுகிய காலத்தினுள் முடிந்து விடலாம் என நினைத்திருந்தனர். இரண்டு வருடத்திற்குள் ஈழத்தை எடுத்துவிட்டு பின்பு படிப்போம் எனக்கூறிப் புறப்பட்டவர்களும் இருந்தார்கள். பாடசாலையில் ஒரு வகுப்பு மாணவர்கள் அனைவருமே போராட்டத்துடன் தம்மை இணைத்துக்கொண்ட நிகழ்வும் இடம் பெற்றது.

அன்று இளைஞர்களிடம் இருந்த உணர்வலைகள், இயக்கங்களைப் பகுத்துப் பார்க்கும் நிலைமைக்கு இடம்கொடுக்கவில்லை. தொடர்பு கிடைத்த இயக்கங்களுடன் சேர்ந்து பயிற்சிக்குப் போகும் நிலைமையே இருந்தது. ஒரு இயக்கத்துடன் தொடர்பிருந்தாலும் அவ்வியக்கம் உடனடியாகப் பயிற்சிக்கு அழைத்துச் செல்லாவிடின் அழைத்துச் செல்லத் தயாராகவிருந்த இயக்கத்துடன் பயிற்சிக்கெனப் புறப்படும் வேகமே அப்போது இருந்தது. பல இளைஞர்கள் இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பயிற்சி வழங்கப்படாமலேயே வைத்திருக்கப்பட்டனர்.

இத்தகைய ஒரு சூழலில் விடுதலைப் புலிகள் இயக்கம் நிதானமாகச் செயற்பட்டது. போராட்டத்தோடு தம்மை இணைத்துக் கொள்ள முன்வந்த அனைவரையும் விடுதலைப் புலிகள் உடனடியாகப் பயிற்சிக்கு அனுப்பவில்லை. அவர்களைச் சிறிது காலம் உதவியாளர்களாகச் செயற்பட வைத்தது. அவர்களை இனங்கண்டே பயிற்சிக்கு அனுப்பியது. இதனால், விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் வீக்கச் சூழலைக் கட்டுப்பாட்டினுள் வைத்துக் கொள்ள முடிந்தது. இயக்கத்தினையும் கட்டுக்கோப்பாக வைத்திருக்க முடிந்தது.

இந்தியா எமது போராட்டத்தில் ஏன் தலையிடுகின்றது என்பது தொடர்பான தெளிவான பார்வை, அப்போது மிகச் சிலரிடமே இருந்தது. இந்தியா தமிழீழத்தினை அங்கீகரித்தமையினால் தான், எமக்குப் பயிற்சி தருகின்றது எனக் கூறிய இயக்க முக்கியஸ்தர்களே இருந்தனர். சில இயக்கத் தலைமைகள் இந்தியா தொடர்பான தவறான கணிப்பைக் கொண்டிருந்தன. இயக்க மட்டத்தில் மட்டுமன்றி, மக்கள் மத்தியிலும் இந்தியா தொடர்பான மயக்கம் இருந்தது. இந்தியா அன்னை, இந்திய மானை நம்பிய சீதைகளாகவே எமது மக்கள் இருந்தனர்.

அன்றைய சூழலில் இயக்கங்களும் மிக இராஜதந்திரமாக நடக்கவேண்டிய நிலை. இந்தியாவின் அங்கீகாரத்தினையும் உதவியினையும் போராட்டத்திற்குப் பெற்று, தமிழீழ மக்களின் நலனை இலக்காகக் கொண்டு போராட்டத்தினை முன்னெடுக்க வேண்டும் என்ற நோக்குடன் இருந்த விடுதலைப் புலிகள் மிகுந்த அழுத்தங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. விடுதலைப் புலிகளை விட, தமது விசுவாசிகளைத் தலைமை இயக்கமாக்க இந்திய உளவுத்துறை மேற்கொண்ட சதிகளை எதிர்த்து முறியடிக்க வேண்டிய தேவை விடுதலைப் புலிகளுக்கு இருந்தது.

இந்தியாவில் இருந்து கொண்டே, இந்திய உளவுத்துறையினை ஏமாற்றி, விடுதலைப் புலிகள் தம்மை வளர்த்துக் கொண்டனர் என்று 'தராகி' ஒரு தடவை குறிப்பிட்டிருந்தமை இங்கு நினைவு கூரத்தக்கது. இந்தியாவிடம் தங்கி நிற்கும் இயக்கமாக இருக்காமல் சொந்தப் பலத்தில் நிற்கும் ஒரு அமைப்பாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த விடுதலைப் புலிகளின் தலைமை அதில் வெற்றியும் கண்டது. இதனால்தான் இந்திய அழுத்தங்களின் மத்தியிலும் விடுதலைப் புலிகளினால் தாக்குப் பிடிக்க முடிந்தது.

1987 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ம் திகதி கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் எமது போராட்டத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டினை அப்பட்டமாக அனைவருக்கும் வெளிப்படுத்தியது. ஒரு அரைகுறைத் தீர்வுடன் போராட்டத்தினை முடிவுக்குக் கொண்டு வரும் நடவடிக்கையில் இந்தியா தன்னைப் பங்காளியாக்கிக் கொண்டது. ஒப்பந்தத்தின் பிரகாரம் ஆயுத ஒப்படைப்பினை செய்ய வேண்டிய நிலை இயக்கங்களுக்கு ஏற்பட்டது. இயக்கங்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான விபரங்கள், மற்றும் தமது உளவுத்துறை மூலம் திரட்டிய தரவுகள் மூலமாக இயக்கங்களிடம் இருக்கும் ஆயுத எண்ணிக்கை தொடர்பான கணிப்பு இந்தியத் தரப்பிடமிருந்தது. ஆனால், விடுதலைப் புலிகளிடம் இருக்கக் கூடிய ஆயுத எண்ணிக்கை தொடர்பாக இந்தியாவிடம் சரியான கணிப்பு இருக்கவில்லை. இவ் ஆயுத ஒப்படைப்பு நிகழ்ந்தபோது விடுதலைப் போராளியும் பத்திரிகையாளருமான 'கரும்பறவை' இந்தியாவிடம் முழுமையாகவே தங்கிநின்ற இயக்கங்கள் தொடர்பாக 'கொடுத்தவனே பறித்துக் கொண்டாண்டி'


தொடர்ச்சி 14ம் பக்கம் ....


போக்குவரத்து வசதிகள்

லண்டனில் 24-7-93 சனிக்கிழமை இடம் பெற உள்ள ஊர்வலத்திற்கு செல்வதற்கு வசதியாக அவ்வப்பகுதி பொதுஸ்தாபனங்களாலும் மக்களாலும் பின்வரும் இடங்களில் பஸ் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

புறப்படும் நேரம்

மு.ப. 11.30




மேலதிக விபரங்களுக்கு:-
081-503 4294




Printed by Observer Group Newspapers